பொது விநியோகத்திற்கென விடுவிக்கப்பட்டது. மாதம் ஒன்றுக்கு பொதுவிநியோகத்திற்கு 1,20,000 டன்கள் அரிசியும் சத்துணவு திட்டத்திற்கு சுமார் 20,000 டன்கள் அரிசியும் தேவைப் பட்டன. பொதுவிநியோகத்தில் மாதம் ஒன்றுக்கு 30,000 டன்கள் புழுங்கல் அரிசி மட்டுமே விநியோகிக்க முடிந்தது. பொதுவிநியோகத்திற்கு அரிசி போதுமான அளவில் கையிருப் பில் இல்லாத நிலையில் மத்திய தொகுப்பிலிருந்து அக்டோபர் மாதம் 65,000 டன்கள் அரிசியும், நவம்பரில் 80,000 டன்கள் அரிசியும், டிசம்பரில் 80,000 டன்கள் அரிசியும் 1989 ஜனவரியில் 1,05,000 டன்கள் அரிசியும் பெறப்பட்டது. இவை முழுவதும் பச்சரிசியாகவே கொடுக்கப்பட்டது. மேலும், வெளிச் சந்தையில் வாங்கிய 1,78,175 டன்களும் பச்சரிசியாகவே பெறப்பட்டது. மிகவும் நெருக்கடியான காலக்கட்டங்களில் பொதுமக்களுக்கு அரிசி விநியோகிக்க வேண்டும் என்ற காரணத்தால் கையிருப்பில் உள்ள அரிசி எல்லா மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. சுமார் 25 விழுக்காடே புழுங்கல் அரிசியாக கொடுக்க வேண்டிய நிலையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மக்கள் புழுங்கல் அரிசியையே அதிகமாக விரும்பிய காரணத்தால் கீழ்க்கண்ட வாறு அரிசி விநியோகிக்கப்பட்டது :—

	புழுங்கல் அரிசி	பச்சரிசி
அக்டோபர் 1988	1,355 டன்கள்	2,338 டன்கள்
நவம்பர் 1988	1,846 டன்கள்	3,047 டன்கள்
டிசம்பர் 1988	2,023 டன்கள்	3,292 டன்கள்
ஜனவரி 1989	2,017 டன்கள்	3,809 டன்கள்

தற்பொழுது சம்பா பருவத்தில் மாநிலத்திலேயே நெல் கொள் முதல் செய்யப்படுவதாலும், மத்திய தொகுப்பிலிருந்து 40,000 டன்களே அரிசி ஒதுக்கீடு செய்யப்படுவதாலும் இனிவரும் காலத்தில் அதிக புழுங்கல் அரிசியும், குறைவான பச்சரிசியும் கொடுக்க இயலும். தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் 1,290 டன்கள் புழுங்கல் அரிசியும், 8,500 டன்கள் பச்சரிசியும் உள்ளது. இம்மா வட்டத்தின் மாத அரிசி தேவை 5,440 டன்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த ஆண்டு குடும்ப அட்டைகள் புதுப்பித்தலுக்கு முன்பு வழங்கப்பட்ட அட்டை களின் எண்ணிக்கை 3,14,954 ஆகும். அதன் பிறகு விநியோகம்

1989 பிப்ரவரி 17] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

செய்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 3,42,502 ஆகும், அதாவது சுமார் 9 விழுக்காடு கூடுதல் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியாளர் குறிப்பிட்ட தாலுகாக்களில் குடும்ப அட்டைகள் வழங்கப் படாமல் இருந்தால், ஆராய்ந்து ஆய்வு நடத்தி புது அட்டைகள் வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

சென்னை பூங்கா நகர் தொகுதி சென்னை ஜார்ஜ் டவன் உணவு வழங்கல் மண்டலத்தில் உள்ளது. இம்மண்டலத்தில் கடந்த ஆண்டு குடும்ப அட்டைகள் புதுப்பித்தலுக்கு முன்பு வழங்கப்பட்ட அட்டைகளின் எண்ணிக்கை 55,031 ஆகும். அதன் பிறகு விநியோகம் செய்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 58,308 ஆகும். அதாவது சுமார் 6 விழுக்காடு கூடுதல் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. புதிய குடும்ப அட்டைகள் கேட்டு பெறப் பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் தீவிரமாக பரிசீலிக்கப்பட்டு புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. புதிய குடும்ப அட்டைகள் கேட்டு விண்ணப்பங்கள் எவையேனும் பெறப் பட்டால் அவற்றைப் பரிசீலித்து பின் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தொடர்புடைய உறுப் பினர்கள் மூவரும் ஆளுக்கு ஒரு வினா மட்டும் எழுப்பலாம்.

திரு. அ. இரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பூங்கா நகர் தொகுதியில் ரேஷன் கார்டுகள் கேட்டு, ஏற்கனவே மனுக்கள் பல கொடுத்திருந்தும் கூட இன்னும் அவைகள் பரிசீலனை செய்யப்படாத நிலையில் இருக்கின்றன. ஏழை எளிய மக்கள் பயன்படுத்துகின்ற விதத்திலே, பூங்கா நகர் தொகுதியில் இருக்கும் மக்களுடைய மனுக்களைப் பரிசீலனை செய்து உடனடியாக ரேஷன் கார்டுகளை வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் இரகுமான்கான் அவர்களுடைய தொகுதியில் ஏற்கனவே வழங்கப்பட்ட ரேஷன் கார்டுகளைவிட இப்பொழுது கூடுதலாக 6 சதவிகிதம் அட்டைகள் வழங்கப்பட் டிருக்கின்றன. யாருக்காவது ரேஷன் கார்டு கிடைக்கவில்லை என்ற புகாரோ அல்லது விண்ணப்பமோ உரிய இலாக்காவிற்கு அனுப்பி வைக்கப்பட்டால் இலாக்கா அதைப்பற்றி பரிசீலிக்கும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் தொடர்புடையவர்கள் மட்டும் தான் பேசலாம் என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது தொடர்பாக, தொடர்புடைய உறுப்பினர்கள் மற்றொரு வினா கேட்கலாம்.

திரு. செ. நூர்முகமது: தலைவர் அவர்களே, கல்குளம், விளவங்கோடு வட்டங்களில் ஏற்கனவே ரேஷன் கார்டுகள் வழங்கப்படாமல் நிலுவையில் இருக்கின்ற மனுக்கள் மீது ஒரு குறிப்பிட்ட காலவரம்பு குறிப்பிட்டு நடவடிக்கை எடுக்குமாறு அரசு உத்தரவிடுமா என்று வினவ விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, அந்தத் தொகுதிகளில் இப்போது புதிதாக 9 சதவிகிதம் அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மேலும் அட்டைகள் தேவைப்படுகின்றவர்கள் இலாக்காவிற்கு விண்ணப்பித்தால் இலாக்கா பரிசீலிக்கும். ஆனால், அதே நேரத்தில் அரசிற்கு இருக்கின்ற சங்கடம் என்னவென்றால், நாட்டிலே ஏறக்குறைய 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போலி ரேஷன் கார்டுகள் இதுவரையிலும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே கார்டு வைத்திருக்கின்றவர்கள் மறுபடியும் விண்ணப்பித்து அதனாலே ஒரு குழப்பம் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தொடர்பாக வேறு யாரும் வினா எழுப்பமுடியாது என்பது அவை மரபு என்பதை அருள்கூர்ந்து உணர வேண்டும். (குறுக்கீடு). இதில் எந்த ஒழுங்குப் பிரச்சினையும் வராது.

1. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(இ) பிரதமரின் சென்னை வருகையின்போது இடிக்கப்பட்ட குடிசைகள் விவரம்.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் 14 ஆம் தேதி நடந்த ஒரு விவாதத்தின் போது எங்களுடைய கட்சியினுடைய மாண்புமிகு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் தொடர்புடைய வர்கள் மட்டும் தான் பேசலாம் என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்களுக்கு நான் தெரிவித் துக்கொள்ள விரும்புகிறேன். இது தொடர்பாக, தொடர் புடைய உறுப்பினர்கள் மற்றொரு வினா கேட்கலாம்.

திரு. செ. நூர்முகமது : தலைவர் அவர்களே, கல்குளம், விளவங்கோடு வட்டங்களில் ஏற்கனவே ரேஷன் கார்டுகள் வழங் கப்படாமல் நிலுவையில் இருக்கின்ற மனுக்கள் மீது ஒரு குறிப் பிட்ட காலவரம்பு குறிப்பிட்டு நடவடிக்கை எடுக்குமாறு அரசு உத்தரவிடுமா என்று வினவ விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர் களே, அந்தத் தொகுதிகளில் இப்போது புதிதாக 9 சதவிகிதம் அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மேலும் அட்டைகள் தேவைப்படுகின்றவர்கள் இலாக்காவிற்கு விண்ணப்பித்தால் இலாக்கா பரிசீலிக்கும். ஆனால், அதே நேரத்தில் அரசிற்கு இருக்கின்ற சங்கடம் என்னவென்றால், நாட்டிலே ஏறக்குறைய 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போலி ரேஷன் கார்டுகள் இதுவரை யிலும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே கார்டு வைத்தி ருக்கின்றவர்கள் மறுபடியும் விண்ணப்பித்து அதனாலே ஒரு குழப்பம் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர்பாக வேறு யாரும் வினா எழுப்பமுடியாது என்பது அவை மரபு என்பதை அருள்கூர்ந்து உணர வேண்டும். (குறுக்கீடு). இதில் எந்த ஒழுங்குப் பிரச்சினையும் வராது.

1. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(இ) பிரதமரின் சென்னை வருகையின்போது இடிக்கப்பட்ட குடிசைகள் விவரம்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் 14 ஆம் தேதி நடந்த ஒரு விவாதத்தின் போது எங்களுடைய கட்சியினுடைய மாண்புமிகு

உறுப்பினர் திரு. கோ. வீரையன் அவர்கள் இந்திய நாட்டினுடைய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் சென்னை வருகை தந்தபோது, குடிசைகள் இடிக்கப்பட்டது சம்பந்தமாக சில விவரங்களைச் சொன்னார்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தொடர்பாக ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் முழுமையாகப் பதில் சொல்வதாக இந்த அவைக்குத் தெரிவித்திருக்கிறார்கள். பதிலுரை வரப் போகிறது. எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டுகிறேன்.

3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

*திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஆளுநர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தின்மீது இந்திய தேசியக் காங்கிரசினுடைய சார்பில் சில கருத்துக்களைக் கூறுவதற்கு நீங்கள் அளித்த அனுமதிக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் தேர்தல் நடந்து முடிந்து, தமிழை அகத்தில் கொண்டவர்கள் வாக்களித்து, தமிழை அகத்தில் கொண்ட நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அமைச்சரவை அமைத்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த ஆட்சியில் என்னென்ன நடக்கப் போகிறது என்பதனை முழுமையாகச் சொல்லவில்லையென்றாலும், கோடிட்டுக் காட்டியிருக்கின்றார்கள். சில இடங்களிலே அவை கோடுகளாகத் தெரிகின்றன. சில இடங்களிலே அந்த அளவிற்குக் கோடுகளாகக் கூட இல்லாமல் சிறு புள்ளிகளாகத் தெரிகின்றன. சில இடங்களில் அந்தப் புள்ளிகளும் இல்லாமல் இந்த உரை அமைந்திருப்பது போலவும் தோன்றுகிறது.

இங்கே நமது ஆளுநர் உரையில், 8-வது ஷெடியூலிலே இருந்து கொண்டிருக்கின்ற 15 மொழிகளும் ஆட்சி மொழியாக வேண்டும் என்கின்ற ஒரு குறிக்கோளை நோக்கி இந்த அரசு சென்று கொண்டு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மகிழ்ச்சிக்குரிய செய்திதான். இந்தப் பெருநாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்கள் பேசுகின்ற மொழிகளில் தேசிய மொழி என்று சொல்கின்ற அந்தஸ்து பெற்ற மொழிகள் எல்லாம் ஆட்சி மொழியாவது என்பது மகிழ்ச்சிக்குரியதுதான். அது சாத்தியமாகின்றபோது நாம் பேருவகை கொள்கின்றவர்களாக இருப்போம்.

1989 பிப்ரவரி 17] [திரு. கே. ஆர். சுந்தரம்]

உறுப்பினர் திரு. கோ. வீரையன் அவர்கள் இந்திய நாட்டினுடைய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் சென்னை வருகை தந்தபோது, குடிசைகள் இடிக்கப்பட்டது சம்பந்தமாக சில விவரங்களைச் சொன்னார்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தொடர்பாக ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் முழுமையாகப் பதில் சொல்வதாக இந்த அவைக்குத் தெரிவித்திருக்கிறார்கள். பதிலுரை வரப் போகிறது. எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டுகிறேன்.

3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

*திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஆளுநர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தின்மீது இந்திய தேசியக் காங்கிரசினுடைய சார்பில் சில கருத்துக்களைக் கூறுவதற்கு நீங்கள் அளித்த அனுமதிக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் தேர்தல் நடந்து முடிந்து, தமிழை அகத்தில் கொண்டவர்கள் வாக்களித்து, தமிழை அகத்தில் கொண்ட நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அமைச்சரவை அமைத்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த ஆட்சியில் என்னென்ன நடக்கப் போகிறது என்பதனை முழுமையாகச் சொல்லவில்லையென்றாலும், கோடிட்டுக் காட்டியிருக்கின்றார்கள். சில இடங்களிலே அவை கோடுகளாகத் தெரிகின்றன. சில இடங்களிலே அந்த அளவிற்குக் கோடுகளாகக் கூட இல்லாமல் சிறு புள்ளிகளாகத் தெரிகின்றன. சில இடங்களில் அந்தப் புள்ளிகளும் இல்லாமல் இந்த உரை அமைந்திருப்பது போலவும் தோன்றுகிறது.

இங்கே நமது ஆளுநர் உரையில், 8-வது ஷெடியூலிலே இருந்து கொண்டிருக்கின்ற 15 மொழிகளும் ஆட்சி மொழியாக வேண்டும் என்கின்ற ஒரு குறிக்கோளை நோக்கி இந்த அரசு சென்று கொண்டு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மகிழ்ச்சிக்குரிய செய்திதான். இந்தப் பெருநாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்கள் பேசுகின்ற மொழிகளில் தேசிய மொழி என்று சொல்கின்ற அந்தஸ்து பெற்ற மொழிகள் எல்லாம் ஆட்சி மொழியாவது என்பது மகிழ்ச்சிக்குரியதுதான். அது சாத்தியமாகின்றபோது நாம் பெருவகை கொள்கின்றவர்களாக இருப்போம்.

அதுவரை இங்கே தமிழிற்கு மிக முக்கியத்துவம் கொடுத்து, தமிழே ஆட்சிமொழி என்று சொல்லி அதன் வழி இந்த அரசாங்கம் நடந்து கொண்டிருப்பதால் நாம் எல்லோரும் இந்த அரசிற்கு தமிழுக்கு வாழ்வு அளிப்பது மட்டுமல்ல; தமிழை வளர்ப்பதோடு, தமிழால் வளர்வதற்குரிய சூழ்நிலையும் உருவாக வேண்டும் என்று சொல்லிக்கொள்ள வேண்டும் என்று கருது கிறேன்.

அண்மையிலே ஒரு பேரறிஞர் சுட்டிக்காட்டியதைப் போலே, தமிழகத்தில் தமிழையே படிக்காமல் ஒருவர் பட்டதாரி ஆகி வெளியேறி விடலாம் என்று சொல்லுகின்ற சூழ்நிலை இருக் கிறது. வெளி மாநிலத்தவர்கள் கூட பெரிய அதிகாரிகளாக தமிழகத்திற்கு வருகின்றவர்கள் தமிழ் கற்றுத் தான் தீர வேண்டும், அறிவு பெற்றுத்தான் தீரவேண்டும், அப்போதுதான் தம்மிடம் வருகின்றவர்களிடமிருந்து பெற்றுக்கொள்கின்ற மனுக் களுக்குத் தமது நெஞ்சத்தில் உற்ற எண்ணத்தை எடுத்துச் சொல்ல முடியும் என்று இருக்கின்ற இந்த நேரத்தில், தமிழகத் திலே வாழ்ந்து, வளர்ந்து, படித்து, முடித்துச் செல்கின்றவர்கள் தமிழைத் தொடாமல் போவது என்பது, படிக்காமல் போவது என்பது ஒவ்வாத ஒன்றுதான் என்பதனை அந்தப் பேரறிஞர் சொல்வதற்கு நானும் ஒப்புதல் அளிப்பதுபோலே மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் அதனைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த நிலை மாறுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

(முற்பகல் 9 10)

அதே நேரத்தில் பயிற்று மொழியாக தமிழ் இருக்கிற காரணத் தால்தான் "செந்தமிழே, உயிரே, நறுந்தேனே, செயலினை, மூச்சினை உனக்கு அளித்தேனே" என்று பாவேந்தர் சொன்ன அந்த பைந்தமிழ் வரிகளுக்கு ஏற்ப பிஞ்சு குழந்தைகளின் நெஞ்சத்திலே மற்ற மொழிகளைப் போட்டு குவித்து வைத்து அவர்களுக்கு மூச்சு திணற வைப்பதற்குப் பதிலாக நம்முடைய தாய் மொழியிலேயே இயல்பான மொழியிலேயே அவர்களுக்குப் பாடத்தைக் கற்றுக் கொடுக்கின்ற பயிற்று மொழி என்று சொல்லுகின்ற நிலை தாய் மொழிக்கு வருதல் வேண்டும். தாய் மொழிக்கு அந்த நிலை வருகிறபோது ஆங்கிலத்தைப் புறக் கணிப்பது என்பது இல்லை. ஆங்கிலத்தை ஒரு மொழிப் பாட மாக, இன்னும் ஆழமாகவும், தெளிவாகவும், இலக்கணச் சுத்த மாகவும் கற்றுக் கொடுப்பதற்குரிய சூழ்நிலைகளை உருவாக்க

வேண்டும். அது நகர்ப்புறங்களில் இருக்கின்ற அந்த குழந்தைகளுக்கு மட்டும் அல்லாது, சிற்றூர்களில் இருக்கின்ற குழந்தைகளுக்கும் அந்த வாய்ப்பு கிடைக்கின்ற வகையில் நமது கல்வித் திட்டத்தை மாற்றி அமைத்தல் வேண்டும். அதோடு இந்த 2 மொழிகளைப் படிப்பதோடு கூட வேற்று, மாற்று மொழிகளை நம் நாட்டு மொழிகளை, வெளிநாட்டு மொழிகளை எதைப் படிக்க வேண்டும் என்று விரும்பினாலும் அவைகளைக் கற்றுக் கொடுப்பதற்குரிய வாய்ப்பை நமது கல்விக்கூடங்களில் ஏற்படுத்திக் கொடுப்பது என்பது தேவையான ஒன்று என்று நான் கருதுகின்றேன்.

தமிழகத்திலே ஒரு காலத்திலே படித்து முடித்த மாணவர்கள் இந்தியா முழுவதும் வெற்றிக் கொடி நாட்டி எங்களுக்கு ஈடு இல்லை, இணை இல்லை என்று நெஞ்சை நிமிர்த்தி நின்ற காலம் போக, இப்போது அகில இந்தியத் தேர்வுகளிலே நாம் அலசி அலசிப் பார்த்தாலும் அகல கண் விழித்துப் பார்த்தாலும் அகப்படுகின்றவர்களின் பெயர் மிக அருகில்தான் இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, இந்த அரசினுடைய கடமை அல்லது பொறுப்பு இன்னும் அதிகமாகிறது மாணவர்களைப் பொறுத்தவரையில்.

மாநிலங்கள் அரசு, மத்திய அரசு ஆகியவைகளை ஒருமைப் படுத்துவது பற்றியும் ஒன்றுக்கொன்று உறுதுணையாக இருப்பது பற்றியும் இங்கே பேசப்பட்டிருக்கிறது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள், மாநில சுயாட்சி என்ற பதப்பிரயோகங்களோடு நமது அருமைக்குரிய ஆளுநர் இங்கே குறிப்பிட்டிருப்பதை சுட்டிக்காட்டித்தான் சொல்லுகின்றேன். அதிலே ஒன்றைச் சொல்லுதல் வேண்டும். பலமான மாநிலங்கள் இருக்கின்ற நேரத்தில்தான் பலமான மத்திய அரசும் இருக்க முடியும என்பதைச் சொல்லுவதைப் போல, பலமான மத்திய அரசு இருக்கின்ற நேரத்தில்தான் பலமான, வளமான, மாநிலங்களும் இருக்க முடியும். மாநிலங்கள் சிறிதும் கவலை இன்றி தன்னுடைய பொருளாதார மேம்பாட்டுக்குப் பாடுபட வேண்டும் என்று சொன்னால் இந்த மத்திய அரசு நம்மை எல்லா வகையிலும் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்று சொல்லுகின்ற ஒரு நல்ல நம்பிக்கை இருக்கின்ற அளவுக்கு அந்த மத்திய அரசு மீது நம்பிக்கை வைக்க வேண்டும். இங்கே சிலர் சொல்லுகின்ற

நேரத்தில் நம்பிக் கெட்டவர்கள் என்றெல்லாம் சில சொற்றொடர்களைப் பயன்படுத்தியதை நாம் எல்லோரும் கேட்டோம். தூய உள்ளத்தோடு முழு மனதோடு, மனதார நம்புகிறவர்கள் எப்போதும் கெடுவது இல்லை. 'நம்பினோர் கெடுவது இல்லை, இது நான்கு மறை தீர்ப்பு' என்பதைப் போல நம்பி, ஒருவருக்கொருவர் நம்பி கைக்கொடுத்து ஒத்துழைத்து வாழ்கின்ற ஒரு வாழ்க்கையினை இந்த நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு மனிதனும் கடைப்பிடிக்கின்ற வகையில் அரசுகளும் முன் உதாரணமாக திகழ வேண்டும் என்று நான் இங்கே பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்த செய்தியாக சொல்ல விரும்புவது, மேலவை வேண்டுமென்று சொல்லுகின்ற அந்த எண்ணத்தை வரவேற்பது ஆகும். மேலவை வேண்டும் என்பதனை இந்திய தேசிய காங்கிரஸ் தன்னுடைய தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது. மேலவையை நிரப்புகின்றவர்கள் பலருடைய சார்பாளர்களாக இருக்கலாம், இந்த சட்டப்பேரவையினுடைய சார்பாளர்களாக அங்கே செல்வார்கள்; உள்ளாட்சித் துறையின் சார்பாளர்களாக அங்கே செல்வார்கள், ஆசிரியர் பெருமக்களுடைய சார்பாளர்களாக அங்கே செல்வார்கள். அதேபோல் அறிவு முதிர்ந்து, ஆன்று அவிந்து அடங்கிய சான்றோர்களாக இருப்பவர்கள் மக்களைச் சென்று அணுகி அவர்களிடம் வாக்குகளைப் பெற முடியாத நிலையில், ஆனால் தகுதியிலே உயர்ந்தவர்களாக இருக்கின்றவர்களுடைய அறிவும், அனுபவமும் நமக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு இடம் அளிக்கின்ற ஒரு மேல் அவையாக அது இருந்தால்தான்; அந்த அவையினை அப்படி கொண்டு வந்து நடத்துவதிலே இந்திய தேசிய காங்கிரஸ் முழு ஒத்துழைப்பை கொடுப்பதற்கு தயாராக இருக்கிறது அந்த நல்ல அமைப்பு வரவேண்டும் என்றே நாங்கள் விரும்புகிறோம்.

ஆளுகின்ற பொறுப்புக்கு வந்து இருக்கின்றவர்கள் இந்திய தேசிய காங்கிரஸ் போன்றே சில நல்ல நடவடிக்கைகளை ஒரு காலத்திலே செய்தவர்கள். நான் ஒரு காலத்திலே செய்தவர்கள் என்று சொல்லுவதற்குக் காரணம், முன்னால் நடந்த ஒரு வரலாற்றுச் சம்பவத்தை நான் சுட்டிக்காட்டுவதற்காகத்தான்.

கைத்தறித் துணிகளை தன்னுடைய தோளில் போட்டு கூவி விற்றவர்கள் என்ற ஒரு பெரும் பெருமை அவர்களுக்கு உண்டு. 'பாடுபடும் தொழிலாளி நாள்தோறும் சாவோடு' போராடிக்

1989 பிப்ரவரி 17] [திரு. குமரி அனந்தன்]

கொண்டு இருக்கின்ற ஒரு நிலை கூடாது என்பதற்காக அதனுடைய வாழ்வுக்கு வளம் சேர்க்க வேண்டும் என்று சொல்லு கின்ற நோக்கம் கைத்தறி நெசவாளர்களுக்கு உதவ முன் வந்ததைப் போலவே ஒரு காலத்திலே காங்கிரஸ் பேரியக்கத்தி னுடைய தலைவர்கள், தொண்டர்கள் அத்தனை பேரும் கையாலே நூல் நூற்று, கையாலே நெய்த கதர்த் துணிகளை தோள்களிலே போட்டு, தலையிலும் சுமந்து ஊரெங்கும் கொண்டு சென்று விற்றார்கள் என்பதனையும், அப்படி விற்ற பெரு மக்களிலே, காங்கிரஸ் பேரியக்கத் தலைவர்களிலே ஒருவராக இருந்த தந்தை பெரியார் ஒருவர் என்பதனையும் உங்களுக்கு நான் சொல்லிக்காட்ட வேண்டியதில்லை ; உங்களுக்குத் தெரியும். அந்த அளவிற்கு கைவினைஞர்களைப் போற்றி, அவர்களுக்கு வாழ் வளிக்க வேண்டுமென்று திட்டமிட்டுக் கொண்டிருக்கின்ற அந்தச் சம்பவங்கள் இரண்டும் ஒத்துப்போகின்ற காரணத்தினாலே இங்கே நான் குறிப்பிட்டு காட்டினேன். அப்படிப்பட்ட வரலாற்றுச் சம்பவங்களை நிகழ்த்திக் காட்டிய பெருமக்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற நேரத்தில் கைத்தறி நெசவு பற்றி எதுவும் சொல்லாதிருப்பது, ஆளுகின்ற நிலையிலே அனைத் தையும் சொல்ல முடியாது என்பதனையும் நான் அறிவேன். ஆட்சி பொறுப்பெடுத்த சில நாட்களிலேயே அதனை இங்கே குறிப்பிட்டு விட முடியாது என்பதனையும் அறிவேன். ஆனால் லட்சக்கணக்கான மக்களுக்கு வாழ்வளித்துக் கொண்டிருக்கிற அந்தக் கைத்தறித் துணியைப் பற்றியோ, அந்த கைத்தறி நெசவாளர்களைப் பற்றியோ நிச்சயம் குறிப்பிட்டு இருக்க வேண்டும். குறிப்பிடுகின்ற அளவிற்கு அது முக்கியத்துவம் இல்லை என்று நினைத்து இருக்க மாட்டார்கள். ஆனால் அது முக்கியம் என்று கருதப்பட்டு இருக்க வேண்டுமே என்று சொல் கின்ற ஒரு ஆதங்கத்திலேதான் நான் இங்கே சொல்கிறேன். காரணம், நூல் விலை நாளுக்கு நாள் பல மடங்கு ஏறிக்கொண்டே போகிறது. காற்றாடியிலே பிடித்திருக்கிற நூலை விட்டால் அது மேலே மேலே போய்க்கொண்டிருப்பதைப் போலே, இது காற்றாடி நூலாக இல்லையென்றாலும், நூல் காற்றடித்து மேலே போகின்ற அளவிற்கு, விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. அதனைக் குறைப்பதற்குரிய வழிவகைகளைப் பார்க்க வேண்டும். சாதாரணமான ஒரு வேட்டியை வாங்கிக் கட்டுவதற்குக் கூட 42 ரூபாய், 40 ரூபாய் கொடுக்க வேண்டிய ஒரு நிலை இருக்கிறது.

[திரு. குமரி அனந்தன்] [1989 பிப்ரவரி 17

இங்கே நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன், இந்த நூலை விற்பனை செய்கின்றவர்கள், 'டீலர்ஸ்' என்ற பெயராலே இருக்கின்ற விற்பனையாளர்கள், அவர்களுக்குக் கிடைக்கின்ற கமிஷன் என்று சொல்லப்படுகின்ற அந்தப் பணம், கொஞ்சம் அதிகமாக இருக்கிறதோ, குறைவாக இருக்கிறதோ, நான் அதிலே தலையிட விரும்பவில்லை என்று சொன்னாலும், ஒரு ஆலோசனை கூறலாம் என்று கருதுகிறேன், நல்ல நோக்கத்தோடு. கூட்டுறவு நூற்பாலையிலேயிருந்து வருகின்ற நூலாக இருந்தாலும் சரி, மற்ற ஆலைகளிலேயிருந்து வாங்குகின்ற நூலாக இருந்தாலும் சரி, நியாய விலைக் கடைகளின் மூலமே அவைகளை விநியோகித்தால், இடையிலே ஒருவருக்கு பணம் போவது தடுக்கப்படும் அல்லவா? அவருக்குக் கிடைக்கின்ற அந்த கமிஷன் அளவாவது குறைக்கப்பட்டாலே கூட இந்த கைத்தறி நெசவாளர்களுக்கு குறைந்த விலையிலே நூல் கிடைக்கும் அல்லவா ? எனவே ஆலையிலிருந்து நூலை வாங்குகின்ற அந்தப் பொறுப்பை அரசாங்கம் எடுத்துக்கொண்டு, நியாய விலைக் கடைகளின் மூலம் கைத்தறி நெசவாளர்களுக்கு கொடுப்பதென்பது நல்லதா என்பதனை ஆராய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்த செய்தியாகச் சொல்வது, 'கோ-ஆப்டெக்ஸ்' என்று சொல்கின்ற ஒரு பெரும் நிறுவனம், பல நாடுகளிலும்கூட தன்னுடைய கிளைகளை நிறுவி நமது நாட்டினுடைய கைத்திறத்தை, சின்னச் சின்ன அந்தச் சித்திர வேலைப்பாடுகளோடு கூடிய, அந்த அருமையான துணிகளை விற்க வேண்டுமென்று சொல்கின்ற நோக்கத்தோடு இருக்கின்ற அந்தத் துணி விற்பனை நிலையம், வெறும் கைத்தறித் துணிகளை மட்டும் விற்பதாக இல்லாமல், இப்பொழுது மறைமுகமாகவோ அல்லது வேண்டுமென்றோ அல்லது ஒளிந்து கொண்டோ விசைத் தறித் துணிகளைக் கூட அதிலே புகுத்தி விடுகிறார்கள் என்று சொல்லுகின்ற புகார்கள் பரவலாக வந்து கொண்டிருக்கின்றன. அதனைத் தடுத்து நிறுத்திவிட வேண்டும். இன்னும் சொல்லப்போனால், கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கூட விசைத் தறியை நடத்துகின்ற அனுமதியை நாம் கொடுக்கின்றோம். விசைத் தறிக்குக் கொடுக்கின்ற அனுமதியை அரசு கொடுக்குமானால் அவர்கள் கைத்தறியிலே நாட்டத்தைக் குறைத்து விடுவார்களோ என்று

1989 பிப்ரவரி 17] [திரு. குமரி அனந்தன்]

சொல்லுகின்ற ஐயப்பாடும் எழுகிறது. எனவே இன்று இருந்து கொண்டிருக்கின்ற நெசவாளர்கள் சில தனியார்கள் கையிலே மாட்டி விழி பிதுங்கிக் கொண்டிருக்கிற நெசவாளர்கள் விடுவிக்கப் பட்டு கூட்டுறவுச் சங்கங்களிலே அவர்கள் அங்கங்களாக ஆக்கப் பட்டு அவர்களுக்கு நல்ல ஊதியம் கிடைக்கின்ற அளவுக்கு அரசாங்கம் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

பஞ்சையும், அந்தப் பஞ்சிலிருந்து பெறுகின்ற நூலையும், அந்த நூலை வைத்துக் கொண்டு நெய்கின்ற தொழிலில் ஈடுபடு கின்றவர்களுக்கு சிறுசிறு தும்பாக பஞ்சுகள் பறந்து சென்று மூச்சுக் குழாய்களை அடைக்கின்ற ஒரு நிலை இருக்கிறது. அவர்களுக்கு சுவாசப் பையிலே அடிக்கடி கோளாறுகள் ஏற்படு கின்றன. அப்படிப்பட்ட நோய் Professional hazards என்று சொல்வார்களே, தொழிலாலே வருகின்ற தொல்லைகள், அவைகளை நீக்குவதற்குரிய முயற்சிகளில் அரசாங்கம் இன்னும் முனைப்பாக இருத்தல் வேண்டும். அந்த முயற்சி இருப்பதைப் போல காட்டிக்கொள்ளப்படுகிறதே தவிர உண்மையிலேயே அந்த முயற்சி தீவிரமாக இல்லை. ஆகவே நடமாடும் ஆஸ்பத்திரி போன்றவைகளை வைத்து, அவர்களைப் பரிசோதனை செய்து நல்ல முறையிலே அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-20)

அடுத்து, மிகப்பெரிய தொழில் என்று சொல்லப்படுகின்ற விவசாயம். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று சொன்னால். கைத்தொழில் பற்றிச் சொன்னேன்; இப்பொழுது உழவைப் பற்றி சொல்கிறேன். அந்த உழவு மிக முக்கியமானது என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல. ஏனென்றால் உழவன் சேற்றிலே கால் வைக்கவில்லையென்றால், ஒருவரும் சோற்றிலே கை வைக்க முடியாது. எனவே அவன் சேற்றிலே கால் வைத்து நாம் சோற்றிலே கை வைக்கின்ற அளவிற்கு, உணவை உற்பத்தி செய்து தருகின்ற விவசாயி களுக்கு, உழவனுக்கு இன்று சில சலுகைகளை நாம் அறிவிக்க வேண்டுமென்று விரும்புகிறோம். அந்தச் சலுகைகளைப் பொறுத்தவரையிலே, கூட்டுறவுக் கடன்கள் ரத்து என்று

சொல்லப்பட்டு இருந்தன. ஆனால் இன்னும் அவைகள் ரத்தாக வில்லை. இன்னும் சொல்லப் போனால், சிலவிடங்களிலே கடன் வசூல் இப்பொழுது கெடுபிடியோடு நடப்பதாக நமது தோழர்கள் தகவலைத் தந்திருக்கின்றார்கள். அதை நான் இந்த அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மின்சாரக் கட்டணம், அந்தக் கட்டணத்தில் இருக்கிற பாக்கி, அவைகளை உடனே கட்டுகிறீர்களா இல்லையா என்று சொல்லுகின்ற மிரட்டல்களும் உருட்டல்களும் பல்வேறு பகுதிகளிலே நடைபெற்றுக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அது அரசாங்கத்தினுடைய கவனத்திற்கும் வந்திருக்கும் என்று கருதுகிறேன். இல்லையென்றால் என் சொற்களையே உங்களுடைய கவன ஈர்ப்பாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மிகவும் பணிவோடு வேண்டுகின்றேன்.

மிக முக்கிய செய்தியாக இருப்பது, இணைப்புகள் துண்டிக்கப்பட்ட இடங்களிலேயெல்லாம் விவசாயிகள் துன்பப் பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அந்த இணைப்புகளை உடனடியாகக் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்த செய்தியாக, இலவச மின்சாரம் என்பது, ஏழை எளிய விவசாயிகளுக்குக் கிடைத்து வருகின்ற ஒன்று. அதற்கு அடுத்தாற்போலே, ஒரு குதிரை சக்திக்கு 75 ரூபாய் என்ற வீதத்திலே நாம் பணம் வசூலித்துக் கொண்டிருக்கின்றோம். பல கிணறுகளிலே தண்ணீரே இல்லை. தண்ணீரைப் பார்த்துப் பல திங்கள் ஆன அந்தக் கிணறுகளிலே பொருத்தப்பட்டிருக்கின்ற அந்த இயந்திரங்களுக்குக்கூட, மோட்டார்களுக்குக் கூட, அந்தப் பம்புகள் இறைப்பான்களுக்குக் கூட நீங்கள் குதிரைச் சக்திக்கு 75 ரூபாய் வைத்துக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகின்ற பொழுது, அவனுக்கு விளைச்சலும் இல்லை, விளைச்சல் இல்லாத காரணத்தினாலே மன உளைச்சலோடு இருந்து கொண்டிருக்கின்றவனிடம் நீ இதனைக் கொடுத்துத் தான் ஆக வேண்டுமென்று சொல்லுகின்றபொழுது, ஏற்படுகின்ற துன்பத்தைப் பல்வேறு தடவைகளிலே நாங்கள் சுட்டிக்காட்டி இருக்கின்றோம். முந்தைய அரசுகளிடமும் சுட்டிக்காட்டி இருக்கின்

1989 பிப்ரவரி 17] [திரு. குமரி அனந்தன்]

றோம். இந்த அரசு அதனைச் செய்து முடிக்குமானால் மற்ற வர்கள் செய்யாததைச் செய்த சாதனை உங்களுக்கு வரும் என்று நான் உங்களை அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட கிணறுகளுக்கு மின்சாரக் கட்டணம் வசூலிப்பதை முற்றிலுமாக ரத்து செய்ய வேண்டும்.

இன்னும் ஒரு வேண்டுகோள் இருக்கிறது. முடிந்தால், விவசாயிகளிடையே வேறுபாடு பார்க்காமல், அத்தனை பேருக்குமே மின் கட்டணத்தை இலவசமாகக் கொடுத்து விடுவ தாக இருந்தால், உற்பத்தி மிக அதிகமாகப் பெருகும்; உற்சாகத் தோடு அவர்கள் நெல்லை விளைவித்துத் தருவார்கள். அப்படி விளைவித்துத் தருகின்ற நேரத்தில், உண்மையிலேயே தமிழகம் முழுவதும் நெற்களஞ்சியம் என்று சொல்லுகின்ற அளவிற்கு தஞ்சைக்கு இருக்கின்ற பெயர், வருகின்றவர்களுக்கெல்லாம் தஞ்சம் அளிக்கின்ற ஒரு பெரும்புகழைச் சேர்த்துக் கொண்டிருந்த இந்தத் தமிழகத்திற்குக் கிடைக்கின்ற அளவிற்கு நெல்லை உற்பத்தி செய்து குவித்து விடுவார்கள் நமது உழவர் பெருமக்கள். அந்த உழவர் பெருமக்களுக்கு, அந்தக் கூட்டுறவுக் கடன் முழு வதையும் ரத்து செய்ய வேண்டும். விவசாயிகள் கடன் துன்பத் திலே, அந்தப் பெரிய நுகத்தடியின்கீழே இருக்கின்றவர்களுக்கு விடுதலை கொடுக்கின்ற வகையிலே கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்று நாம் வேண்டுகின்றோம். அரசாங்கம் நிச்சய மாக அந்த நடவடிக்கையை எடுக்குமென்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அந்த நேரத்திலேயே அந்த விவசாயிகளுக்குத் துணை யாக ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு வேலை செய்து கொண்டி ருக்கின்ற அந்தத் தொழிலாளி இருக்கின்றானே, விவசாயத் தொழிலாளி, அந்தத் தொழிலாளிக்கு ஊதியத்தை அதிகம் கொடுக்க வேண்டும். ஊதியத்தை அதிகம் கொடுக்கின்ற நேரத் திலே, அதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் கொடுக்க வேண்டும்; நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் கொடுக்கப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். ஏனென்றால், அந்த ஊதியம் கொடுக்கப்படுகிறதா என்று பார்க்கின்ற நேரத்திலேதான் அவர்களுக்கும் போய்ச் சேரும். ஏழை எளியவர்கள், பாட்டாளிகள், அவர்களையெல் லாம் சரியான வகையிலே இந்தச் சமுதாயம் நடத்துகிறதா என்று பார்க்க வேண்டிய கடமை நமக்கிருக்கிறது என்ற காரணத் திற்காக இதைச் சுட்டிக்காட்டினேன்.

மின்சாரம் என்று சொல்கிறாயே, நமக்குப் போதுமான மின்சாரம் இல்லை என்பது உனக்குத் தெரியாதா என்றால், எனக்கும், நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரசிற்கும் அது தெரியும். அதனாலேதான், இரண்டாயிரம் கிலோவாட் தயாரிக்கின்ற 6,000 கோடி ரூபாயில் எழுப்பப்படுகின்ற அந்தக் கூடங்குளம் நமக்கு வேண்டுமென்று நாம் கேட்கின்றோம். மரியாதைக்குரிய மாண்புமிகு பாரதப் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள் கோர்ப்பசேவ் போன்ற பெருமக்களோடு பேசி முடிக்கப் பட்ட அருமையானதொரு திட்டத்தை நமக்குக் கொண்டு வந்தி ருக்கிறார்கள். தென் பகுதியிலே மின்சார உற்பத்தி மிகக் குறைவு என்பது உங்களுக்குத் தெரியும். சில நேரங்களிலே அங்கே எரிகின்ற விளக்குகளை—மின் விளக்குகளைப் பார்த்தால், அந்த மின் விளக்குகளிலே படிக்க முடியாது. அந்த மின் விளக்கு ஒன்றே ஒன்றுக்குத்தான் சில வேளைகளிலே பயன்படுகிறது. எங்கே, எப்படி என்று சொன்னால், அந்த மின் விளக்கைப் போட்டு நமது குத்து விளக்கு எங்கே இருக்கிறது என்று கண்டு பிடித்துக்கொள்ளலாம். (சிரிப்பு) பிறகு அந்தக் குத்து விளக்கைப் பொருத்தித்தான் படிக்க வேண்டும். அந்த அளவிற் குத்தான் மின்னல் பூச்சிகள்போலே, அவைகள் மின்னிக் கொண்டி ருக்கின்ற காட்சியினை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த இடத்திலே இந்தக் கூடங்குளம் வருகிறது. ஆனால், கூடங்குளம் வருகின்ற நேரத்தில் கூடாதது எதுவும் கூடவே வந்து விடக் கூடாது என்ற அச்சம்கூட நமக்கு வந்து கொண்டு தான் இருக்கிறது.

எப்படியும் அணுக் கதிரியக்க வீச்சுக்கள் போன்றவைகள் வந்தது என்று சொன்னால், அங்கேயிருக்கின்ற மக்களுக்கு ஆபத்து வருமே என்று சொல்லுகின்ற எண்ணம் நம்மைப் போன்ற அனைவருக்கும் இருப்பது நியாயம்தான், இருக்கத் தான் வேண்டும். ஆனால், காலாகாலத்திலே, நாளாவட்டத் திலே, பாதுகாப்புகளையெல்லாம் அதிகமாகச் செய்கின்ற அளவிற்கு விஞ்ஞானிகள் முன்னேறியிருக்கிறார்கள். இந்தக் கூடங்குளத்தைப் பொறுத்தவரையிலே, ஆபத்து வாராது என்று சொல்லுகின்ற எண்ணம் எல்லா விஞ்ஞானிகளுக்கும் இருக்கிறது. அடிக்கல் நாட்ட வந்த பாரதப் பிரதமர் அவர்கள்கூட, இப்படி ஒரு வேளை இருந்தால் என்ன செய்வது என்பதற்காக, மீண்டும் மீண்டும், ஆய்ந்து ஆய்ந்து, அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்க ளுக்கோ, தமிழக மக்களுக்கோ எந்தத் துன்பமும், அணு அளவும்

1989 பிப்ரவரி 17] [திரு. குமரி அனந்தன்]

வந்துவிடக் கூடாது என்பதற்காக இந்த அணு மின் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டுவதைக்கூட ஒத்தி வைத்துவிட்டு மீண்டும் அதனை ஆலோசித்தார்கள்.

மீண்டும் மீண்டும் ஆலோசித்துப் பார்த்த பிறகு அங்கிருந்து எந்தவிதமான துன்பமும் வருவதற்கு வழியில்லை; பக்கத்தில் இருக்கிற கடலை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கிற மக்களுக்கு ஏதாவது துன்பம் வருமா என்றால் அதுவும் இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கடலில் இருக்கும் ஒரு பாசித் துண்டோ, அந்தக் கடலிலிருக்கும் மீன் குஞ்சோ கூட பாதிக்காத அளவுக்கு அந்த அணுமின் நிலையம் பாதுகாப்பாக இருக்கிறது என்று சொல்லுகின்ற காரணத்திற்காகத்தான் 6,000 கோடி ரூபாய் செலவில் இப்படிப்பட்ட ஒரு பிரமாண்டமான திட்டத்தை அங்கே கொண்டு வருவதற்கு மத்திய அரசு மட்டும் உவந்து வந்திருக்கிறது. இந்த மாநில அரசு அதை ஏற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஏனென்றால் இதிலே அதிக அக்கறை காட்டுவதற்குக் காரணம் தமிழ் மக்களுடைய நல்வாழ்த்துக்களினாலே சென்ற தடவை இதே சட்ட மன்றத்தில் நான் இருந்திருக்கிறேன். இப்படிப்பட்ட இந்த கூடங்குளம் அணுமின் நிலையம் வேண்டுமென்று நான் பேசியிருக்கிறேன்.

டெல்லியிலே நமது முன்னாள் மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கிறபோது நானும் அங்கே போக நேர்ந்தால் அவரை சந்திக்கப் போகின்ற நேரத்திலே பக்கத்தில் இருக்கிற மின்துறை அமைச்சர் சொல்வார், "என்ன? கூடங்குளமா" என்று கேட்பார். அந்த அளவுக்கு கூடங்குளம் வரவேண்டுமென்று நான் விரும்புகிறவன். ஏனென்றால் அந்த சக்தி, மின் சக்தி, அந்தப் பகுதிக்கு தேவைப்படுகிறது என்ற காரணத்திற்காக. அது அங்கிருக்கிற விவசாயிகளுக்கு மட்டுமல்ல; தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல. மீனைப் பிடித்து, பதப்படுத்துவதற்கு cold storage என்று சொல்கிறார்களே, அந்தக் குளிர்ப்பதன அறைகள், குளிர்ப்பதன சாதனங்கள்— இவை எல்லாம் இயங்க வேண்டுமென்றால்கூட மின்சாரம் அங்கே தேவைப்படுகிறது.

[திரு. குமரி அனந்தன்] [1989 பிப்ரவரி 17

இருந்தபோதிலும் குமரி மாவட்டத்தில் இருக்கிற மக்களுக்கு நெஞ்சத்திலே இருக்கிற நெருடல் என்னவென்றால் பேச்சிப் பாறையிலிருந்து வருகின்ற தண்ணீர் எங்களுடைய பயிரை வளர்ப்பதற்குப் பதிலாக நேரடியாக அந்த அணுமின் நிலையத்திற்குப் போய்விடுமானால் நாங்கள் என்ன ஆவோம் என்று சொல்லி, இயல்பான ஒரு அச்சத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள்.

ஆனால் கொடுமுடியாறு, நம்பியாறு, ஆலந்தலையாறு, பொய்கையாறு போன்ற அணைத் திட்டங்கள் எல்லாம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுமானால் இந்த அச்சத்திற்கு வழியில்லாத அளவுக்கு தண்ணீர் மிச்சமாகவே இருக்கும். அந்த அளவுக்கு தண்ணீர் கிடைக்கும். ஆகையினாலே அந்தத் திட்டங்களை உடனடியாக நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். பச்சையாறு அணைத் திட்டத்துடன் கொடுமுடியாறு அணைக்கட்டுத் திட்டம், நம்பியாறு அணைக்கட்டுத் திட்டம், ஆலந்தலையாறு அணைக்கட்டுத் திட்டம், பொய்கையாறு அணைக்கட்டுத் திட்டம் ஆகியவற்றை நிறைவேற்ற வேண்டுமென்று கால்கடுக்க பாத யாத்திரை கூட செய்து விவசாயிகளிடம் கையெழுத்து வாங்கி முந்தைய அரசிடம் கொடுத்திருக்கிறேன்.

இன்றைய அரசிடம் அந்தச் செய்தியைச் சொல்வதற்குக் காரணம் இந்த அணைக்கட்டுகள் எல்லாம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காக. இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், 6,000 கோடி ரூபாய் செலவிலே நாம் செய்கின்ற காரணத்தினாலே மாநில அரசும் மத்திய அரசோடு சேர்ந்து ஆலோசிக்கலாமா என்ற எண்ணமும் எனக்கு உண்டு. எப்படி கல்பாக்கம் கடல் தண்ணீரைப் பயன்படுத்துகிறதோ அதைப் போலே, கூடங்குளம் கடல் தண்ணீரை பயன்படுத்தினால் என்ன? எப்படி தாராப்பூர் கடல் தண்ணீரைப் பயன்படுத்துகிறதோ அதைப்போலே கூடங்குளம் கடல் தண்ணீரைப் பயன்படுத்தினால் விவசாயத்திற்குப் பயன்படுத்துகின்ற தண்ணீரைத் தொடாமலே கூட கடல் தண்ணீரை சுத்திகரித்து அந்த அணுமின் உலைக்குப் பயன்படுத்தலாமா என்பதையும் பார்க்கிறேன்.

1989 பிப்ரவரி 17] [திரு. குமரி அனந்தன்]

இன்று காலையிலே கூட கல்பாக்கத்திலே தொடர்புகொண்டு கேட்ட நேரத்திலே ஆமாம் கடல் தண்ணீரைத்தான் நாங்கள் பயன்படுத்துகிறோம் என்று சொன்னார்கள். சில நேரங்களிலே 'ஜெல்லி ஃபிஷ்,' என்று சொல்லுகின்ற அந்த மீன்கள் கூட போய் தடுத்துவிடுகின்றன என்று சொல்கிறார்கள் அவைகளுக்கு எல்லாம் பாதுகாப்பு தேடுகின்ற அளவுக்கு இன்று முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இந்தத் துறையிலே இருக்கிறது என்ற காரணத்தினாலே கூடங்குளத்தைக் கொண்டு வருவதற்கு பாது காப்பான கூடங்குளத்தைக் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீண்டும் நான் சொல்கிறேன். அங்கே இருக்கிற கடல் பாசிக்கோ, மீன் குஞ்சுக்கோ, மனித இனத்திற்கோ எந்தவித மான பாதகமும் வராத அளவுக்கு பாதுகாப்போடு கூடிய கூடங் குளத்தைக் கொண்டுவருவதற்கு நாம் முயல வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, கூடங்குளம் பற்றிக் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் விரிவாகப் பேசியதால், பின்னாலே என்னுடைய பதில் உரையிலே இதுபற்றி விரிவாகப் பேச வாய்ப்பு இராது என்பதால் இடையிலே குறுக்கிட்டுச் சொல்ல விரும்புகிறேன். தொல்லைக்கு மன்னிக்கவும். கூடங்குளம் பற்றி நான் டெல்லிக்குச் சென்ற போது அங்கே விரிவாகப் பேசியிருக்கிறேன். கூடங்குளத்தால் ஆபத்து ஏற்படக் கூடும் என்ற பிரச்சாரம் பலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுவும் கட்சி சார்பற்ற முறையில்; அவரும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குக்கூட அந்த அச்சம் இருக்கிறது என்பதை மாண்புமிகு குமரி அனந்தன் அவர்கள் நன்றாக அறிவார்கள். எனவே, இதுபற்றி அங்கே உள்ள மத்திய அமைச்சர்களிடத்திலும் மற்றும் மேலிடத் தலைவர்களிடத்திலும் கூட நான் பேசியிருக்கிறேன். பாதுகாப்பான முறையில் கூடங் குளத்தை உருவாக்குவதற்கு முதலில் மக்களுடைய பதட்டத் தைப் போக்குகின்ற வகையில், பீதிக்கு ஆட்பட்டிருக்கிற மக்களுடைய அச்சத்தைப் போக்குகின்ற வகையில் நிபுணர்கள் கொண்ட கமிட்டி ஒன்றை அமைத்து, அதில் எந்தவிதமான ஆபத்தும் இல்லை என்று அவர்கள் அறிவதற்கேற்ற வாய்ப்புக் கூறுகளை எல்லாம் அவர்களுக்கு வழங்கி, அந்த அறிவிப்போடு

மிக்க பாதுகாப்போடு கூடங்குளத்தை அமைப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-30)

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கம், மிகுந்த ஊக்கம் அளிப்பதாக இருக்கிறது. எனவே தவறான கருத்துக்களின் அடிப்படையில் பீதி கிளப்புகிறவர்கள் தங்கள் பீதி முயற்சிகளைக் கைவிட்டு நிச்சயமாக இந்தக் கூடங்குளம் வருவதற்கு ஒத்துழைப்பை இந்த அரசாங்கத்திற்குக் கொடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

அடுத்ததாக நான் இங்கே சொல்ல விரும்புவது கூட்டுறவுச் சங்கம். கூட்டுறவு என்பது நாட்டுயர்வைக் குறிக்கும் என்றெல்லாம் நாம் ஒரு கையோடு இன்னொரு கையை இணைத்து, கைக்கு முக்கியத்துவம் கொடுத்து அதில் நாம் போட்டிருக்கிற விளம்பரத்தில் சொல்வோம். கை கொடுத்து உதவுகிற அந்தக் கூட்டுறவில் தேர்தல் என்பது மிகத் தேவை. அது ஒரு பயிற்சிக் கூடம் 'ஹோம் ஒர்க்' என்று சொல்கிற அளவுக்கு குழுக்களாக இருந்து பணியாற்றுகிற ஒன்று என்பதால் அது ஒரு பயிற்சி கொடுக்கிற இடமாக அமைந்து, இங்கே இருந்து மேலும், மேலும் பெரிய பொறுப்புக்களை எல்லாம் எடுத்து வருகிற அளவுக்கு ஒரு நாற்றங்காலாக இருப்பது கூட்டுறவுச் சங்கம். அது சரியான வகையிலே செயல்படாமல் இருக்கிறது என்பதை இந்த அரசு நன்கு அறியும். ஆதலாலே கூட்டுறவுச் சங்கத்திற்குத் தேர்தலை நடத்தி உற்சாகம் ஊட்டுகிற வகையில் மட்டுமல்லாமல், மக்களுக்குத் தொண்டு செய்கிற வகையில் ஒரு விறுவிறுப்பை ஏற்படுவதற்கு முடிவெடுத்திருப்பதை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நான் வரவேற்கிறேன்.

ஏழை எளிய விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களிலே வாங்கியிருக்கின்ற கடன்களை ரத்து செய்வோம் என்பதையும் நான் மனமாரப் பாராட்டுகிறேன். ஆனால் பாக்கி வைத்திருப்பவர்கள் யாருமே இந்தத் தேர்தலிலே பங்கு கொள்ள முடியாது என்று சொன்னார்கள். ஆனால் பாக்கி வைத்திருப்பவர்களே பெரும்பாலும் இருக்கிறார்கள். மிகப் பெரும்பாலும் இருக்கிறார்கள். எனவே சிறுபான்மையினரே கலந்துகொள்கிற ஒரு தேர்தலாக

1989 பிப்ரவரி 17] [திரு. குமரி அனந்தன்]

இது அமைந்துவிடுமோ என்று சொல்கிற அச்சம் இருப்பதால் மாண்புமிகு முதல்வர் அவர்கள், அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே பாக்கி வைத்திருப்பவர்களைப் பொறுத்தவரையில் ஏதாவது ஒரு பரிகாரம் தேடி, அதன் மூலம் அவர்கள் இந்தத் தேர்தலிலே பங்குகொள்கிற ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது, விரைவில் கூட்டுறவுச் சங்கங்களுக்கெல்லாம் தேர்தல் நடத்தப்படும் என்று. ஆளுநர் ஆட்சியில் கூட தேர்தல் அறிவிப்பு வந்து பின்னர் நிறுத்தப்பட்டது. எனவே எற்கெனவே இருந்த அரசாங்கம் போட்ட சட்ட திட்டங்களிலே சில மாற்றங்கள் செய்ய வேண்டி இருக்கிறது. அந்தச் சட்டதிட்டங்களை எல்லாம் மாற்றி விரைவில் இந்த அவையிலே அதற்கான திருத்தங்களைக் கொண்டு வந்து விரைவில் தேர்தல் நடத்தப்படும்.

அதே நேரத்தில் பாக்கி வைத்திருப்பவர்களைப் பற்றிச் சொன்னார்கள். இது நாங்கள் கொண்டுவந்த சட்டமல்ல. ஏற்கெனவே கூட்டுறவுச் சங்கம் உருவாக்கப்பட்ட நேரத்தில் என்னென்ன சட்டங்கள் இருந்தனவோ அவற்றின் அடிப்படையில் கடன் வைத்திருப்பவர்களைப் பற்றி இந்த அரசு கவனிக்கும்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் வைத்திருப்பவர்களைப் பற்றி அரசு கவனிக்கும் என்பதிலே, "உன்னை நான் கவனித்துக்கொள்கிறேன்" என்பது மாதிரி வந்துவிடக்கூடாது. (சிரிப்பு) எப்படியாவது கவனித்து, கருணையோடு கவனித்து, கனிவோடு கவனித்து, அவர்களுக்குப் பரிகாரம் கொடுத்து அவர்களும் இந்தத் தேர்தலிலே பங்குகொள்வதற்குரிய வழிவகைகளைச் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உறுதியாக உண்டு.

சத்துணவுத் திட்டத்தைப் பற்றிச் சொல்கிறபோது அது உள்ளாட்சித் துறைக்குக் கொடுக்கப்படுகிறது என்று சொல்லி இருக்கிறார்கள். நல்ல திட்டம். உள்ளாட்சிக்குக் கொடுப்பது என்பது நல்லதுதான். உள்ளாட்சிக்குக் கொடுக்கிற அதிகாரத்

தையும், நிதியாதாரத்தையும் நம்பி, அரசாங்கத்தினுடைய துணையோடு அந்தச் சத்துணவுக் கூடங்கள் நடைபெறுவது நல்லது தான். இதைத்தான் மாண்புமிகு பிரதமர் அவர்களும் அதிகாரப் பரவலுக்கு ஒரு சான்றாகக் கருதுவார்கள். ஆகவே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நான் இதை மனதாரப் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன்.

சத்துணவுக் கூடங்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் பேச ஆரம்பித்தால் நேரம் அதிகரிக்கும். நான் அடிக்கடி அவைத்தலைவரைப் பார்த்துக்கொண்டுதான் பேசுகிறேன். அதுமட்டுமல்ல. ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சுத்தமான சூழ்நிலையில் இந்தச் சத்துணவுக் கூடங்கள் பல இருப்பதில்லை. சுத்தமே சோறு போடும் என்று நித்தமும் சத்தமே போடுகிறோமே தவிர சுத்தத்தை அவ்வளவு கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை. ஈ மொய்த்துக் கிடக்கிற பண்டங்களின் மத்தியில் குழந்தைகள் உட்கார்ந்து இருக்கிற கோரத்தைப் பார்க்கிறபோது பாரதிதாசனின் 'இருண்ட வீடு' சில நேரங்களில் நினைவுக்கு வரும். அவைகளை (சிரிப்பு) மனதில் வைத்துக்கொண்டு சுற்றுப்புறச் சூழ்நிலையை சரியாக வைப்பதற்குரிய முயற்சியிலே அரசு ஈடுபட வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, கிராமப்புறங்களில் இருக்கின்ற குழந்தைகள் ஆயினும் சரி, வேறு பகுதிகளிலிருக்கின்ற குழந்தைகளாயினும் சரி இந்தச் சத்துணவுக் கூடத்திற்கு வருகிறபோது அதிலே போடப்படுகிற காய்கறிகளை எடுத்து அப்புறப்படுத்திவிட்டு வெறும் சோற்றை மட்டுமே சாப்பிடுவதை நான் பார்த்திருக்கிறேன். அந்தக் காய்கறியிலே என்னென்ன சத்துக்கள் இருக்கின்றன என்பதைச் சிறு, சிறு விளம்பரங்கள் மூலம், திரைப்படங்கள் மூலம் எடுத்துக் காட்டி, இவை வெளியே போடுவதற்குரியவை அல்ல, உள்ளே போடுவதற்குரியவைதான்; உள்ளே போட்டால்தான் வெளியே திடகாத்திரமாக நடக்க முடியும் என்பதை உணர்த்த வேண்டும். சிறு, சிறு திரைப்படங்களாகப் போட்டு 'விசுவல் எஜுகேஷன்" என்று சொல்லப்படுகின்ற 'காட்சிக் கல்வி' மூலம் விளம்பரப்படுத்த வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

1989 பிப்ரவரி 17] [திரு. குமரி அனந்தன்]

அப்படி அந்தக் காய்கறிகளின் முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்கிறபோது இந்தச் சத்துணவுக்கூடங்கள் செம்மையாக நடப்பதற்கு உதவியாக பெற்றோர்கள், ஊரிலே இருக்கிற நடுநிலை தவறாத சான்றோர்கள ஆகியோர் அடங்கிய ஒரு குழுவை அமைத்து அக்குழு மேற்பார்வையிடுமானால் சிறப்பாக நடக்கும். அப்படி சிறப்பாக நடப்பதற்கு மேலும் துணையாக காய்கறி தோட்டப் பண்ணைகளை மேலும் ஏற்படுத்தலாம். அத்தோடு இன்னொரு பண்ணையையும் இங்கே ஏற்படுத்துவது அவசியம் என்று கருதுகிறேன். என்னவென்றால் அங்கே முதல்வர் அவர்கள் சத்துணவு குழந்தைகளுக்கு உண்மையிலேயே சத்துணவு கொடுக்க வேண்டுமென்றால் ஒரு கலப்படமுமே செய்யமுடியாத ஒரு முட்டையையும் சேர்த்து நான் கொடுப்பேன் என்று சொன்னார்கள். அந்த முட்டையையும் உடனடியாகச் சேர்த்து கொடுப்பது நல்லது. சேர்த்துக் கொடுக்க வேண்டு மென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அப்படிக் கொடுப்பதற்குரிய ஒரு சூழ்நிலை வரும் என்று எண்ணுகிறேன். அப்படி என்று சொன்னால், ஒவ்வொரு ஒன்றியத்திலேயும் காய் கறிப் பண்ணைகள், கோழிப் பண்ணைகளை நாமே ஏற்படுத்தி அங்கே இருக்கின்ற இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வேலை வாய்ப்பைக் கொடுத்து அதன் மூலமாக உற்பத்தியைப் பெருக்கி ஒவ்வொரு ஒன்றியத்திற்குள்ளேயே நாம் உற்பத்தி செய்வதை நமது குழந்தைகள் உண்ணுகின்ற அளவுக்கு செய்யவேண்டும். தந்தை உழைத்து, தமையன் உழைத்து, பெற்றோர், உற்றார் எல்லாம் உழைத்து பெறுவதனை தங்களுடைய குழந்தைகள் உண்ணுகின்ற சூழ்நிலையை உருவாக்குவது என்பது வளமான சூழ்நிலையை உருவாக்கும் என்று நான் கருதுகின்ற காரணத் தினாலே அப்படி திட்டமிடுவது நல்லது என்று கருதுகிறேன்.

அந்தச் சத்துணவுக்கு என்று கொடுக்கப்படுகின்ற பணம் உள்ளாட்சிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற பணம் வேறு துறை களுக்கு மாற்றப்பட முடியாது என்று சொல்கின்றார்கள். மாற் றப்பட முடியுமானாலும்கூட மாற்றப்படக்கூடாது என்று சொல் கின்ற அளவுக்கு அந்தப் பணம் அந்தத் தலைப்பிலேயேதான் எடுக்கப்படவேண்டுமே தவிர வேறு எதற்கும் திசை திருப்பக் கூடாது என்று சொல்லுகின்ற உறுதியான நடவடிக்கைகளோடு உள்ளாட்சித்துறைக்கு அந்த அனுமதியைக் கொடுக்கலாம் என்று கருதுகிறேன்.

அடுத்தாற்போல் அங்கே வேலை செய்கின்றவர்களுக்கும், 2 லட்சம் பேர்களுக்கு மேற்பட்டவர்கள் "நிரந்தரம்" என்று ஒரு நல்ல சொல்லை எடுத்துச் சொல்லி, அவர்களுக்கு—பால்வாடியிலே இருந்து இந்த குழந்தைகள் உணவு அளிக்கின்ற அத்தனை பேர்களுககும் பால் வார்க்கின்றது போல ஒன்றை சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் அதிலே ஒன்று "பகுதி நேர நிரந்தரம்" என்று சொல்லுவதை கொஞ்சம் 'நிரந்தரப் பகுதி நேரம்' என்பதனை, அது பாலாக இருக்குமானால் அதனை 'நிரந்தரம் முழு நேரம் என்று சொல்கின்ற பால் பாயாசமாகக் கொடுக்க முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். அவர்களுக்கு கொஞ்சம் வேலைகளை அதிகமாகக் கொடுத்துக் கொள்ளலாம். இன்னும் கொஞ்சம் பணிகளை அவர்களுக்குக் கொடுத்துக் கூட நிரந்தர முழு நேர ஊழியர்களாக ஏற்றுக்கொள்வதன் மூலமாக வாழ்க்கையிலே உறுதியான வருமானம் வரும் என்று சொல்கின்ற நம்பிக்கை ஏற்படுவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

இன்னொன்று, இப்போதிருக்கின்ற ஊதியத்திலே அவர்களை நிரந்தரம் ஆக்குவது என்பது கொஞ்சம்கூட போதாது. ரூ. 30, ரூ. 70, ரூ. 175 என்று இருக்கின்ற நிலையை மாற்றி நல்ல ஊதியத்தைக் கொடுத்து அவர்கள் உற்சாகத்தோடு பணி புரிகின்ற அளவுக்கு இந்த ஊதியமே போதும், வேறு எதுவும் தேவையில்லை என்று சொல்கின்ற அளவுக்கு அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களாலே வித்திடப்பட்டு மதிய உணவுத் திட்டம் என்று சொல்லப்பட்டு இன்று சததுணவுத் திட்டம் என்று ஆல விருட்சமாக வளர்ந்து நிற்கின்ற அந்த பெரிய திட்டத்திற்கு தொடர்ந்து இந்த அரசாங்கம் உறுதுணையாக இருக்கிறது என்பதனை குறிப்பிட்டிருக்கின்றீர்கள். மத்திய அரசை நடத்திக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களும் இந்த சத்துணவுத் திட்டத்திலே அதிகமாக அக்கறை காட்டினார்கள். அது தொடர்ந்து செம்மையாக நடததப்படும் என்று சொன்னதையும் தேர்தல் அறிக்கையிலே நாங்கள் குறிப்பிட்டு இருக்கிறோம் என்பதையும் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

1989 பிப்ரவரி 17] [திரு. குமரி அனந்தன்]

சத்துணவுக்கு அடுத்தாற்போல் மது விலக்கு. எனக்கு அது இப்போது மனதிற்கு வருகிறது. மதுவிலக்கு என்று சொல்கிறபோது, சாராயக் கடைகளை மூட மாட்டோம் என்று சொல்லாமல் "சாராயக் கடைகளை மூடுவோம்" என்று சொன்னார்களே. பலர் எதிர்பார்த்தார்கள், அப்படி இருக்குமோ என்று. இல்லை. நாங்கள் சாராயக் கடைகளை மூட மாட்டோம் என்று அழுத்தமாக, ஆணித்தரமாக சொல்வதற்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். மன்னிக்கவேண்டும். 'மூடுவோம்' என்று சொன்னதிலே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சாராயக் கடைகளைத் திறக்கமாட்டோம் என்பது மேற்கோள்.

திரு. குமரி அனந்தன்: Slip of the tongue. எப்படியும் அது திறக்கமாட்டோம் என்பதுதான். மூடி திறக்க மாட்டோம் என்பதுதான். இல்லையா? பாட்டில் மூடியைத் திறக்க மாட்டோம். . .

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, திறக்கவே மாட்டோம் என்கிறீர்களா? மூடித் திறக்க மாட்டோம் என்கிறீர்களா?

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, "ஒரு தடவை மூடித் திறந்ததனாலே, மூடி திறக்க மாட்டோம்" என்று சொன்னேன். ஒரு தடவை மூடித் திறந்ததனாலே. (குறுக்கீடு)

ஆதலாலே இனித் திறக்க மாட்டோம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அழுத்தமாகச் சொன்னது குறித்து என் நா தவறி வந்த அந்த சொல்லுக்கு நீங்கள் பொறுத்தருள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மிக அழுத்தமாக அவர்கள் இங்கே சொன்னார்கள்.

(முற்பகல் 9-40)

திரு. என். கணபதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் மூடியை திறக்க மாட்டோம் என்றார். ஆனால் குடிப்பவர்களுக்கு மூடியை திறப்பது தான் வாடிக்கையாக இருக்கிறது. ஆகவே, அதை மாற்றிக் கொண்டால் சரியாக இருக்கும்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மூடியை திறக்க மாட்டோம் என்பதை பாட்டிலில் இருக்கிற மூடியை திறக்கமாட்டோம் என்கிற பொருளில் சொன்னார்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒரு தடவை முன்பு மூடி பிறகு திறந்தோம். பிறகு திறந்ததை மூடினோம். ஆகவே மூடியது மூடியதுதான். நாமக்கல் கவிஞர் சொன்னார், "விட்டது சனியன், விட்டது சனியன், விட்டது விட்டதடா." அந்த வகையில் இனியும் நாம் இருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மூன்றாவது பொருளாக கூட ஒன்றை எடுத்துக் கொள்ளலாம். ஒரு தடவை மூடியை திறந்து விட்டால், திறந்துவிட்டு மறுபடியும் மூடி வைக்க மாட்டோம். 'புல்' ஆக குளோஸ் பண்ணி விடுவோம் என்று கூடச் சொல்லலாம்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அதில் கொஞ்சம் கூட எனக்கு அனுபவம் கிடையாது. (சிரிப்பு)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அனுபவம் என்பது செய்வதில் மட்டும் வராது. அதுபற்றி நேற்றையதினம் திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர் கூடச் சொன்னார். படிப்பதிலும், கேட்பதிலும் கூட அனுபவம் வரும் என்று அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவ்வளவையும் பேரவைத் தலைவராக ஒரு "குடிமகனை" வைத்துக் கொண்டு பேசுவது அவ்வளவு பொருத்தமல்ல. (சிரிப்பு)

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தாங்கள் ஒரு "பெருங்குடிமகன்" அல்ல. (சிரிப்பு) அடுத்து, இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதை மிகுந்த உற்சாகத்தோடு வரவேற்கின்றேன். "சாராயக் கடைகள் மூடியது மூடியதுதான்" என்கின்ற வகையிலே அவர்கள் சொன்னார்கள். ஆனாலும் இன்றையதினம் கள்ளச் சாராயம் பரவலாக நாட்டிலே, வரப்பு ஓரத்திலே, கடைத் தெருவிலே இருந்துகொண்டுதான் இருக்கிறது. இதையும் அருள் கூர்ந்து கவனிக்க வேண்டும். எல்லா இடங்களிலும் பரவலாக இதனை விற்பனை செய்கின்ற நிலைமை இருக்கிறது. ஒரு

1989 பிப்ரவரி 17] [திரு. குமரி அனந்தன்]

காலத்திலே பாதை ஓரத்திலே நீர்மோர் கிடைப்பதுபோல இது இன்றையதினம் கிடைப்பதால் இதுகுறித்து அரசு தயவு செய்து கவனிக்க வேண்டும்.

அடுத்து, மதுவிலக்கு என்றால் எந்த மதுவும் நாட்டிலே உலவக் கூடாது. எம்மதுவையும் விலக்குகின்ற வகையிலே பிராந்தி, ஒயின் போன்றவைகளை விற்கின்ற கடைகளையும் நீங்கள் அனுமதிக்கக் கூடாது என்று உங்களை மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காவிரி நீர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் 1975 ஆம் ஆண்டு விட்ட இடத்திலிருந்து தொடருவோம், எனவே காவிரி தண்ணீர் வந்து சேரும், தஞ்சை வளம் அடையும், அந்த வகையில் இங்கே எந்தவிதமான துன்பமும் இருக்காது என்கின்ற நம்பிக்கையை அளிக்கின்ற வகையிலே ஆளுநர் உரையிலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். நடுவர் தீர்ப்புக்கு விடுவது சம்பந்தமாக சொல்லியிருப்பதைப் பொறுத்தவரையிலும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் பேச்சு வார்த்தை மூலமே இதில் வெற்றி பெற வேண்டுமென்று விரும்பு கின்றோம். ஒருவேளை அதில் வெற்றி பெற இயலவில்லை என்கிற நிலை வந்தால் மட்டுமே நடுவர் தீர்ப்புக்கு போக வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, பேச்சு வார்த்தை வெற்றி பெற வேண்டும் என்பதைச் சொல்லி, அதற்கு எங்கள் சார்பிலே வாழ்த்துதலையும் தெரிவித்துக் கொள்கிறோம். நல்நோக்கில் காவிரியில் தண்ணீர் வந்து தஞ்சை செழிக்க வேண்டும். அதன்மூலம் மற்ற இடங்களிலும் பஞ்சம் ஒழிக்கப் பட வேண்டும். ஆனாலும் இதுசம்பந்தமாக ஒன்றை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியாவிலுள்ள பெரு நதிகளை எல்லாம் இணைத்து, தேசிய மயமாக்க வேண்டுமென்ற திட்டத்தை மாநில அரசு மத்திய அரசிடம் வற்புறுத்தி இதற்கு தூண்டுகோலாக இருக்க வேண்டு மென்று நாங்கள் விரும்புகிறோம். ஒரு பக்கத்திலே வெள்ளப் பெருக்கின் காரணமாக தண்ணீர் அடித்து போகின்ற நிலைமை யும், இன்னொரு பக்கத்திலே தண்ணீர் இல்லாத காரணத்தால் பஞ்சம் ஏற்படுகிற நிலைமையும் இருக்கிறது. ஒரு பக்கம் வறட்சி நிவாரணம், பஞ்ச நிவாரணம் அளிக்கப்படுகிறது. இன்னொரு பக்கத்திலே வெள்ளத்தால் ஏற்பட்ட சேதத்திற்கு நஷ்டஈடு

கொடுக்கப்படும் நிலைமை இருக்கிறது. இந்நிலைமைகளை எல்லாம் போக்க, இந்தியாவிலே ஓடுகின்ற பெரு நதிகளை எல்லாம் இணைத்து, தேசியமயமாக்குகின்ற ஒரு பெரிய திட்டத்தை நிறைவேற்றுமாறு மத்திய அரசைத் தூண்டுகின்ற வகையில் மாநில அரசு தூண்டுகோலாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மூடிய பஞ்சாலைகள் திறக்கப்பட வேண்டும். அது குறித்து ஆளுநர் உரையிலே நல்ல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. நேற்றைய தினம் இதுகுறித்து பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் தற்போது அது எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியாது. அது சம்பந்தமாக எனது ஒரு சிறிய ஆலோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது ஏற்கெனவே சாதனைப் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறது. அதுபோல தொழிலாளர்களுக்கு அங்கு பங்கு இருக்கும் வகையில், அவர்களும் பங்கு பெறும் வகையில் அவர்களுக்கே தொழிலை உரிமையாக்கும் வகையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். தொழிலாளர்களுடைய உழைப்பே மூலதனமாக தொழிலில் இருக்கும் வகையில், பின்னால் அவர்களுடைய ஊதியத்திலேயிருந்து பிடித்தம் செய்யும் அளவில், ஒரு பங்கை அவர்களுடைய மூலதனமாக சேர்க்கும் விதத்திலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். தொழிலாளர்களையும் பங்குதாரர்களாக ஆக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக, வேலை செய்கிற ஆட்களே தொழிற்சாலையை நிர்வகிக்கின்ற நிலைமையை உருவாக்க வேண்டும்.

அடுத்து, மகாராஷ்டிராவில் இருக்கின்ற கமானி என்று சொல்கின்ற இரும்பு தொழிற்சாலை குறித்து அண்மையில் செய்யப்பட்டுள்ள முடிவு பற்றி இங்கே இருக்கின்ற தொழிற் சங்கங்களில் அனுபவப்பட்டவர்களுக்குத் தெரியும். மகாராஷ்டிராவிலே ஆயிரக் கணக்கானவர்கள் வேலை செய்து கொண்டிருக்கும் இரும்புத் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கு உரிமை ஆக்கப்பட்டிருக்கிறது, அதிலே பொறுப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. **Sick Industrial Companies (Special Provision) Act, Board for Industrial and Financial Reconstruction** இவைகள் இரண்டும் மத்திய அரசினுடைய தொடர்பு உடையனவாகவும், 'டிக்' 'டிட்கோ' இந்த இரண்டும் மாநில அரசினுடைய தொடர்பு உடையன

வாகவும் இருந்து கொண்டிருக்கின்ற நிதி நிறுவனங்கள் இந்த நிதி நிறுவனங்களின் மூலம் நிதியினைப் பெற்று அரசாங்கம் மத்திய அரசினுடைய துணையோடும் அவர்களுடைய ஆக்கப் பூர்வமான ஒத்துழைப்போடும் இந்த மில்களைத் திறந்தால், தொழிலாளர்களுக்கே ஆலைகளை எல்லாம், தொழிற்சாலை களை எல்லாம் உரிமையாக்கிய மிகப் பெரிய பெருமை நமக்குக் கிடைக்கும். இந்த அரசுக்குக் கிடைக்கும். அந்த முறையிலே தாங்கள் செயல்பட வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையின் 20-வது பத்தியிலே 1457 கோடி ரூபாய் அளவுக்கு திட்டமிட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டதை, இப்போது நிதிப் பற்றாக்குறை காரணத்தாலே கொஞ்சம் குறைக் கலாமா என்று — கொடுப்பதைக் குறைப்பது என்று நேற்று சொன்னார்கள் அல்லவா, அதைப்போல இந்த அளவுக்குப் போட முடியாது, கொஞ்சம் குறைக்க வேண்டி வரும் என்று சொல்லும் அளவுக்கு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் கனிவோடும், பணிவோடும் கேட்டுக்கொள்கிறேன், திட்டச் செலவை தயவு செய்து குறைக்க வேண்டும். அது வளத்தைச் சேர்ப்பது நமக்கு, வேலை வாய்ப்பை உண்டாக்குவது நமக்கு, செல்வத்தைச் செழிக்கச் செய்வது நமக்கு. ஆதலாலே 1457 கோடி ரூபாய்க்கும் வழிவகைகளைத் தேடவும், நிதி ஆதாரங்களைத் தேடவும், எந்த வகையிலாவது அந்தப் பணத்தைத் தேடவும் முயற்சி எடுக்க வேண்டும். இந்த நேரத்திலேதான் கலைஞர் அவர்கள் தன்னுடைய பேருருவைக் காட்டி, அதை ஒரு சவாலாக ஏற்று நின்று, இதைச் செய்து முடித்தேன் என்று சொல்கிற பெருமையைப் பெற வேண்டு மென்று நான் விரும்புகிறேன். அந்த வகையிலே திட்டத்திற் கென்று ஒதுக்கியதிலே கொஞ்சம்கூட குறைக்காமல், அவற்றை அப்படியே நிறைவேற்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டு மென்றும், அதிலே வெற்றி பெற வேண்டுமென்றும் நான் விரும்பு கிறேன்.

பதவியிலே, வேலை வாய்ப்பிலே பெண்களுக்கு 30 விழுக்காடு கொடுக்கப்படுமென்று சொல்லியிருப்பது மிக நல்லதொரு திட்டம். காங்கிரஸ் கட்சி தன்னுடைய தேர்தல் அறிக்கையிலே 25 விழுக் காடு கொடுப்போமென்று சொல்லியது. மரியாதைக்குரிய கலைஞர் அவர்களாலே தீட்டப்பட்ட அந்தத் தேர்தல் அறிக்கையிலே 30 விழுக்காடு என்று சொல்லப்பட்டது. எவ்வளவு கொடுத்தாலும் நல்லதுதான். 1 ஆம் வகுப்பிலிருந்து 2 ஆம் வகுப்புவரையில்

[திரு. குமரி அனந்தன்] [1989 பிப்ரவரி 17

இருந்துகொண்டிருக்கிற அந்தக் குழந்தைகளுக்கு நல்ல அரவணைப்போடு கல்வியைச் சொல்லிக் கொடுப்பதற்கு அந்தப் பெண்களுடைய மென்மையான உள்ளம் பயன்படும் என்று சொல்லுகிறோம். பெண்மை என்றாலே மென்மைதானே. எனவே அந்தப் பெண்மை உள்ளம் அந்தக் குழந்தைகளினுடைய மென்மையைப் புரிந்துகொண்டு வளர்க்குமென்று சொல்லி, 1 முதல் 2 வரை எல்லா ஆசிரியர் பதவிகளும் பெண்களுக்கே கொடுக்கப்படுமென்று சொல்லுவது நல்ல திட்டம். அதை 5 ஆம் வகுப்பு வரை நீட்டிக்க வாய்ப்பு உண்டா அது நல்லதல்லவா? 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளுக்குக்கூட நல்ல நோக்கத்தோடு கூடிய, இரக்க குணத்தோடு கூடிய பெண்களின் மேற்பார்வை நல்லதாக இருக்குமென்று கருதுகிறேன். அப்படி கல்வியிலே பெண்களுக்கு வாய்ப்பு கொடுக்கும்போது, அரசு கல்வி நிலையங்களில் மட்டுமல்லாமல், தனியார் கல்வி நிலையங்களிலும், இந்த நிலையை ஏற்படுத்த வேண்டும். தனியார் கல்வி நிலையங்களைப் பொறுத்து சில விதிமுறைகளை, ஒழுங்கு முறைகளை அரசுதான் வகுக்கிறது. எனவே அதிலே இதையும் ஒன்றாகச் சேர்த்து ஐந்தாம் வகுப்புவரை என்று சேர்த்தால் நன்றாக இருக்குமென்று கருதுகிறேன்.

அடுத்து, கிராம அதிகாரிகளைப் பொறுத்தவரையில், பழைய கணக்குப்பிள்ளை, மணியம் போன்றவர்களை விட்டுவிடாமல், இப்போது புதிதாக வந்தவர்களையும் விட்டுவிடாமல், இரண்டு பேருக்கும் பாதகமில்லாமல் செய்வோமென்று சொல்லுகிறார்கள். நல்ல முயற்சிதான். இரண்டு பேருக்கும் பாதகமில்லாத அளவுக்கு எல்லோருக்கும் வேலை வாய்ப்பு கொடுப்பதென்பது பாராட்டுக்குரியதுதான். அதிலே யாருக்காவது வேலை வாய்ப்பு கொடுக்க முடியவில்லை என்றால், முந்தைய அரசு அவர்களுக்கு இழப்பீடு கொடுப்போமென்று சொல்லிற்று. அந்த இழப்பீட்டுத் தொகையை கணிசமாக உயர்த்தி நீங்கள் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதாவது கிராம அதிகாரிகளாக இருந்து, மீண்டும் பதவி பெறாமல் போனவர்களுக்கு, இழப்பீட்டுத் தொகையாக ஒரு கணிசமான தொகை கொடுத்தால், அவர்களுடைய வாழ்க்கையிலே ஏதாவது தொழிலைத் தொடங்க வாய்ப்பாக இருக்குமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றி ஒன்றிரண்டு கருத்துக்கள் சொல்ல வேண்டியிருக்கிறது. எங்களுடைய கட்சியினுடைய பல உறுப்பினர்களுக்கு பேச வாய்ப்பு இல்லாததால்

1989 பிப்ரவரி 17] [திரு. குமரி அனந்தன்]

அவர்களும் சில செய்திகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதிக நேரம் எடுத்துக்கொள்ளக்கூடாது. வரவு-செலவுத் திட்டத்தில் பேசலாம் என்பதால் ஒரே ஒரு வேண்டுகோளை வைக்கிறேன்.

எங்களுடைய தொகுதியில் இது, அது என்று ஒவ்வொருவரும் சொல்லி, அதைச் செய்யுங்கள் என்று சொல்லுவதற்கு இன்னும் பல வாய்ப்புகள் இருக்கின்றன. மாண்புமிகு முதல்வரவர்களிடம் ஒன்றைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். டி.டி.சி. என்று சொல்கிற மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் அடிக்கடி நடந்து கொண்டிருக்கின்றன. அதிலே, தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தனை உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், ஒன்றியத் தலைவர் போன்றவர்கள் எல்லாம் கலந்து கொள்கிறார்கள். நகராட்சித் தலைவர் கலந்து கொள்கிறார். மேலவை உறுப்பினர், ராஜ்ய சபை உறுப்பினர் எல்லோரும் கலந்துகொள்ளுகிறார்கள்.

(முற்பகல் 9-50)

அந்த இடத்திலேதான் தன்னுடைய தொகுதிக்கு என்னென்ன தேவை என்பதையெல்லாம் பேசி விடுகிறார்கள். எந்தச் சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், மக்களிடம் வாக்குகளை வாங்கி வந்த பிறகு, ஒரு கூட்டத்தில் இல்லையென்றாலும், இன்னொரு கூட்டத்திலாவது தன்னுடைய தொகுதிக்கு வேண்டிய அத்தனை தேவைகளையும் சொல்லி இருப்பார். ஒரு தடவை சொன்ன உடனேயே அது நிறைவேறாது என்பது நமக்குத் தெரியும். எனவே பல தடவை தொகுதியினுடைய தேவைகள் அத்தனையும் அங்கே சொல்லப்பட்டிருக்கும். அப்படித் தொகுதியினுடைய தேவைகள் எதுவும் விடப்பட்டிருக்காது. நீர்ப்பாசனத்திலிருந்து, அடிப்படை வசதிகள் அத்தனையும் அங்கே அடிக்கடி சொல்லப்பட்டிருக்கும். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்வேன்—மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அந்த அந்த மாவட்ட வளர்ச்சி மன்ற மையங்களில் நடைபெற்ற விவாதக் குறிப்புகளை வாங்கி, அதில் சொல்லப்பட்டுள்ள அடிப்படைத் தேவைகளை — உடனடியாக எவையெவை தேவையோ, அவைகளை உடனே நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நீர்ப்பாசனம், குடிநீர் வசதி போன்ற அடிப்படைத் தேவைகளை-இன்னும் சொல்லப் போனால் சுகாதாரம்

மற்றும் இன்னும் எவையெவை அடிப்படை வசதிகள் என்று நீங்கள் கருதுகிறீர்களோ—அவைகளை உடனடியாக நிறை வேற்றுவதற்கு நீங்கள் உத்தரவிட்டால், விரைந்து செயல்படுகிற ஒரு நல்ல அரசு இது என்று பெயர் பெறுகிற வாய்ப்பு நமக்குக் கிடைக்கும் என்ற காரணத்திற்காக, இதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, நம்பியாறு, கொடுமுடியாறு, பச்சையாறு, பொய்கை யாறு என்றெல்லாம் நாங்கள் பாதயாத்திரை போய்க் கொண் டிருந்தாலும்கூட, அது உங்களுடைய கையெழுத்தைப் பெற்றால் தான் நடக்கும்; நாங்கள் 'காலெடுத்து நடந்து வந்தாலும் நீங்கள் அதில் கையெழுத்துப் போட்டால்தான் முடியும்' என்ற காரணத் திற்காக இதை நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இங்கே அடிக்கடி சொல்லப்பட்ட ஒரு செய்தி என்ன வென்றால், 'இணையான சம்பளம் — ஆசிரியர்களுக்கும் அலு வலர்களுக்கும் மத்திய அரசுக்கு இணையான சம்பளம் கொடுப் போம்.' இது தேர்தல் நேரத்தில் எல்லோராலும் பேசப்பட்ட ஒன்றுதான். ஆனால், அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறார்கள். ஆட்சி அமைந்த உடனே தங்களுக்கு இணையான சம்பளம் வராதா என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, ஆசிரியர்கள் மற்றும் அலுவலகங்களிலே பணி புரிந்து கொண் டிருப்பவர்களுக்கெல்லாம், மத்திய அரசுக்கு இணையான சம்பளத்தைக் கொடுப்பதற்கு இந்த அரசு உடனடியாக உத்தர விட்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு வசதிபற்றி — அதுவும் தியாகம் செய்தவர்களைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். ஒரு சிறிய குறிப்புதான். கன்னி யாகுமரி மாவட்டத்தில் உங்களுக்குத் தெரியும், எல்லைப் போராட் டத்தில் — தமிழ்ப் போராட்டத்தில் கலந்து கொண்ட பெரு மக்களுக்கு நீங்கள் ஏற்கெனவே ஓய்வூதியம் கொடுத்திருக்கிறீர் கள். அதைப் பாராட்டுகிறேன். அப்படி ஓய்வூதியம் பெற்றவர் களில் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறவர்கள் பலர். சிலர் மறைந்து விட்டார்கள். ஆனால் இன்னும் பலருக்கு ஓய்வூதியமே கிடைக்கவில்லை. அவர்களிலே சிலர் மறைந்து கொண்டிருக் கிறார்கள். பலர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எங்கெங்கே துப்பாக்கி சூடு நடந்ததோ, அந்த இடங்களிலெல்லாம் நினைவுக் கல் எழுப்பிய ஒரு எளிய தொண்டன் நான். அவ்வளவு பெரிய

தமிழ் உணர்வோடு அது நடந்ததே என்பதற்காக நினைவுக் கற் களைக்கூட நாங்கள் நட்டுக் கொண்டிருந்தோம். அப்படிப்பட்ட தியாகிகளில் மிச்சம் மீதி இருப்பவர்களுக்குக் கூட அந்த ஓய் வூதியத்தை நீங்கள் கொடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மிகக் குறைந்த அளவுக்குத்தான் ஓய்வூதியம் கிடைக்கிறது. அதை இன்னும்கூட கொஞ்சம் அதிகமாக உயர்த்திக் கொடுத்தால் மகிழ்ச்சி, எண்ணிக்கையிலே அவர்கள் குறைவு. அப்படி அவர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிற காரணத்தால்—நேற்று எங்கள் மதிப்பிற்குரிய ஜனதா கட்சித் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன் விஜயராகவன் அவர்களே கூட இங்கே வேதனையோடு எடுத்துச் சொன்னார்கள். ஏனென்றால் அந்தப் பகுதியிலிருந்து வந்திருப்பவர்களுக்கு அந்தக் காலத்தில் அந்தப் போராட்டத்திலுடைய வேகம் என்ன என்பது தெரியும். அந்தக் காரணத்திற்காகத்தான் இதைச் சொல்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதைக் கருத்தில் கொண்டு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அன் போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பகுதி நேர ஆசிரியர்கள்—வொக்கேஷனல் டீச்சர்ஸ்—6,000 பேர் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நீங்கள் முழு நேரப் பணியாளர்களாக, நிரந்தரமாக ஆக்கிவிட்டால் நல்லது.

அடுத்து, மாநகராட்சித் தேர்தல் பற்றி சொன்னீர்கள். நாங்கள் அப்போதே சொன்னோம் — 18 வயது என்று வந்து விட்ட பிறகு, எல்லோருக்கும் அந்த வாய்ப்பைக் கொடுங்கள் என்று. ஏனென் றால், மாநகராட்சிக்கான தேர்தல்கள் விரைவில் நடத்தப்பட வேண்டும் என்பதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அக்கறை இருப்பது நியாயமே. ஏனென்றால், 1968 ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்த நேரத்தில் இந்தத் தேர்தல் நடந்தது. அதற்குப் பிறகு, ஏறத்தாழ இப்போது இருக்கிற நிலையில், திருத்தப்படாத 18 வயது என்று இல்லாமல் 21 வயது உள்ளவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை என்று சொன் னால், பிறந்து கடந்த 21 ஆண்டுகளாக வாழ்ந்து கொண்டிருக்கிற ஒருவருக்கு அந்தத் தேர்தல் எப்படி இங்கே நடந்தது என்பது கூடத் தெரியாத அளவுக்கு—அவ்வளவு காலமாகத் தேர்தல்கள் நடத்தப்படாத காரணத்தால், விரைந்து தேர்தலை நடத்த நீங்கள் விரும்புவது சரியே. ஆனால் இவ்வளவு காலமாக ஏன் தான் தள்ளிப் போய்விட்டதோ தெரியவில்லை. மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள்கூட 7 ஆண்டுக்காலம் அந்த நேரத்தில் முதலமைச்சராக இருந்தார். அப்போதுகூட அவர் தேர்தலை நடத்தக் கூடிய ஒரு வாய்ப்பு. எப்படியோ அது தவறிப் போய் விட்டது. இப்போது முதல்வர் அவர்கள் தேர்தலை நடத்த இருக் கிறார்கள். அவர்களிடம் நாங்கள் ஏற்கெனவே வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். பாராளுமன்றத் தேர்தலில் ஓட்டுப் போடவே 18 வயது என்று வருகிறபோது, அதுவும் அவர்களைச் சேர்க்கும் கணக்கெடுப்பு மிக விரைவில் முடிந்துவிடும் என்று சொல்லுகிறார் கள் — அவர்களையும் சேர்த்து தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நோன்பு பற்றி ஏற்கெனவே குறிப்பிட் டிருக்கிறீர்கள். எனவே அந்த வகையில் 18 வயதினரையும் சேர்த்து அந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு பிரதமர் அவர்கள் இங்கே அடிக்கடி சுற்றுப்பயணம் வந்ததைப் பற்றிச் சொன்னார்கள். இரண்டு வரி யில் அதை முடித்து விடுகிறேன். அவர்கள் இங்கே வந்த காரணத் தால், ஏழை எளியவர்களுடைய வாழ்க்கை — மத்தியிலிருந்து வருகிற பணம் மட்டுமல்லாமல் மாநிலத்திலிருந்து வருகிற பணம் எல்லாம் சேர்ந்து—நல்ல வகையில் அமைய, ஏழைகளுடைய குடிசைகளுக்குச் சரியாக, திட்ட வடிவில் சென்று சேருகிறதா? செயல் வடிவம் பெற்று சேருகிறதா என்று பார்ப்பதற்குப் பேரு தவியாக இருந்தது. எனவே தயவு செய்து பாரதப் பிரதமர் அவர் கள் இங்கே அடிக்கடி வந்ததும், இனிமேல் வரவேண்டுமென்று நீங்களும் நானும் விரும்புவதும் இந்த நாட்டுக்குத் தேவை யென்றே நான் கருதுகிறேன். அந்த வகையில் பாரதப் பிரதம ருடைய சுற்றுப்பயணம் எளிய மக்களுக்கு கை கொடுக்கிற சுற்றுப் பயணமாக இருந்தது. எனவே அந்தச் சுற்றுப் பயணத்தை வரவேற்கும் எண்ணமே நம் அத்தனை பேருக்கும் வரவேண்டு மென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் போன்றவர்களை அவர்கள் சந்திக்கிறார்கள் என்று சொன்னதும் கூட அப்படித்தான். வேறு எந்த நோக்கமும் கிடையாது. மாநில அரசாங்கத்தின் மீது நம்பிக்கையின்மை அல்ல அதனுடைய பொருள். கடைசியில் செயல்படுபவர்கள் அவர்கள், செலவிடுகிறவர்கள் அவர்கள் தானே. அதனால் அவர்களைச் சந்தித்துப் பேசுகிறார்கள் திட்டமிடுவது கீழேயிருந்து வரவேண்டுமென்று சொல்கிற காரணத்தால் சந்தித்துப் பேசுகிறார்கள். அந்த முயற்சிகளையெல்லாம் நாம்

1969 பிப்ரவரி 17] [திரு. குமரி அனந்தன்]

வாழ்த்த வேண்டுமென்று கருதுகிறேன். எனவே இவைகளில் எல்லாம் குறை கண்டுகொண்டிருக்க வேண்டாம் என்று அன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

தேர்தலைப் பொறுத்தவரையில் மிகச் சிறப்பாக நடந்து முடிந்தது என்று சொல்லியிருக்கிறார்கள். தேர்தல் நடந்து முடிந்தது உண்மை. வாக்காளர்கள் பலர் வாக்குச்சாவடிகளுக்குச் சென்று வாக்களித்தது உண்மை. ஆனால் சில இடங்களில் வாக்காளர்கள் சென்ற நேரத்தில் சிரமம் வேண்டாம் என்று பலர் ஏற்கெனவே வாக்களித்துப் போய் விட்டதைக் கண்டு பிடித்தார்கள். அந்த அளவிற்கு சில இடங்களில் முறைகேடுகள் நடந்திருக்கின்றன. அந்த முறைகேடுகளுக்கு சிலர் துணையாக இருந்திருக்கிறார்கள் இவைகளை முற்றிலும் களையவேண்டுமென்கிற ஆசை இங்கேயிருக்கிற அரசுக்கும் இருக்கிறது. எங்களுக்கும் இருக்கிறது. அனைவருக்கும் இருக்கிறது. எனவே புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை வழங்குகிற அந்த ஏற்பாடு வருவதற்கு நாம் அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால், சில இடங்களில் நடமாடும் வாக்குச்சாவடிகள் வருவதற்குரிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இவைகளைப் பற்றி நான் விரிவாகப் பேசுவதற்கில்லை. ஏனென்றால் இந்த அவையில் ஒரு குறிப்பு வைக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கம் கொண்டு வரவிருக்கிற, தேர்தல் கமிஷன் கொண்டு வரவிருக்கிற தேர்தல் சீர்திருத்தத்தைப் பற்றி நமது கருத்துக்களைக் கேட்டிருக்கிறார்கள். முடிந்தால் இந்த மாநகராட்சித் தேர்தலில் கூட புகைப்படங்களை ஒட்டி அடையாள அட்டை வழங்கி நாம் ஒரு வழிகாட்டியாக இருக்கலாமோ என்று நமது முதலமைச்சர் அவர்கள் சிந்திக்கிறார்கள், நான் பேசுகிறபோது என்று கருதுகிறேன். எனவே, அப்படி வருமானால் நமக்குப் பெருமைதான் அந்தக் காரியத்தை செய்வார்களா என்று கூட நான் அவர்களுடைய பேச்சிலே அறிய விரும்புகிறேன்.

ஆளுநர் உரை இங்கே படிக்கப்பட்ட நேரத்தில் நான் ஒரு மாற்றத்தைக் காண்கிறேன். 1962 ஆம் ஆண்டு வரையில் ஆளுநர் உள்ளே வந்தவுடனே நம்முடைய மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லாம் வெளியேறி விடுவார்கள். ஏனென்றால், 'ஆட்டுக்கு தாடி எப்படி தேவையில்லையோ, அதைப்போல நாட்டுக்கு கவர்னர் தேவையில்லை'

என்று வெளியேறி விடுகிற பழக்கம் 1962 ஆம் ஆண்டு வரையில் இருந்தது. (குறுக்கீடு) 1966 ஆம் ஆண்டு வரையில் இருந்தது என்று அந்த நேரத்தில் உறுப்பினராக இருந்த மாண்புமிகு பொன்னம்மாள் அவர்கள் சொல்கிறார்கள். இப்போது இவர்களுடைய சார்பில் நம்முடைய பேராசிரியர் அவர்கள் பேரவை முன்னவர், அவர்களை அழைத்துக்கொண்டு போய் அங்கே உட்கார வைக்கிற அளவிற்கு ஒரு நல்ல மாற்றம் ஏற்பட்டிருப்பதைக் கண்டு நான் பூரிப்படைகிறேன். (குறுக்கீடு) பேரவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பக்கத்தில் நிற்கிற அளவிற்கு ஒரு தோற்றத்தைக் கொண்டு வருகிறோம் அல்லவா, அதைச் சொல்கிறேன்.

அடுத்து, என்னுடைய தோழர் ஒருவர் கிழக்கு தஞ்சாவூரில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கையும், வறட்சியையும் பற்றி திரு. டி. வி. அந்தோணி அவர்கள் தலைமையில் அமைந்த கமிட்டி ஒரு ரிப்போர்ட் தயார் செய்திருக்கிறது. அதைப் பார்வையிட வேண்டுமென்று குறிப்பைத் தந்திருக்கிறார்கள். அதையும் பார்வையிட்டுச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மொத்தத்தில் ஆளுநர் உரை ஆளுகிற கட்சியின் தேர்தல் கால வாக்குறுதிகளின் வேகத்தையும், ஏழை மக்களுடைய துயரை விரைந்து போக்க வேண்டுமென்ற துடிப்பையும் கொண்டு நிரந்தரமான, நிலையான நல்வாழ்வு தருகிற பொருளாதாரத் திட்டத்தோடு தொலை நோக்கோடு அமையாதிருப்பது ஒரு குறை இருப்பினும் அரசாங்கம் தான் சொன்னதையெல்லாம் நிறைவேற்றும் என்ற நம்பிக்கையில் என்னுடைய கருத்துக்களை கூறி முடிக்கிறேன், வணக்கம்.

*திரு. அ. லெ. சுப்பிரமணியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான கருத்தை இங்கே தெரிவித்து இருக்கிறார்கள். பச்சையாறு திட்டத்திற்காக அவர்கள் பாத யாத்திரை போனதாகச் சொல்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள் 1975 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் தேதி அந்தத் திட்டத்திற்காக கல் நாட்டினார்கள். இரண்டு மாதங்களில் ஆட்சி கலைக்கப்பட்டது. கலைஞர் அவர்கள் கல் நாட்டினார் என்ற ஒரே காரணத்திற்காக முன்பிருந்த காங்கிரஸ் அரசாங்கம் அங்கே சிங்கவால் குரங்கு இருக்கிறது என்று கூறி அந்தத் திட்டத்தை

நிறைவேற்ற முடியவில்லை என்று குரங்குப்பிடியாக இருந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த ஆட்சி மாற்றம் காரணமாக அதில் ஒரு மனமாற்றம் ஏற்படுவதற்கு வழி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டியதை நினைவூட்டினார்கள். அவர்கள் கல் நாட்டியது எவ்வளவு உண்மையோ, அதேபோல் நான் கால் நீட்டி நடந்ததும் உண்மை. இரண்டும் நடந்தது. பச்சையாறு திட்டம் என்பது சிங்கவால் குரங்கு இருக்கிறது என்பதன் காரணமாக குரங்குப் பிடியாக பிடித்து இருக்கிறோம் என்று சொன்னார்கள். அது உடும்புப் பிடியல்ல. எனவே நாம் எல்லாம் சேர்ந்து முனைந்தால் நிச்சயமாக நடக்கும் என்ற நம்பிக்கை உண்டு.

(முற்பகல் 10-00)

திரு. என். கணபதி : பேரவைத் தலைவர் அவர்களே காங்கிரஸ் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசிய நேரத்தில், அகில இந்தியத் தேர்வுகளிலே தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களை தேடிப் பிடிக்கவேண்டிய ஒரு நிலைமைக்கு ஆளாகிவிட்டார்கள் என்று தெரிவித்திருக்கிறார்கள். இதற்கு முக்கியமான காரணம், முன்பெல்லாம் ஆங்கிலத்திலே, எல்லோருக்கும் வேற்றுமொழியாக இருந்த ஆங்கிலத்திலே எழுதக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்தது. பிறகு இந்தி மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு மாத்திரம் சலுகைகள் வழங்கப்பட்டு, அவர்கள் மாத்திரம் இந்தியிலே தேர்வுகளை எழுதி, மற்றவர்கள் எல்லாம் வேற்று மொழியான ஆங்கிலத்திலே எழுதக்கூடிய ஒரு சூழ்நிலை வந்ததன் காரணமாகத்தான், இன்றைக்கு அந்த வீழ்க்காடு மிகவும் குறைந்து நம்முடைய நாட்டைச் சேர்ந்தவர்களைத் தேடிப் பிடிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. எனவே அனைவரும் தாய் மொழிகளிலேயே, அதாவது 15 தாய்மொழிகள் இருக்கின்றன— தேர்வை எழுதுவதற்கான ஒரு வாய்ப்பைப் பெறுவதற்கு காங்கிரஸ் கட்சியின் சார்பில் உறுதி அளிப்பார்களா, அல்லது போராடி வாங்கித் தருவார்களா, பனைவிடைத் தாளைப் பெற்றுத் தந்ததைப் போல, என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, ஆங்கிலத்திலே எழுதிக் கொண்டிருந்தார்கள், பிறகு இந்தியிலே எழுதவேண்டிய நிலை ஏற்பட்டது என்று சொன்னார்கள். இப்போது இந்த

சர்வீஸ் கமிஷன் நடத்துகின்ற அந்தத் தேர்வை தமிழிலும் எழுதலாம் என்ற உரிமை வந்து பல ஆண்டுக்காலம் ஆகிவிட்டது. அதற்குப் பிறகு நமது மாணவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

திரு. என். கணபதி : தலைவர் அவர்களே, மத்திய சர்வீஸ் கமிஷனிலே இந்தியிலே எழுதுவதற்கான வாய்ப்புக்கள்தான் இருக்கிறதே தவிர, தமிழிலே எழுதுவதற்கான வாய்ப்பில்லை.

திரு. குமரி அனந்தன் : தமிழிலும் எழுதலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவரே இது தொடர்பாக ஒரு விளக்கம் தரலாம். என்னுடைய மாணவர் இரெ. பாலகிருஷ்ணன் என்பவர், தமிழிலே தேர்வு எழுதி 99-வது இடத்தில் ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றி பெற்று இப்போது ஒரிசாவில், கட்டாக் மாவட்டத்தில் துணை ஆட்சித் தலைவராக இருக்கிறார். அவர் திருவாரூரில்தான் திருமணம் செய்திருக்கிறார் என்பதையும் நான் நினைவூட்ட வேண்டும்.

இரண்டாவது, இந்த நேரத்தில் அவைக்குப் பொருத்தமாக இருக்காது என்றாலும், பேராசிரியர் தமிழ்க்குடிமகனுடைய பையன் மெய்மொழி தமிழிலே தேர்வு எழுதி, வெற்றி பெற்று இப்போது பணியில் இருக்கிறார் என்பதையும் அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, ஒரு விளக்கம், காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள். தமிழிலே சுவையான நல்ல விளக்கங்களைத் தந்தார்கள். ஒரு விளக்கத்தை நான் அவர்களிடத்திலேயிருந்து தெரிந்து கொள்ள விரும்புவது, மூடிக்கிடக்கின்ற ஆலைகளைத் திறப்பதற்கு, அதை தொழிலாளர்களுக்கே உரித்தாக்கிக் கொடுத்தால் மிகவும் நல்லது, இந்த சமுதாய அமைப்பிலே அது நடைபெறாது. இப்போது உடனடியாக இந்த அரசாங்கத்திடத்திலே துயர் துடைப்புச் சட்டம் என்ற சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தின் கீழ் அவைகளை எடுத்து, நிர்வாகத்தை எடுத்து நடத்துவதற்கு இருக்கும்படியான உரிமையைப் பயன்படுத்தி, மத்திய அரசு அதற்கு அனுமதி கொடுத்து, அதற்குத் தேவையான நிதி உதவியும் செய்தால், நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகளின் நிர்வாகத்தை ஏற்று, அதிலே ஊழல் நடப்பதைத் தடுத்து, அதை நடத்த முடியும்.

அதற்கு காங்கிரஸ் கட்சியின் சார்பில் உதவி செய்ய நமது மாண்புமிகு உறுப்பினர், துணைத் தலைவர் அவர்கள் முன்வரு வார்களா, அதற்கு உதவி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன்: சபாநாயகர் அவர்களே, மாநில அரசு தொழிலாளர் துயர் துடைக்க எடுக்கின்ற அந்த முயற்சிகளில் எல்லாம் நாங்கள் துணை நிற்போம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் மாண்புமிகு உறுப் பினர் அனந்தன் அவர்கள் பேசுகின்றபோது, கூடங்குளம் அணு மின் நிலையத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். 6 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் அந்த அணு மின் நிலையம் அங்கே நிறுவப்பட இருக்கிறது. எத்தனை மெகாவாட் சக்தி கொண்ட மின்சாரம் அங்கே கிடைக்கும், அதிலே தென் மாவட்டங்களுக்கு, குமரி மாவட்டம் உள்பட, ஏன் என்றால், தென் மாவட்டங்களிலே, குமரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய விவசாயிகள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று தெரிவித்தார்கள், ஆகவே குமரி மாவட்டம் உள்பட, தென் மாவட்டங்களுக்கு—எத்தனை மெகாவாட் மின் சக்தி கிடைக்கும், தமிழ்நாட்டுக்கு எத்தனை மெகாவாட் கிடைக்கும் என்ற விவரத்தை அறிவிப்பார்களா என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே, 2,000 என்று சொல்லி, அது 3,000 கிலோ வாட் என்று சொல்லப்படுகின்ற அளவிற்கு இடையிலே பேசப்படுகிறது. இன்னும் அதிகமாகக் கூட இருக்கலாம். தமிழகத்திற்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று தெரியும். இந்தப் புள்ளிவிவரங்கள் எல்லாம் ஒருவேளை நமது மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் கேட் டால் கிடைக்கத்தான் செய்யும். நாங்களே உங்களுக்குப் பெற்றுத் தரவேண்டுமென்று சொன்னாலும், பெற்றுத் தருவதற்குத் தயா ராக இருக்கிறோம்.

* திரு. பொன் விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் துணைத் தலைவர் இங்கே பேசு கின்ற போது பிரதமர் அவர்களுடைய விஜயம் எந்த உள்நோக் கத்தையும் கொள்ளாதது. அதில் எந்த உள்நோக்கமும் இல்லை

என்று சொல்கிறார்கள். இங்கே இருக்கக்கூடிய மக்களுடைய வாழ்க்கையை, வளத்தை எல்லாம் பார்ப்பதற்குத் தான் வந்தார்கள் என்று சொன்னார்கள். வருவதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் இந்தியாவில் தமிழ்நாட்டைவிட மோசமான, ஒரிஸ்ஸா போன்ற மாநிலங்கள் இருக்கின்றனவே, அந்த மாநிலங்களுக்கு எல்லாம் போகாமல் தமிழ்நாட்டில் தேர்தல் வருவதை அடிப்படையாக வைத்துக்கொண்டு வந்து இருக்கிறார்களே, மற்ற மாநிலங்களுக்கு இப்படிப் போனார்களா? அப்படிப் போவதற்கு முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது விவாதம் திசை திரும்பிப் போகிறது. இது இந்த அவைக்குப் பொருந்தாது. விவாதமே தேவையில்லை என்று நான் கருதுகிறேன். தேவைப்படுகின்றபோது, நீங்கள் உரையாற்றுகின்றபோது, அவ்வப்போது வாதங்களிலே வைத்துக் கொள்ளலாம். (குறுக்கீடு) வேண்டாம். அவருடைய உரையிலே கேள்வி கேட்பதற்கு வாய்ப்பே கிடையாது.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஜனதா கட்சியினுடைய தலைவர் விஜயராகவன் அவர்கள் கேட்டதினாலே சொல்கிறேன். மாலத் தீவிலே சில படைகள், கூலிப் படைகள் போய் இறங்கிய நேரத்திலே கூட, அவர் ஒரிஸ்ஸாவிலே தான் போய் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்தார் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

* திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்காவது முறையாகத் தொடர்ந்து அறந்தாங்கித் தொகுதியிலே, நெஞ்சில் அறம் தாங்கி வாழ்கின்ற மக்கள் ஏறக்குறைய 22,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி தேடித் தந்து மீண்டும் இந்த சட்டமன்றத்திலே வந்து பணியாற்றுகின்ற வாய்ப்பைத் தந்த அறந்தாங்கித் தொகுதி மக்களுக்கும், முதலில் 1977-ல் அந்தத் தொகுதியை வேறு யாரிடத்திலும் விட்டு விடாதே என்று என்னை அங்கே நிறுத்திய மறைந்த முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை, இந்த நேரத்தில் காணிக்கையாக்குகிறேன்.

ஒரு வகையில் பல உறுப்பினர்கள் இங்கே உரையாற்றுகிற போது குறிப்பிட்டதைப் போல் எனக்கும் இது ஒரு வகையிலே பார்த்தால் கன்னிப் பேச்சுத் தான். ஏனென்றால் 1977-லே

1989 பிப்ரவரி 17] [திரு எஸ். திருநாவுக்கரசு]

சட்டமன்றத்திற்குள்ளே நுழைந்ததிலிருந்தே புரட்சித் தலைவர் அவர்கள் இயற்கை எய்துகின்ற வரை சட்டமன்றத் துணை சபாநாயகராக தேசியக் கொடியோடு நுழைந்து அவர் இயற்கை எய்திய வரை தேசியக் கொடியோடு அந்தப் பக்கத்திலே உட்கார்ந்து இருந்த காரணத்தால் எதிர்க்கட்சி வரிசையில் நின்று சட்டமன்ற உறுப்பினராக முதல் முறையாகப் பேசுகிறேன் என்ற அடிப்படையிலே இதைக் கன்னிப்பேச்சு என்று குறிப்பிட்டேன். குறுக்கீடுகள் வேண்டாம் என்பதற்காக அல்ல.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

(முற்பகல் 10-10)

ஆளுநர் உரையைப் பொறுத்தவரையில் ஆளுநர் உரையிலே இந்த அரசை மக்கள் மலைபோல் நம்பிக் கொண்டிருக்கிறார்கள் என்று 21 ஆவது பத்தியிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி மலை போல் நம்பிக் கொண்டிருக்கிற மக்களுக்கு, மலையளவு இல்லையென்றாலும், மடு அளவாவது இல்லை, கடுகளவாவது நலத் திட்டங்களை இந்த ஆளுநருடைய உரையிலே இந்த அரசு தந்திருக்குமானால், மக்களின் எதிர்பார்ப்பு வெற்றி பெற்றிருக்கும். ஆனால் இந்த ஆளுநருடைய அறிக்கை வந்ததற்குப் பின்னால் தங்களுக்கான நலத் திட்டங்கள், முன்னேற்றத் திட்டங்கள் எதுவும் தரப்படவில்லை என்கிற உணர்வுதான, இன்றைக்கு மக்களிடத்திலே இருப்பதைக் காண முடிகிறது.

பத்தி 24-ல் தமிழ்நாட்டில் இருக்கிற பின் தங்கிய மக்கள், மிகப் பின் தங்கிய மக்கள், ஆதி திராவிட மக்கள் மற்றும் பொது மக்கள் இப்படிப்பட்ட அனைவருக்கும் உரிய நலத் திட்டங்கள் வருகிற காலத்திலே தரப்படும் என்ற வாக்குறுதிதான், இந்த ஆளுநரின் உரையிலே குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதாக இருக்கிறது. தேர்தல் நேரத்திலே தந்த வாக்குறுதிகளை, இந்த நேரத்திலே ஆளுநருடைய உரையிலே கொண்டு வரவில்லை என்றாலும், இந்த நேரத்திலே ஆளுநரின் உரையிலே தந்திருக்கிற வாக்குறுதிகளையாவது, அடுத்து வருகிற நிதிநிலை அறிக்கையிலோ, மானியக் கோரிக்கைகளிலோ தந்து மக்கள் ஏமாற்றம் அடையாமல், வாக்குறுதிகளை நிறைவேற்றுவீர்கள் என்று மக்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 பிப்ரவரி 17

ஆளுங்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம், தங்களுடைய உரைகளை ஆற்றுகிற போது ஆளுநரின் உரையிலே சொல்லப்பட்டிருக்கிற 3 பக்கங்கள் வரை, சொல்லப்பட்டிருக்கிற பல கருத்துக்களை, இவை மிகப் பெரிய வரலாற்று சிறப்பு என்றும், சரித்திரத்திலே இடம் பெற வேண்டியவை என்றும் புகழ்ந்து பாராட்டினார்கள்.

மாநில சுயாட்சி, தேசிய மொழிகள் அனைத்தையும் ஆட்சி மொழிகளாக ஆக்க வேண்டும், அதுவரையில் தொடர்பு மொழியாக ஆங்கிலமே தொடர்ந்து இருக்க வேண்டும் அது போல் இந்தி எந்த வகையிலே திணிக்கப்பட்டாலும் எதிர்ப்போம் என்பது போன்ற விளக்கமான பத்திகளாக, ஏறக்குறைய 5, 6 பத்திகளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிற ஆளுநருடைய உரை ஒன்றும் இம்மாமன்றத்திற்கு புதியது அல்ல. கடந்த 11 ஆண்டுகளாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு இருந்த போதும் நான் முன்னாலே குறிப்பிட்டவை அனைத்தும் நீங்கள் சொன்னதைப் போலவே, இன்னும் சொன்னால் அதை விட கொஞ்சம் வேகமாகவே ஆளுநருடைய உரையில் தொடர்ந்து குறிப்பிடப்பட்டு வந்திருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக இதிலே ஒன்றும் புதுமை இல்லை.

நாங்கள் சொன்னதைத்தான், அல்லது பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைத்தான் தொடர்ந்து பொறுப்பேற்றிருந்த அரசுகளும், இப்போதிருக்கிற அரசும், இனி எந்த அரசு வந்தாலும் அந்த அரசுகளும் அவற்றைத் தமிழ்நாட்டிலே சொல்லிதான் ஆகவேண்டும், எப்படியாவது பெற்றுத்தான் ஆகவேண்டும். ஆளுநருடைய உரையைப் பொறுத்தவரையில் இங்கே சட்டமன்ற மேலவையை மீண்டும் கொண்டு வருவோம் என்றும், அதற்கான சட்டத்தை நிறைவேற்றுவோம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போல, இதை அப்படிக் குறிப்பிட்டிருப்பது சட்டப்படி தவறாகும். ஏனென்றால் இந்த மன்றத்திலே சட்டம் கொண்டுவர முடியாது. தீர்மானம் கொண்டு வருவோம் என்றும் அந்தத் தீர்மானத்தை நாடாளுமன்றத்தினுடைய அனுமதிக்கு

1989 பிப்ரவரி 17] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

அனுப்பி வைப்போம் என்றும் அதிலே வந்து இருக்க வேண்டும். சட்டம் கொண்டு வந்து இங்கே நாமே நிறைவேற்றுவதைப்போல உள்ளதே தவிர அது டெல்லிக்கு அனுப்பப்படும், நாடாளுமன்றத் திற்கு அனுப்பப்படும் என்று கூட அதிலே குறிப்பிட வில்லை. தவறுகள் இருந்தால் திருத்திக் கொள்வதிலே தவறு இல்லை. ஆனால் இந்த சட்டமன்ற மேலவை ஏன் தமிழகத்திலே கலைக்கப் பட்டது, நீக்கப்பட்டது என்று ஆளும் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகின்ற போது பல் வேறு விதமான உள்நோக்கங்களை அதற்குக் கற்பித்தார்கள். இன்றைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமன்றத்தினுடைய மேலவையிலே வந்து அமரக்கூடாது என்பதற்காகவும், அவர்கள் வருவதை, உரையாற்றுவதைத் தடுப்பதற்காகவும் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் திட்டமிட்டு மேலவையைக் கலைத் தார்கள் என்கின்ற ஒரு குற்றச்சாட்டை ஆளும் கட்சி மாண்புமிகு உறுப்பினர்கள் திரும்பத் திரும்பச் சொன்னார்கள். ஆனால் அதிலே உண்மை—முதலமைச்சர் அவர்களுடைய வார்த் தையிலே சொல்ல வேண்டுமென்றால்—ஏள் முனை அளவுகூட இல்லை என்பதை நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக் கிறேன்.

இந்தியாவிலே இருக்கின்ற 25 மாநிலங்களில் கர்நாடகம், மகாராஷ்டிரம், பீஹார் இந்த மூன்று மாநிலங்களைத் தவிர அநேகமாக வேறு எந்த மாநிலத்திலேயும் சட்டமன்ற மேலவை தற்போது இல்லை. ஏன் நீங்கள் சேர்ந்திருக்கின்ற தேசீய முன்னணி இருக்கின்றதே. அந்த தேசீய முன்னணியினுடைய தலைவராக இருக்கின்றாரே திரு. என். டி. ராமாராவ் அவர்கள் ஆட்சி செய்கின்ற ஆந்திரா மாநிலத்தில் கூட மேலவை கலைக்கப் பட்டது. மற்ற மாநிலங்களைப் பின்பற்றி நிதி நெருக்கடியை மனதிலே கொண்டு சட்டமன்றத்திலே நடக்கிற நிகழ்ச்சிகள் தான் திரும்பத் திரும்ப மேலவையிலேயும் நடக்கிறது. இது வரையில் தமிழகத்தினுடைய வரலாற்றில் எனக்குத் தெரிந்த வரையில்—மற்ற மூத்த உறுப்பினர்களிடத்திலே நான் கேட்ட றிந்த வரையில் இந்த மன்றத்திலே நிறைவேற்றப்பட்ட எந்தச் சட்டமும் மேலவையால் நிராகரிக்கப்பட்டோ, திருப்பி அனுப் பப்பட்டோ பெரும்பாலும் மீண்டும் அது சட்டமன்றத்தால் நிராகரிக்கப்பட்டதில்லை. மாற்றுக் கருத்துக்கள் இருந்திருந்தால் மீண்டும் சட்டமன்றம் அனுப்புகின்ற போது மேலவை அதை

ஏற்றுத்தான் ஆகவேண்டும் என்று இருக்கிறது சட்டத்திலே. மேலவை சட்டப்பூர்வமாக நிராகரிக்க முடியாது. எனவே, இப்படிப் பல்வேறு கோணங்களிலேயும் சட்டமன்ற மேலவை, மற்ற மாநிலங்களின் முன் மாதிரியை பின்பற்றி, தமிழகத்தினுடைய நிதிப் பற்றாக்குறையை மனதிலே கொண்டு கலைக்கப் பட்டது. இலங்கைத் தமிழர்களுடைய பிரச்னைக்காக . . .

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது மேலவை கலைப்புக்கு வேறு பெரும்பான்மை மாநிலங்களிலே மேலவை இல்லாததும், நிதி நிலையைப் பெருக்குவதற்காகவும் என்று விளக்கம் தருகிறார்கள். ஒன்று, மற்ற மாநிலங்களிலே மேலவை இல்லாத நிலை பல ஆண்டுகளாகத் தெரியும். திடீரென்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மேலவை எதிர்க் கட்சித் தலைவராக இருக்கக்கூடிய நிலையில் கலைக்க வேண்டும் என்ற எண்ணம் ஏன் வந்தது ? இரண்டு, மன்னிக்க வேண்டுகிறேன்.

(முற்பகல் 10-20)

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, மற்ற அனைத்து மாநிலங்களிலேயும், ஏதோ இந்திய நாட்டிலே குடியரசு ஆட்சி, மக்கள் ஆட்சி ஏற்பட்டதிலிருந்து மேலவை இல்லாமல் இருந்ததைப் போல, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய செயலராக இருக்கின்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள். அதிலே உண்மை இல்லை.

நான் சுட்டிக்காட்டியதைப் போலவே, ஆந்திர மாநிலத்திலே தொடர்ந்து இருந்து வந்த மேலவை சுமார் 2, 3 ஆண்டுகளுக்கு முன்னாலேதான் கலைக்கப்பட்டது. அப்படி அந்தந்த மாநிலங்களின் முடிவுகளுக்கேற்ப பல்வேறு காலகட்டங்களிலே சட்டமன்ற மேலவைகள் கலைக்கப்பட்டு வந்திருக்கின்றன. சரி இது இன்றைக்கு இருக்கின்ற முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையிலே வந்தவுடனே எடுக்கப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக முடிவா என்றால் உறுதியாக இல்லை. மாண்புமிகு திரு. கணேசன் அவர்களுக்கும், இந்த மாமன்றத்திற்கும் நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

1989 பிப்ரவரி 17] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

1974-ல் நடந்த சட்டமன்ற நிகழ்ச்சியை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். வால்யூம் 56/74, பக்கம்—442. இங்கே புஜ மன்னார் குழுவின் பரிந்துரையின் மீது மாநில சுயாட்சி பற்றி விவாதம் நடந்தபோது, அதிலே குறுக்கிட்டு அன்றைக்கு இருந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்கிறார்கள்—

" When one of your Party Members, Mr. Kovai Chezhiyan, was speaking, he was saying that the Upper House is not necessary. Do you think that the Upper House is unnecessary and should be abolished in toto? " என்று அவர்கள் கேள்வியைக் கேட்கிறார்கள். அதற்கு டாக்டர் ஹண்டே அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 1974-லே சொன்னது—

" I may tell, for Mr. Ponnappa Nadar, that as far as our Party is concerned, we are for abolition of Upper Houses. There is no question of confusion."

என்று அன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கையாக 1974-லேயே திரு. கோவை செழியன் அவர்களும் டாக்டர் ஹண்டே அவர்களும் இங்கே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது, இன்றைய ஆளும்கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் அன்று சுமார் 185 சட்டமன்ற உறுப்பினர்களை வைத்துக் கொண்டு மிகப்பெரிய அளவிலே பலமான ஆளும்கட்சியாக இருந்தபோது, எதிர்க்கட்சியிலே சட்டமன்றத்திற்குப் போட்டியிடாமல், மேலவை உறுப்பினராக, இன்றைய முதல்வர் அவர்கள் மேலவைக்கு வருவார்கள் என்று கற்பனைகூடச் செய்யமுடியாத அந்தச் சூழ்நிலையில், அன்றைக்கே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாகச் சொல்லப்பட்டதைத்தான் அதற்குப் பின்னாலே, நிதி நெருக்கடி ஏற்படுகிறபோது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், தான் முன்னாலேயே சொன்ன கொள்கையை இங்கே நிறைவேற்றியது. இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால். . .

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசுகின்றபோது, ஏதோ நிதி நெருக்கடிதான் இந்த

இரண்டாவது சபையை ஒழிப்பதற்கான காரணம் என்பதைச் சுட்டிக்காட்டினார். "இங்கே இருக்கின்ற மக்களும், மற்ற உறுப்பினர்களும் நன்றாக அறிவார்கள். அப்படி நிதி நெருக்கடிதான் காரணமாக இருந்திருக்குமேயானால், பல்வேறு வாரியத் தலைவர்கள் பதவிகள், நிதியை வாரிக் கொட்டிய அந்தப் பதவிகள் உருவாக்கப்பட்டிருப்பது எதனால்? உண்மையிலேயே இதற்கு உள்நோக்கம் இருக்கின்ற காரணத்தால்தான் நிறைவேற்றப்பட்டதே தவிர, நிதி நெருக்கடி என்பது சரியான காரணமாக இருக்காது. . . .

திரு. எஸ். திருநாவுக்கரசு : ஒரு உண்மை இல்லாத செய்தியைத் திரும்பத் திரும்பச் சொன்னால் உண்மையாக்கலாம் என்கிற பழமொழிக்கேற்ப நீங்கள் எத்தனை தடவை திரும்பித் திருப்பிச் சொன்னாலும் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் குறுக்கிட்டு எந்த விளக்கமும் அளிக்க விரும்பவில்லை. மேலவை மீண்டும் வர வேண்டும் என்பது குறித்து இந்த அவையிலேயே மீண்டும் பேச விருக்கின்றோம். அதற்கான தனித்தீர்மானம் வரவிருக்கிறது. அதிலே விளக்கமாகப் பேசிக்கொள்ளலாம். எனவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் வேறு பிரச்சினைகளைப் பற்றி விரிவாகப் பேசுவது நல்லது என்று கருதுகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே. நான் அது குறித்துச் சுருக்கமாகப் பேச விரும்பினேன். இடை யில் ஆளுங்கட்சியின் சார்பில் 2 குறுக்கீடுகள் இது பற்றியே வந்ததன் காரணமாக விவாதம் நீண்டது.

எனவே நான் சுட்டிக்காட்டியதைப் போல இதுவும் ஒரு காரணம். நிதி நிலை மட்டுமல்ல. நிதிச் சுமையைக் குறைப்பது ஒரு காரணம். இப்படிப் பல்வேறு காரணங்களிலே அதுவும் ஒரு காரணமாக இருந்தது என்பதைத்தான் நான் சுட்டிக்காட்டினேன். ஆளுங்கட்சியின் சார்பில் நாங்கள் இருந்தபோது, அ.இ.அ.தி.மு.க. இருந்தபோது என்ன செய்திருந்தாலும் அது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராகத்தான் என்கின்ற மனோபாவம் பல மாண்புமிகு உறுப்பினர்களின் மத்தியில் வளர்ந்து இருப்பது வருந்தத்தக்கது.

1989 பிப்ரவரி 17] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

ஒரு மன்னன் இருந்தான். அந்த மன்னனுக்கு தினம் தினம் ஒரு சவரத் தொழிலாளி வந்து முகம் வழித்து விடுவது வழக்கம். ஒரு நாள் அந்தப் பணி நடைபெறுகிறது. (குறுக்கீடு) சிறு கதைதான். அந்த மன்னன் அந்த சவரத் தொழிலாளியைப் பார்த்தான். அவன் கையில் இருக்கிற தங்க மோதிரத்தைப் பார்த்தான். மக்கள் எல்லாம் மகிழ்ச்சியாக இருக்கிறார்களா? எப்படி வாழ்கிறார்கள் என்று கேட்டான். அதற்கு அந்தச் சவரத் தொழிலாளி மக்களுக்கு எல்லாம் என்ன குறை மன்னா? உங்களுடைய ஆட்சியில் எல்லோரும் கையிலும், வயிற்றிலும் தங்கம் வைத்து வாழ்கிறார்கள் என்று சொன்னான். அடுத்த நாள் மன்னனிடம் வருகை தந்தான் அதே தொழிலாளி. கையில் மோதிரம் இல்லாமல் இருந்ததைப் பார்த்து விட்டு மீண்டும் மன்னன் கேட்டான். இப்போது மக்கள் எப்படியிருக்கிறார்கள், மகிழ்ச்சியாக இருக்கிறார்களா என்று கேட்டான். அந்தத் தொழிலாளி சொன்னான், எவனிடத்தில் மகிழ்ச்சியிருக்கிறது, எவனிடத்திலும் ஒரு குண்டு மணி தங்கம் கூட இல்லை. இது ஆட்சியா; மக்களிடத்திலே மகிழ்ச்சி இல்லை என்று சொன்னான். எனவே எல்லாவற்றையும் தன்னை வைத்துக் கணக்குப் போட்ட அந்தச் சவரத் தொழிலாளியைப் போல எல்லாவற்றையும் திராவிட முன்னேற்றக் கழகம் உங்களை வைத்து நீங்கள் கணக்குப் போட்டு மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் மீது குற்றச்சாட்டுகளைக் கூற அத்தனை உறுப்பினர்களும் மாறி மாறி முயற்சிப்பது வருந்தத்தக்கது.

அடுத்து உள்ளாட்சி பற்றிய பல்வேறுவிதமான அறிவிப்புகள் ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கின்றன. அதிலே ஐந்து ஆண்டுகளாக பதவிக் காலத்தை நீட்டிக்கிறீர்கள். சட்ட முன் வடிவு கொண்டு வந்திருக்கிறீர்கள். ஐந்து ஆண்டுகளாக நீட்டிப்பதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் ஏற்கனவே 3 ஆண்டுகள் என்று மக்களிடத்திலே சொல்லி வாக்குகள் பெற்று வந்த தலைவர்களுக்கு 2 ஆண்டுக்காலம் போனசாக மக்களுடைய அனுமதியில்லாமல் 2 ஆண்டுகளை இப்போது இருக்கிற அனைத்து தலைவர்களுக்கும் நீட்டிப்புத் தருகிறீர்களே, அது எந்த வகையில் ஜனநாயகம் என்று நான் இந்த ஆட்சியைப் பார்த்துக் கேட்க விரும்புகிறேன்.

நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் ஒரு முறை 6 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டபோது அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்ப்பு தெரிவித்ததும், பின்பு 5 ஆண்டுகளாக குறைக்கப் பட்டபோது அதை வரவேற்றும் அதுதான் ஜனநாயகம் என்று அன்று பாராட்டிய நீங்கள் இன்று 3 ஆண்டு காலத்திற்குத் தேர்வு செய்தவர்களை மக்களிடத்தில் அனுமதி கேட்காமலேயே ஐந்து ஆண்டுகளாக மாற்றுகிறார்களே, அது எந்த வகையில் நியாயம் ? அதுவும் அவர்களுடைய பதவிக் காலம் ஏறக்குறைய இந்த மாதத் தோடு முடிகிறது. அப்படி முடியப் போகிற சூழ்நிலையில் இன்னும் 2 ஆண்டு காலம் நீட்டிப்பது தேவையா ?

எப்படி மாநகராட்சிகளுக்கு தேர்தல் அறிவித்து இருக்கிறீர் களோ அதேபோல் ஏன் மற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் நீங்கள் தேர்தல் நடத்த யோசிக்கிறீர்கள் ? உடனே தேர்தலை நாடு முழுவதும் சந்திக்க ஏதாவது பயமா என்கிற உணர்வுதான், என்கிற சந்தேகம்தான் எங்களுக்கு ஏற்படுகிறது. அது மட்டு மல்ல (குறுக்கீடு).

(முற்பகல் 10-30)

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர் களே, மாண்புமிகு எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, 3 ஆண்டுகளுக்கென்று தேர்தலிலே நின்று வெற்றி பெற்றவர்கள், நகராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு 3 ஆண்டுகள் முடிகின்ற நேரத்திலே நீட்டிப்புக் கொடுப்பது எப்படி நியாயம் என்று கேட்டார்கள். அன்றைய தினம் தேர்தலிலே நகராட்சித் தலைவர்களும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டபோது எந்தெந்த உரிமைகள் சட்டப்படியாக வழங்கப்பட்டு இருந்ததோ அதை ஜனநாயக (குறுக்கீடு).

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கூறுகின்ற கருத்துக்களுக்கு . . . (குறுக்கீடு).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி): உறுப் பினர் விளக்கம் சொல்வதற்காக இடையிலே குறுக்கிட வேண்டா மென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்புகளுக்கு, அனைத்து அமைப்புகளுக்கும் இந்த அரசு தேர்தலை நடத்துவதுதான் நியாயமானதாக இருக்கும். இல்லையென்றால் தேர்தலைச் சந்திக்க உடனடியாகச் சந்திக்க, ஏற்கெனவே நடந்து முடிந்த தேர்தலில் பெற்ற வாக்குகளின் அடிப்படையில் கணக்கிட்டு மீண்டும் ஒரு பொதுத் தேர்தலைப் போன்று ஒரு தேர்தலைச் சந்திக்க, அதனால் ஏற்பட இருக்கிற நிலைமைகளை எண்ணிப் பார்த்து பயப்படுகிறதோ என்கிற உணர்வுதான் இன்றைக்கு எங்களைப்போன்ற எதிர்க் கட்சிகளுக்கும், தமிழக மக்களுக்கும் ஏற்படுகிறது.

அது மட்டுமல்ல. மாநகராட்சிக்கு வயது வரம்பை ஏற்கெனவே 21 என்று அறிவித்து 1980லே இருந்து அமலிலிருந்து வருவதை, 1986-லே பல இலட்சம் இளைஞர்கள் தமிழகத்திலே வாக்களித்த இந்த உரிமையை, நீங்கள் மீண்டும் சட்டம் கொண்டு வந்து, ஏற்கெனவே கொடுத்த அந்த உரிமையை இளைஞர்களிடத்திலேயிருந்து பறிக்கிறீர்களே, அது என்ன நியாயம்? இப்போது 18 வயது வாக்காளர்களுக்கு வாக்கெடுப்புப் பட்டியல் எடுக்க 6 மாதமாகும், ஓராண்டு ஆகும் என்றால், உடனே தேர்தல் நடத்துவதற்காக நீங்கள் இப்படிச் செய்கிறீர்கள் என்பதைக்கூட வாதத்திற்காக ஒப்புக்கொள்ளலாம். மத்திய அரசு அறிவித்தபடி, மக்களின் பார்வைக்காக, திருத்தப்பட்டு வெளியிடப்படுகிற வாக்காளர் பட்டியல், 18 வயது உள்ளடக்கிய அந்த வாக்காளர் பட்டியல் 23—5—1989-லே, வாக்காளர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடப்படும் என்று அரசு சார்பிலே தெளிவாக அறிவிக்கப்பட்டுவிட்டது. இஸ்லாமிய சகோதரர்களின் நலன் கருதி இரண்டு வாரம் தள்ளி வைக்கிறீர்கள். மகிழ்ச்சி இரண்டு வாரம் என்றால், ஏற்கெனவே ஏப்ரல் கடைசியில் என்று அறிவித்தீர்கள். இப்போது மே மாதத்திலே அந்தத் தேர்தல் வர இருக்கிறது உங்களுடைய அறிவிப்புப்படி. அந்த இரண்டு வாரத்தோடு இன்னும் இரண்டு வாரமோ ஒரு மாதமோ நீட்டித்தால் 18 வயதுக்கு உள்ளடக்கிய இளைஞர்களும் வாக்களிக்கிற உரிமையைப் பெறுவார்கள். ஒரு வேளை, 18-க்கும் 21-க்கும் இடையிலே இருக்கிற அந்த இளைஞர்கள் இந்த அரசை ஆதரிக்க மாட்டார்களோ என்கிற சந்தேகம் உங்களுக்கு இருக்கிறதோ என்கிற சந்தேகம் அதையொட்டி எங்களுக்கு மீண்டும் ஏற்படுகிறது. இளைஞர்களைக் கண்டு பயப்படுகிறீர்களா என்றுகூடத் தோன்றுகிறது எனவே 18 வயதிலிருந்து 21 வயது வரையுள்ள (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உள்ளாட்சி அமைப்புகளுக்கு, 18 வயது உள்ளவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படும் என்ற அடிப்படையிலே வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டுத்தான் ஊராட்சி மன்றம், நகராட்சி மன்றம் இவைகளுக்கான தேர்தல் நடைபெற்றது. அதில் தி.மு.க.-தான் மகத்தான வெற்றி பெற்றது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பிறகு ஏன் யோசிக்கிறீர்கள்? பிறகு ஏன் பயப்படு கிறீர்கள் ? (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றங்களுக்கு 18 வயது உள்ளவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படும் என்று முன் பிருந்த அண்ணா தி.மு.க. அறிவித்து விட்டு, பயந்தவர்கள் அவர்கள்தான். மாநகராட்சிகளுக்கு ஏன் அந்த வாக்காளர் பட்டியலைத் தயாரித்து அவர்கள் தேர்தல் நடத்த முன்வர வில்லை ?

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, உள்ளாட்சித் தேர்தல் தொடர்ந்து 10, 15 ஆண்டுகாலம் நடை பெறாமல் இருந்ததை நடத்தியதே முன்னால் இருந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரசுதான் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தோழமைக் கட்சி, உள்ளாட்சி அமைப்பு களுக்குத் தேர்தல் நடத்த வேண்டுமென்று போராடிய பிறகு, இந்த அரசு பணிந்ததே தவிர அவர்களாக நடத்த முன்வர வில்லை.

திரு. எஸ். திருநாவுக்கரசு: அது உங்கள் கருத்து. நீங்கள் போராடியிருந்தாலும், போராடவில்லை என்றாலும், தேர்தல் வந்துதான் இருக்கும் உங்கள் போராட்டத்திற்காகத் தேர்தல்

1989 பிப்ரவரி 17] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

நடைபெறவில்லை. எனவே, 18 வயது உள்ளடக்கிய இளைஞர்களுக்கு வாய்ப்புத் தந்து, இந்தத் தேர்தலை இந்த அரசு நடத்த வேண்டுமென்று தமிழகத்தில் இருக்கின்ற (குறுக்கீடு).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி): மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசிய பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளக்கப் பேருரை ஆற்ற இருக்கின்றார்கள். எனவே, அவர்களுடைய நேரத்தை எடுத்துக் கொள்ளுகின்ற வகையிலே இடையிலே தயவுசெய்து குறுக்கீடு செய்யாமல் இருப்பது மிகவும் நல்லது. தயவுசெய்து விளக்கத்திற்காகக் குறுக்கீடு செய்யவேண்டாம் என்று தெரிவித்து அவர்களை அமருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: எனவே, தேர்தலை 18 வயது உள்ளடக்கிய இளைஞர்களுக்கு வாய்ப்புத் தந்து நடத்துமாறு இந்த அரசை எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மட்டுமல்ல, இங்கே உட்கார்ந்திருக்கின்ற அனைத்து எதிர்க் கட்சிகளும் இதை ஆதரித்து வேண்டிக்கொள்கிறார்கள். இதிலே ஒரு கட்சிகூட, தமிழகத்தில் இருக்கிற ஒரு அமைப்புகூட 18 வயதிலிருந்து 21 வயது உள்ளவர்களை விட்டுவிட்டு தேர்தல் நடத்துவதை ஆதரிக்கவில்லை என்று அத்தனை பேரும் சொன்னதற்குப் பின்னாலேயும், உடும்புப் பிடியாக, 15 நாள் வேறுபாட்டுக்குள்ளே நாங்கள் தேர்தலை நடத்தித் தான் ஆவோம், இந்த வாய்ப்பை இளைஞர்களுக்குத் தர மாட்டோம் என்று மறுக்கிறீர்களே, அது நியாயம் அல்ல. மக்களின் உணர்வுக்கும், அனைத்து எதிர்க்கட்சிகளின் உணர்வுக்கும் நீங்கள் மதிப்பளித்து, அந்த வாய்ப்பை இளைஞர்களுக்குத் தாருங்கள் என்று இந்த அரசை நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, முதல்வரின் சத்துணவுத் திட்டத்தைப்பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறீர்கள். மகிழ்ச்சிதான். சட்டமன்றத்திற்கு உள்ளேயேகூட இந்தத் திட்டம் கடுமையாக, அது கொண்டு வரப் பட்டபோது விமர்சிக்கப்பட்டது. தட்டு ஏந்த வைக்கிற திட்டம், பிச்சைக்காரர்களாக ஆக்குகிற திட்டம் என்றெல்லாம் பல்வேறு தரப்பிலேயும் குற்றம் சாட்டப்பட்டு, வேண்டாமென்று கூறப் பட்ட இந்தத் திட்டம் இன்றைக்கு மேலும் சத்துள்ள திட்டமாக ஆக்கப்படும் என்று உங்களுடைய ஆளுநர் அவர்களுடைய

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1982 பிப்ரவரி 17

உரையில் நீங்கள் குறிப்பிட்டிருப்பது இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவன் என்கின்ற முறையில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். எங்களுடைய இயக்கத்தின் சார்பிலே, இதிலே இந்தத் திட்டம் கொண்டு வருகிற பொழுதே, கொண்டு வந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., எம்.ஜி. ஆரின் சத்துணவுத் திட்டம் என்றோ, தன் தாயார் பெயரிலே சத்தியா சத்துணவுத் திட்டம் என்றோ வேறு தலைவர்களின் பேரிலோ இந்தத் திட்டத்தைக் கொண்டு வராமல், முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் என்று கொண்டு வந்தார். ஏன் கொண்டு வந்தார் என்றால், இது வயிற்றுப் பிரச்சினை. தமிழகத்தில் இருக்கிற 90 லட்சம் ஏழை எளிய குழந்தைகளினுடைய வாழ்வுப் பிரச்சினை. பசிக் கொடுமையை உணர்ந்திருந்த முதலமைச்சர் தமிழ் நாட்டிலுள்ள எந்தக் குழந்தையும் பட்டினி கிடக்கக் கூடாது என்கிற தாராள மனப்பான்மையோடு இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தபொழுது அதிகாரிகள், 200 கோடி ஆகுமே என்று பயமுறுத்தியபொழுது கூட நான் பிச்சை எடுத்தாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவேன். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை என்றால் அன்றைக்கே முதலமைச்சர் இருக்கையிலேயிருந்து வெளியேறுவேன் என்று அறிவித்து இந்தத் திட்டத்தை அன்றைக்கிருந்த முதலமைச்சர் புரட்சித் தலைவரவர்கள் கொண்டு வந்தார்கள்.

(முற்பகல் 10.40)

அந்தத் திட்டம் முதலமைச்சருடைய திட்டமாகவே தொடர வேண்டும். அரசுத் துறையிலேயே இருக்க வேண்டும். அப்போது தான் அதிலே தனிக் கவனம் செலுத்தப்படும் என்பது என்னுடைய கருத்தாகும். ஊராட்சி மன்றத் தலைவருக்கு, ஒன்றியப் பெருந் தலைவருக்கு பார்வையிடுகிற அதிகாரத்தை, குறைகள் இருப்பின் அவற்றைக் களைய நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தைக் கொடுங்கள். ஆனால் நிதி ஆதாரத்தை உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தயவுசெய்து தராதீர்கள். அது நேரே போய்ச் சேருகிறபோது, பஞ்சாயத்துத் தலைவர் வாயிலாக, பஞ்சாயத்து உறுப்பினர் வாயிலாக நேரே போய்ச் சேருகிறபோது 200 கோடி ரூபாயிலிருக்கிற திட்டம் நிச்சயமாக 100 கோடி ரூபாயாக வந்து சேரும். அதிலே உங்களுக்கு வேண்டுமானால் நிதி மிச்சப்படலாம். ஏற்கெனவே தவறுகள் இருந்தன என்று ஒரு அரசைக்

1989 பிப்ரவரி 17] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

குறை சொல்லவும் வேண்டுமானால் பயன்படுத்தலாம். ஆனால் தமிழ்நாட்டில் இருக்கிற ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் பாதிக்கப்படுவார்கள். இன்றைக்கு 50 பேர்களுக்கு சமைத்துப் போடுகிற உணவை—30 பேர்களுக்கு சமைத்து அதை 50 பேர்களுக்குப் போட்டால் அந்தக் குழந்தைகள் பசியும் பட்டினியுமாகத்தான் இருக்கும். வயிறார உண்டுகொண்டிருந்த ஏழைக் குழந்தைகள் வயிற்றிலே அடிக்கும் திட்டமாக இது மாற்றப்படக் கூடாது என்பதை அண்ணா தி.மு.கவின் கருத்தாக நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல இரண்டேகால் இலட்சம் ஊழியர்களுக்கும் நீங்கள் நிரந்தர பகுதி நேரமாக மாற்றுவது, அப்படி மாற்றியதற்குப் பின்னால் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைப்பது. முதலிலே சொன்னது வரவேற்கத்தக்கது. இரண்டாவது சொன்னது வேதனை தரக்கூடியது; கண்டனத்திற்குரியது. உள்ளாட்சி அமைப்புகளிலே இருந்த பலரும் எங்களை உள்ளாட்சியிலிருந்து விட்டுவிடுங்கள் என்று கடந்த காலத்திலே போராடினார்கள். ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, வேறு யாராக இருந்தாலும் சரி, இப்படிப்பட்ட பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த எல்லோரும் ஒவ்வொரு கட்டமாகப் போராடி அரசுத் துறையிலே வந்து சேர்ந்துகொண்டார்கள். நீங்கள் கூட தேர்தல் நேரத்திலே இதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். பாதிப்பு இல்லாமல் பார்த்துக்கொள்வதாகச் சொன்னீர்கள்; இப்போது பார்த்துக் கொள்ளவில்லை. நாங்கள் ஆட்சியில் இருந்தபோது பல்வேறு துறைகளில் பணியாற்றுகின்ற ஊழியர்களும் அரசைக் கேட்டுக் கொண்ட அடிப்படையில்தான் அந்த மாற்றங்கள் நிகழ்ந்தன. இப்போது அந்த அதிகாரம் திருப்பித் தரப்படும் என்றால் மீண்டும் ஆசிரியர்கள் ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பிலே விடப்படுவார்களா? அதைப்போல அனைத்தையும் திருப்பித்தரப் போகிறீர்களா? அனைத்து அதிகாரங்களையும் மீண்டும் கொடுக்கப்போகிறீர்களா? அதைப்போன்று பல்வேறு துறைகளிலும் சேர்க்கப்பட்டிருக்கிற அந்தந்தப் பிரிவுகளில் உள்ளவர்களை ஏற்கெனவே உள்ளமாதிரி கொண்டுவரப்போகிறீர்களா?

அவர்களை எல்லாம் உள்ளாட்சி அமைப்புக்கு மீண்டும் கொண்டு போகிறபோது, ஏற்கெனவே பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள் எப்படிப் போராடினார்களோ அதைப்போன்று மீண்டும் போராடுகின்ற ஒரு கட்டாயச் சூழ்நிலை உருவாகும்.

அதையும் இந்த அரசு சந்திக்க வேண்டியிருக்கும். அதைவிட இப்போதே அவர்களை நிரந்தரமான பகுதிநேர ஊழியர்களாகவோ, முழுநேர ஊழியர்களாகவோ அரசுத் துறையிலே வைத்துக்கொள்வது வரவேற்கத்தக்கது; அப்படிச் செய்யுமாறு இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டம் மேலும் சத்துள்ள திட்டமாக ஆக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. மகிழ்ச்சி, இன்றைக்கு முதலமைச்சராக இருக்கிறவர் அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது இந்தச் சட்டமன்றத்தில் பேசும்போது சொன்னார்கள். தட்டிலே போடுவதற்குப் பதிலாக இலையிலே போடுங்கள்; முடிந்தால் ஒருவேளைக்குப் பதிலாக மூன்றுவேளை போடுங்கள்; முட்டையோடு போடுங்கள் வரவேற்கிறேன் என்று சொன்னார்கள். இன்றைக்கு அவர்களே முதலமைச்சராக வந்திருக்கிறார்கள். அதனால் அவர்கள் மூன்றுவேளையும் போடுவார்கள், இலையிலே போடுவார்கள், முட்டையோடு போடுவார்கள் என்று தமிழ்நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்; நாங்களும் எதிர்பார்க்கின்றோம். அந்த வகையிலே இந்தச் சத்துணவுத் திட்டத்தை சத்தான திட்டமாக மாற்ற வேண்டுமென்று அண்ணா தி.மு.க. சார்பிலே இந்த அரசை, முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவுத் திட்டத்தில் முன்பிருந்த அண்ணா தி.மு.க. ஆட்சியில் வாழைப்பழத்தை, கீரையை, பாயாசத்தை வைத்து ஏமாற்றியதைப் போல எங்கள் தலைவர் ஏமாற்ற மாட்டார்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி): அமைச்சர் பெருமக்களுக்கு ஒரு வேண்டுகோள். அமைச்சரவையின் தலைவர் விரிவாக விளக்கம் அளிக்கவிருப்பதால் அருள் கூர்ந்து இடையிடையே குறுக்கிட்டு, மற்றவர்களுடைய நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு, எதிர்க்கட்சித் துணைத் தலைவரைப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, பேசுகின்றபோது குறுக்கிட்டுப் பேசுகின்றவர்கள் விளக்கம் கொடுக்கின்ற வகையில் இருக்க வேண்டுமே தவிர அவர்கள் ஏதாவது புதுக்

1989 பிப்ரவரி 17] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

கருத்துக்களைச் சொல்வதற்கு தாங்கள் அனுமதிக்கக் கூடாது. ஏற்கெனவே அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்ற நேரத்தை யும் கணக்கெடுத்துச் சேர்த்து எனக்குப் பின்னால் தரவேண்டும் என்று நான் உங்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி): எதிர்க் கட்சித் துணைத்தலைவர் அவர்கள் 10-06-க்கு ஆரம்பித்தீர்கள். 11-10-க்கு முடித்துவிட்டால் நலமாக இருக்கும். எல்லா நேரத்தையும் சேர்த்துத்தான் நான் சொல்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1457 கோடி ரூபாய் அளவிற்கான திட்டத்தினைக் குறைக்கவேண்டும் என்று முதல்வர் அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக் கொண்டு அந்த 1457 கோடி ரூபாய் அளவிற்கான திட்டத் திலே நீங்கள் எவ்வளவு கோடிக்குக் குறைக்கப் போகிறீர்கள், எந்தெந்தத் திட்டங்களை எல்லாம் கைவிடப் போகிறீர்கள் என்பதையெல்லாம் நாங்கள் முதலமைச்சருடைய உரையிலே எதிர்பார்க்கிறோம். அவர்கள் அதை எடுத்துச் சொல்வார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

செருப்பு பெரியதாக இருந்தால்—மன்னிக்கவும்—செருப்பு சிறியதாக இருந்தால் அதற்காகக் காலை வெட்டிக் கொள்வது நல்லதாக இருக்காது. வேறு செருப்புதான் வாங்கவேண்டும். எனவே பணம் இல்லை என்பதற்காகத் திட்டத்தைக் குறைக் காமல் நிதியாதாரத்தைப் பெருக்கி எப்படி நிறைவேற்றுவது என்கிற முயற்சியிலே இந்த அரசு ஈடுபட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாற்றுத் தலைவர் அவர்களே, காலில் செருப்பு இருக்கும்போது பெரிய செருப்பு வாங்கப்பட்டுவிட்டது. அதனால்தான் பெரிய செருப்பை மாற்றிவிட்டு சிறிய செருப்பாக, காலுக்குப் பொருத்தமாகப் போட்டுக்கொள்ள விரும்புகிறோம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாற்றுத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் சொன்னேன். அதை மாற்றுங்கள். எப்படி மாற்ற வேண்டுமென்றால், காலை மாற்ற வேண்டாம். செருப்பை மாற்றுங்கள் என்றுதான் நானும் சொல்கிறேன். திட்டத்தைக்

குறைக்க வேண்டாம். திட்டத்தை வைத்துக் கொண்டு திட்டத்திற்கான நிதியாதாரத்தைப் பெருக்குங்கள் என்றுதான், அந்த அடிப்படையில்தான் நானும் குறிப்பிட்டேன்.

அதற்கடுத்து, பத்தி 26-லே நீங்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறீர்கள். ஏழை எளிய மக்களுடைய தோள்மீது சுமத்தாமல் வரிகள் வரும் என்பதற்கான அறிவிப்புகளை பத்தி 26-லே சொல்லியிருக்கிறீர்கள். வந்தவுடனே மக்களுக்கு வசதி செய்வீர்களோ இல்லையோ வரி போடுவதில் மிக ஆர்வத்தோடு இருக்கிறீர்கள் என்பதை இந்த ஆளுநர் உரையிலே பார்க்க முடிகிறது. அந்த வரிச் சுமைகள் ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டியிருப்பதைப் போல ஏழை எளிய மக்களைப் பாதிக்காமல் இருக்கவேண்டும். அந்த வகையிலே அது அமைய வேண்டுமென்று இந்த அரசை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள் என்று எந்த அளவில் வரி சுமத்தப்பட்டாலும் அந்தச் சுமைகள் எல்லாம் இறுதியிலே அதனை வாங்கி உபயோகப்படுத்துகிறவர்கள் தலையிலேதான் வந்து விழும். எனவே அந்த அடிப்படையில் எண்ணிப் பார்த்து வரிவிதிப்பை வைத்துக் கொள்ளவேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இது தவிர, ஏராளமானவற்றைத் தேர்தல் நேரத்தில் தருவோம் என்று சொன்ன வாக்குறுதிகளை மக்கள் இந்த ஆளுநர் உரையிலே எதிர்பார்த்து ஏமாந்து இருக்கிறார்கள். அதிலே தமிழ் நாட்டில் இருக்கின்ற மக்களை மிகுந்த பாதிப்புக்கு உள்ளாக்கியிருக்கிற காவிரி நீர்ப் பிரச்சினைக்கு எந்த வகையில் தீர்வு காணப் போகிறீர்கள் என்பதற்கான விளக்கங்கள் இல்லை. நேற்றைக்குக் கூட நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கலந்து கொண்டுதான் அரசு முடிவெடுக்கும் என்று சொன்னார்கள். ஆனால் நேற்றைக்கு கர்நாடக மாநிலத்தில் உரையாற்றிய கர்நாடக மாநில ஆளுநர் அங்கே பேசிய பேச்சு இன்றைக்கு தினத்தந்தி பத்திரிகை உட்பட அனைத்துப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. அதைச் சுட்டிக் காட்டுகிறேன்.

முதலமைச்சருடைய பெயரைப் போட்டு அவர் பதவி ஏற்பதற்கு முன்னதாக, நீண்ட நாளைய காவிரித் தண்ணீர் பிரச்சினைக்கு பரஸ்பரம் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு

1989 பிப்ரவரி 17] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

காணப்படும் எனத் தெளிவாக அறிவுறுத்தியிருக்கிறார்--அதாவது நமது தமிழக முதல்வர் அவர்கள் இவ்வாறு அறிவித்திருக்கிறார்—இதற்காகவே அவரைப் பாராட்டுகிறோம் என்று கர்நாடக மாநில அரசு இந்த மாநில மாண்புமிகு முதலமைச்சரைப் பாராட்டியிருக்கிறது. ஏற்கெனவே ட்ரிப்யூனலுக்கு விட வேண்டுமென்று முடிவெடுத்திருக்கிறது. அதுபற்றிய உங்களுடைய விளக்கங்களை அறிந்துகொள்ள விரும்புகிறோம். விரைவில் தமிழ்நாட்டு மக்களுக்கு, விவசாய மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற பாதிப்பைப் போக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் மாநில அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் என்றீர்கள். அதைப்பற்றி ஆளுநர் அவர்கள் உரையிலே ஒன்றும் இல்லை. வருகிற நிதிநிலை அறிக்கையிலே கண்டிப்பாக இடம் பெறும் என்று நம்புகிறேன். இடம் பெற வேண்டுமென்று மாநில அரசு ஊழியர்கள் சார்பிலே கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

அதுபோலவே தெலுங்கு கங்கை திட்டம். சென்னை மாநகரத்திற்கு குடி தண்ணீர் தருகின்ற திட்டம் பற்றிக் குறிப்பு இல்லை.

இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே இன்றைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை என்ன என்பது பற்றி எதுவும் இல்லை. ஆட்சியின் சார்பிலே கூறப்படவில்லை. I.P.K.F. என்று சொல்லப்படுகின்ற Indian Peace Keeping Force அங்கேயிருந்து உடனடியாக நீக்கப்படவேண்டுமென்று, அகற்றப்பட வேண்டுமென்று, திரும்பப் பெறப்பட வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழக கொள்கையாக இன்றைய நமமுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து சொல்லி வந்திருக்கின்றார்கள். இன்றைக்கு I'P.K.F. இலங்கையிலே இருக்க வேண்டுமா ? இருக்க வேண்டாமா ? உடனடியாக திரும்பி விட வேண்டுமா ? அல்லது காலந்தாழ்த்தி வரலாமா ? காலந்தாழ்த்தி வரலாம் என்றால் எவ்வளவு காலம் தாழ்த்தி வரலாம்? இதிலே உங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதுபோலவே ஏற்கெனவே ஏற்பட்டிருக்கின்ற உடன்பாடு சரி தானா ? அன்றைக்கு அந்த உடன்பாடு சரியில்லையென்றார்களே, இன்றைக்கு அதை ஏற்றுக் கொள்கிறீர்களா ? அப்படி

யில்லை என்றால் அந்த உடன்பாட்டிலே திருத்தங்கள் இருந்தால், எந்தெந்த வகையிலே திருத்தங்கள் வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தப் போகிறீர்கள் என்பதையெல்லாம் தமிழக மக்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள், இலங்கைத் தமிழர்கள் உட்பட.

விவசாயிகள் கடன்களைத் தள்ளுபடி செய்வோம் என்றீர்கள். எந்தெந்த முறையிலே தள்ளுபடி செய்யப் போகிறீர்கள்?

தொழில் வளர்ச்சித் திட்டம் இல்லை. நெசவாளர்கள் Rebate குறைக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி எதையும் சொல்லவில்லை.

அதுபோலவே, வன்னியர் சமுதாயப் பிரச்சினை வன்னிய சமுதாயம் எழுப்பியிருக்கின்ற பிரச்சினை, அதுபோன்று மற்ற சமுதாயத்தினர் எழுப்பியிருக்கின்ற பிரச்சினைகள் இவை களுக்கு எல்லாம் எப்படித் தீர்வு காணப் போகிறீர்கள்? இன்றைய முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, அல்லது ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் கர்நாடகத்தைப்போல் ஜாதிவாரி அடிப்படையிலே பிரதிநிதித்துவம் தருவோம் என்று அவர்கள் சொன்னதாக பத்திரிகை பேட்டிகளிலே, அனைத்துப் பத்திரிகைகளிலே வந்திருக்கிறது. அந்த ஜாதிவாரி பிரதிநிதித் துவத்தை எப்போது அறிவிக்கப் போகிறீர்கள் என்பதை தமிழ் நாட்டு மக்கள் பல்வேறு பிரிவினைச் சேர்ந்த சமுதாயத்தினர். எதிர்பார்க்கிறார்கள். அதுபோல, ஆதிதிராவிடர்கள் தனித் திட்டங்கள், வீடு கட்டுகிற திட்டங்கள், பிரத்தியேகத் திட்டங்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான கருத்து இடம் பெறக்கூடாது என்ப தற்காகச் சொல்கிறேன். கர்நாடகத்தில் இருப்பதுபோல ஜாதி வாரியாகத் தரப்படும் என்று நான் என்றைக்கும் சொல்லவில்லை. அப்படி யாராவது சொல்லி இருந்தாலோ பத்திரிகையிலே வந்தி ருந்தாலோ, அது தவறு. நான் அப்போது சொன்னதை இப்போது சொல்கிறேன். கர்நாடகம், கேரளம், ஆந்திரம் ஆகிய இடங்களில் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காணப்பட்டிருப்ப தாகக் கிளர்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். கோரிக்கை வைத்திருப்

பவர்கள் கூறுகிறார்கள். அவைகளை எல்லாம் அரசு ஆலோசித்து ஒரு முடிவெடுக்க வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறேனே அல்லாமல் அதைப்போலவே இருக்கவேண்டும் என்று சொல்லவில்லை.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர்வர்களே, என் நினைவு சரியாக இருக்குமானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பத்திரிகைப் பேட்டியிலே தெளிவாக மற்ற மாநிலங்களிலே ஜாதிவாரியாக பிரதிநிதித்துவம் கொடுத்திருக்கின்றார்கள், அந்த அடிப்படையிலே இங்கே நாங்களும் பிரதிநிதித்துவம் தருவோம். ஜாதிகள் என்ற வார்த்தையை சொல்லி குறிப்பிடப்பட்டு அந்த அடிப்படையிலே ஜாதிவாரியாக நாங்களும் மற்ற மாநிலத்திலே இருப்பதுபோல இங்கே அறிவிப்போம் என்று சொன்னது பத்திரிகையிலே வந்திருக்கிறது. நான் எடுத்துக் காட்டுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கர்நாடகத்திலே ஜாதிவாரியாக இல்லை. அங்கே பொருளாதார ரீதியிலேகூட பிரித்துத் தரப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்போது நான் சொல்லியிருக்கவே இயலாது. ஏனென்றால் மற்ற மாநிலங்களிலே இந்தப் பிரச்சினை எப்படி அணுகப்பட்டிருக்கிறது என்பதை ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டுமென்றுதான் கூறியிருக்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கர்நாடகத்தில் பொருளாதார அடிப்படையிலேயும், ஜாதிவாரி அடிப்படையிலேயும், அதுபோலவே, கேரளாவிலேயும் பொருளாதார அடிப்படையிலேயும், ஜாதிவாரி அடிப்படையிலேயும் இந்த இரண்டையும் வைத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நீங்கள் இப்போது சொல்கிறீர்கள். இது உங்கள் கருத்தாக இருந்தால் ஏற்றுக்கொள்கிறோம். பத்திரிகையிலே அப்படி வந்தது. உங்களிடத்திலே, வந்த செய்தியைக் காட்டுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பத்திரிகையில் கருணாநிதிக்காகவும், வீரப்பனை அடக்குவதற்காகவும்தான் மேலவை கலைக்கப்பட்டது என்று உங்கள் தலைவர் எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதாகக்கூட வந்திருக்கிறது. என்னிடத்திலே ஆதாரம் இருக்கிறது.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிராமத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள். 'மூழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போட வேண்டாம்' என்று சொல்வார்கள். அதுபோல அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. பத்திரிகையிலே பல செய்திகள் வருகின்றன. அரசியல் ரீதியாக பல செய்திகள் வருகின்றன. (சிரிப்பு) நீங்கள் எல்லாம் சிரிக்க உரிமை பெற்றிருக்கிறீர்கள். நீங்கள் சிரியுங்கள். எனக்கு ஆட்சேபணை இல்லை. நானும் உங்களோடு சேர்ந்து சிரிக்கிறேன். ஆனால் முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்தால், பொறுப்பேற்றதற்குப் பின்னால் என்னென்ன செய்யப் போகிறோம் என்று சொல்கிறபோது அதைச் சொன்னார்கள். அரசியல் ரீதியாக தர்க்கங்கள், வாதங்கள், பிரதிவாதங்கள், பல்வேறு கருத்துக்கள் வருவது வேறு. அறிவிப்புகள் வருவது வேறு. இதுவும் அதுபோல அரசியல் கருத்து என்றால் நான் விட்டுவிடுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு தவறான கிளர்ச்சிக்கு விதை விதைத்து விடக் கூடாது, கிளர்ச்சியைத் தூண்டும் அளவுக்கு சட்டமன்றத்தைப் பயன்படுத்தக் கூடாது. அதற்காகச் சொல்கிறேன். பிற்படுத்தப்பட்டவர்கள், மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு எல்லாக் குறைபாடுகள் இருக்கின்றன. மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் இவர்களுடைய குறைபாடுகள் எல்லா சமூக நலன்களையும் முன்வைத்துத் தீர்க்கப்படும் என்றுதான் பலமுறை நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது அன்றைக்கு எதிர்க் கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் பல்வேறுவிதமான திடீர் போராட்டங்களை அநேகமாக மாதத்திற்கு ஒன்று, இரண்டு என்கிற விதத்திலே நடத்திக்கொண்டிருந்தது. ஆனால் நாங்களும் அந்த அடிப்படையில் தொடர்ந்து போராட்டங்களையோ அல்லது வன்முறைகளையோ தமிழ்நாட்டிலே நடத்தும் விதத்திலோ, எதையும் தூண்டும் விதத்திலோ அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உதவியாக இருக்க மாட்டோம், உங்களுக்கு ஒத்துழைப்பாக

இருப்போம் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இங்கே அறிவிப்பைப் பற்றிதான் சுட்டிக் காட்டினேன். அதையும் இத்துடன் விட்டுவிடுகிறேன்.

அடுத்து, கிராமங்களில் குடிதண்ணீர் வசதி, போக்குவரத்து வசதி, மருத்துவ வசதி, ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்த 30 லட்சம் வீடுகள் கட்டுகின்ற திட்டங்கள் பற்றி எல்லாம் எந்த குறிப்புகளும் இல்லை. இதுபோல நான் பலவற்றைச் சொல்லிக் கொண்டே போகலாம். இப்போதே பேராசிரியர் அவர்கள் சிரிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 30 லட்சம் வீடுகள் கட்டித் தருகிற திட்டம் நாங்கள் அறிவித்தது அல்ல. அறிவித்தவர்களே கூட அதுபற்றிக் கவலைப் படவில்லை. (சிரிப்பு).

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே. இந்த அரசு அறிவித்தது என்று நான் சொல்லவில்லை. ஏற் கெனவே இருந்த அரசு அறிவித்திருந்த திட்டம் தொடருமா என்றுதான் கேட்டேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அறிவித்த அரசாங்கமே அதுபற்றிக் கவலைப்படாமலே போய்விட்டது. ஆகவே, அதுபற்றி நாங்கள் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசாங்கம் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லையென் றாலும் தமிழ்நாட்டு மக்கள் அதுபற்றிக் கவலைப்படுகிறார்கள். அதுபோல ஏற்கெனவே அதுபற்றி அறிவித்த நாங்கள் கவலைப் பட்டுதான் ஆண்டுதோறும் அந்தத் திட்டத்தை, நிதி ஆதாரத் துக்கு உட்பட்டு, நிறைவேற்றிக்கொண்டுதான் இருந்தோம். அதை விட்டுவிடவில்லை. அத்திட்டத்தை மேலும் சிறப்பாகத் தொடர வேண்டுமென்றுதான் நான் அரசைக் கேட்டுக்கொள்கி றேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஓர் விளக்கம். 30 லட்சம் வீடுகள் மூன்று ஆண்டுகளில் கட்டுவதாக அறிவித்தார்கள். ஏழையெளிய மக்க

ளுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு சாதாரண வீடு கட்டுவதாக இருந்தால் கூட 10 ஆயிரம் ரூபாய் இல்லாமல் வீடு கட்ட முடியாது. 3 ஆயிரம் கோடி ரூபாய்க்கான திட்டம் 3 ஆண்டுகளில் அதனை நிறைவேற்றுவதாகச் சொல்லி, தினசரி பத்திரிகைகளில் ஒரு பக்க விளம்பரம் வந்தது. இந்து, எக்ஸ்பிரஸ், தினமணி போன்ற பத்திரிகைகளில் எல்லாம் ஒரு பக்க விளம்பரம் வந்தது. அப்போது அதுபற்றி அமைச்சர்களை அணுகிக் கேட்ட போது, அதை நிறைவேற்ற 3 கோடி, 5 கோடி, 10 கோடி என்கிற அளவில்தான் ஆண்டுதோறும் நிதியுதவி கிடைக்கும், இது ஒரு பெரிய நல்ல நோக்கமுடைய திட்டம் என்பதற்காகச் சொன்னோமேயொழிய நிறைவேற்ற முடியும் என்கிற நம்பிக்கையிலே சொல்லவில்லை என்பதாக அன்றைக்கு நிதியமைச்சராக இருந்த நாவலர் அவர்களே சொன்னார்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, எங்கள் அரசு, அன்றைய முதலமைச்சர் அவர்கள் சொன்னது போல 3 ஆண்டுகளிலே செய்வோம் என்று சொல்லித்தான் திட்டத்தைத் தொடங்கினோம். ஆனால் 3 ஆண்டுகளில் முடியவில்லை. இப்போது புதிய அரசு ஆட்சிக்கு வந்திருக்கிறது. தொடர்ந்து இந்த அரசு அதைச் செய்ய வேண்டுமென்று சொல்கிறோம். அதில் ஒன்றும் தவறில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது, 1972, 1973, 1974 ஆண்டுகளிலே எத்தனையோ வாக்குறுதிகளைத் தந்துள்ளது. அவற்றை நான் அவைக் குறிப்பிலே படித்துப் பார்த்தேன். உதாரணத்திற்கு, உழுபவர்களுக்கு நிலத்தைச் சொந்தமாக்குவோம், டிரஸ்டி முறையை ஒழிப்போம், இன்னும் தமிழ்நாட்டிலே இருக்கிற திரைப்பட அரங்குகளை எல்லாம் அன்றைக்கு யார் மீதோ இருந்த கோபத்திலே தேசியமயமாக்குவோம் என்றெல்லாம் சொன்னீர்கள். அதுபோல 1974 ஆம் ஆண்டிலே அன்றைக்கு ஆட்சியில் இருந்த முதலமைச்சர் அவர்கள் அறிவித்த, ஆனால் நடைமுறைப்படுத்தப்படாத பல திட்டங்களை நான் இங்கே சுட்டிக்காட்ட முடியும். அதுபோல எங்கள் அரசு அன்றைக்கு நல்ல நோக்கத்தில் அறிவித்ததை, நிறைவேற்ற முயன்றதை, நீங்கள் தொடர்ந்து முயற்சி செய்யுங்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

1989 பிப்ரவரி 17] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

அடுத்து, ஒரு வாரப் பத்திரிகையில் ஒரு கார்ட்டூன் போட்டிருக்கிறார்கள். அதை, நகைச்சுவை உணர்வு மிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நகைச்சுவை உணர்வோடு எடுத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அந்த வாரப் பத்திரிகை நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய, அரசினுடைய நிதிநிலை பற்றி சொல்கின்றபோது ஒன்றைச் சொல்லியிருக்கிறது. முதலமைச்சர் " கஜானா காலி களஞ்சியமும் காலி " என்று கையை விரிக்கிறார். உடனே எதிரில் இருக்கிற ஒருவர் முதலமைச்சர் பதவிக்கு வந்த உடனேயே ஏன் 'கஜானாவும் காலி, களஞ்சியமும் காலி" என்று சொல்கிறார் என்று கேட்கிறார். உடனே "வேறு எப்படி சொல்ல முடியும், நாங்கள் தேர்தலுக்கு முன்னால் கொடுத்த வாக்குறுதிகள் எல்லாம் காலி என்றா சொல்ல முடியும்" என்று உடனே அவர் பதில் சொல்கிறார்.

(முற்பகல் 11-00)

எனவே நீங்கள் அறிவித்த திட்டங்களை நிறைவேற்ற முயற்சிப்பதற்குப் பதிலாக, கஜானா காலி, களஞ்சியம் காலி என்று கூறி தமிழ்நாட்டு மக்களிடத்திலே, ஏதோ தமிழ்நாடு நிதி நிலை ஜீரோவாக இருப்பதுபோல்—பற்றாக்குறை இருப்பது வேறு சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் பாமர மக்களைக் குழப்புவதற்காக அரசாங்கத்தினுடைய கையிலே ஒரு பைசாகூட இல்லை என்று சொல்லுமளவுக்கு, கஜானா முழுவதும் காலி, களஞ்சியம் முழுவதும் காலி, தமிழகத்தில் ஆட்சியிலே உட்காரப் போகும் நாங்கள் ஜீரோவிலிருந்து துவங்க வேண்டுமென்ற உணர்வை ஏழை எளிய மக்களிடத்தில் உண்டாக்கலாமே தவிர, அவர்களைத் தொடர்ந்து ஏமாற்ற முடியாது. நிதி ஆதாரங்களைப் பெருக்கும் முயற்சிகளை மேற்கொள்வோம் என்று சொல்லி இருக்கிறார்கள். அதை நாங்கள் பாராட்டுகிறோம். இன்றைக்குச் செய்ய வேண்டிய சில பிரச்சினைகளை இந்த அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்று தமிழகம் பருவ மழையின்மையால் பாதிக்கப்பட்டிருக்கிறது ; நெல் உற்பத்தியில் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிச் சொல்லப்பட்டிருப்பது உண்மைதான். யதார்த்தமான உண்மையும் அது தான். இன்றைக்கு வானம் பார்த்த பூமியாக இருக்கிற புதுக்கோட்டை, இராமநாதபுரம், காமராஜ், பசும்பொன், மதுரை,

அண்ணா, தர்மபுரி இப்படி பல மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இப்படி வறட்சி ஏற்பட்டிருக்கிற மாவட்டங்களை, வறட்சி மாவட்டங்களாக அறிவித்து, மத்திய அரசினுடைய நிதி உதவியைப் பெற நீங்கள் முயற்சிக்க வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். வறட்சி மாவட்டம் என்று அறிவித்தால்தான், மத்திய அரசு உதவி தரும், மாவட்டங்களுக்கு உதவி என்று பல கோடிகளை நாம் பெற முடியும். ஏற்கெனவே இருந்த அரசு வறட்சி ஏற்பட்டபோது, 20, 25 நாட்கள் அறிக்கை தாமதப்பட்டு அனுப்பியதற்கே இப்போதைய முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது வருத்தப்பட்டுப் பேசினார்கள், மக்கள் நலன் கருதி அதையே இன்றைக்கு மனதிலே கொண்டு, காலந்தாழ்த்தாமல் ஒரு வாரம், 10 நாட்களுக்குள்ளாக தமிழகம் முழுவதும் விளைச்சல் இல்லாத பகுதிகளைக் கணக்கிலே எடுத்து, அந்தப் பகுதிகளைப் பின்தங்கிய பகுதிகளாக, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக, தாலுக்காக்களாக, மாவட்டங்களாக அறிவித்து, மத்திய அரசினுடைய உதவியைப் பெற்று, உங்களுடைய நிதி ஆதாரத்தைக் கொண்டு, விளைச்சல் இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கும் ஏழை எளிய மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க வாய்ப்புக் கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்ற ஆண்டு பெற்ற கூட்டுறவுக் கடன்கள், இந்த ஆண்டு பெற்றிருக்கிற கூட்டுறவுக் கடன்கள் இவற்றையெல்லாம் ரத்து செய்து, கஷ்டத்திலே வாழ்ந்து கொண்டிருக்கும் அந்த மக்களைக் காப்பாற்றுங்கள் என்று அந்த மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கத்தின் சார்பில் ஒரு சுற்றறிக்கை அறந்தாங்கியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வருவாய் ஆய்வாளர் தம்முடைய ஆளுகைக்குள் உள்ள ஒவ்வொரு வட்டத்திலும் வாரம் ஒன்றுக்கு 5000 ரூபாய் வீதம் இருசால் செய்ய வேண்டுமென்ற குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதை விரைந்து நிறைவேற்ற வேண்டுமென்று ந.க அ1—107/89. நாள் 3—2—89 சுற்றறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இது ரெவின்யு இன்ஸ்பெக்டருக்கு. வீ.ஏ.ஓ.வினருக்கு வாரத்திற்கு 1000 ரூபாய். அதை ஒரு வாரத்திற்குள் தர வேண்டுமென்றும், இல்லையென்றால் நடவடிக்கை என்று சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். எற்கெனவே விளைச்சல் இல்லாமல் பாதிக்கப்பட்

1989 பிப்ரவரி 17] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

டுள்ள அந்த மக்களைக் கஷ்டப்படுத்த வேண்டாமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். எனவே அந்த வரிகளை, அந்தக் கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டிருப்பதால் கூட்டுறவுக் கடைகளிலே, உணவு அமைச்சரவர்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன், ரேஷன் அரிசி அளவு குறைத்துத் தரப்படுகிறது. ஏற்கெனவே போடப்பட்ட அளவில், ரேஷன் கடைகளில் கொடுக்க வேண்டுமென்று நிர்ணயித்த உச்ச அளவு அரிசியைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வெளி மார்க்கெட்டில் அரிசி விலை ஏறாமல் கடந்த 11 ஆண்டுகளாக புரட்சித் தலைவர் அரசு பார்த்துக்கொண்டு வந்தது. இங்கே ஆளும் கட்சி உறுப்பினர்கள் எல்லாம் . . .

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: பேரவைத் தலைவரவர்களே, எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் ஒரு தவறான தகவலைச் சொல்கிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் மாதந்தோறும் எவ்வளவு அரிசி கொடுக்கப்பட்டதோ அதே அளவு அரிசிதான் ரேஷன் கடைகளில் இப்போதும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் இப்போது எவ்வளவு அரிசி கொடுக்கிறார்கள் என்று தகவல் கொடுக்க முடியுமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: ஒரு குடும்பக் கார்டுக்கு 12 கிலோ அரிசி கொடுக்கலாமென்று ஏற்கெனவே இருந்த அரசு முடிவு செய்திருக்கிறது. அதை நாங்களும் தொடர்ந்து கொடுக்க வேண்டுமென்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: ஏற்பாடு செய்திருப்பதாக அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஒருவேளை ஏற்பாடு ரேஷன் கடைகளுக்குப் போய்ச் சேர்ந்திருக்காது என்று நினைக்கிறேன். அங்கே பொது மக்களுக்கு 4 கிலோதான் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நான் வேண்டுமானால் என்ட்ரி போட்ட அட்டைகளை உங்களிடம் காட்டவா? பொறுப்பேற்றுக் கொள்கிறாரா

அமைச்சர்? கொடுக்கப்படுகிற அளவு குறைத்துக் கொடுக்கப்படு கிறது. எனவேதான் உங்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன். அரிசி கையிருப்பில் இல்லை. அதனால்தான் மத்திய அரசைக் கேட்கிறீர்கள். இதில் நீங்கள் நிச்சயம் தவறான செய்தி தரக் கூடாது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு தலைவர் அவாகவே, ஏதோ நான் தவறான தகவல் சொல்வதாக உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஒரு மாதத்திற்கு 1,20,000 டன் அரிசி ரேஷன் கடைகளில் கொடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே இருந்த அரசு உத்தரவு பிறப்பித்தது. அதையேதான் இப்போதும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். எந்தவிதமான வகையிலும் அரிசியின் அளவு குறைக்கப்படவில்லை. அரிசி இல்லை என்று மக்கள் மத்தியில் பீதியைக் கிளப்ப வேண்டாம். ஏற்கெனவே கொடுத்துக் கொண்டிருந்த 80,000 டன் அரிசியை மத்திய அரசு 40,000 டன்னாகக் குறைத்துவிட்ட காரணத்தாலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைக் கேட்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. எஸ். திருநாவுக்கரசு: பீதியை நான் கிளப்பவில்லை. வெளியே இருக்கிற பீதியைத்தான் உங்கள் கவனத்திற்கு—அரசின் கவனத்திற்குக்—கொண்டு வந்தேன். ரேஷன் கடைகளில் அரிசி குறைத்து கொடுக்கப்படுகிறது. அதை வாங்குகிறபோது என்ட்ரி போடுகிறார்கள். அரசின் நோக்கம், நாங்கள் ஏற்கெனவே கொடுத்து வந்த அளவில் கொடுக்க வேண்டும் என்பதாக இருக்க லாம். அதற்காக நீங்கள் முயற்சிக்கிறீர்கள். அதற்காகத்தான் மத்திய அரசிடமிருந்து கூடுதலாக அரிசி கேட்கிறீர்கள். ஆனால், அந்த நோக்கம் நிறைவேறவில்லை. நிறைவேற்றுங்கள் என்று தான் இந்த நேரத்தில் இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). தலைவர் அவர்களே, ஏற்கெனவே எனக்கு 11.15 மணிவரை சொல்லிவிட்டுப் போனார். நீங்கள் 11-06-க்கே மணி அடிக்கிறீர்களே, தயவுசெய்து 11-15 மணிக்கு முதல் மணியை அடியுங்கள்.

அதற்கு அடுத்து மிக முக்கியமான பிரச்சினை, மின்சாரம். தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின்னால், அடிக்கடி தமிழகத்தில் இருட்டு ஏற்படுகிறது. நீங்கள் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டிய

1989 பிப்ரவரி 17] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

தில்லை. மின்வெட்டு ஏற்படுகிறது. புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில், இந்தியாவிலேயே 12 லட்சம் பம்பு செட்டுகள் தமிழ் நாட்டில்தான் இருந்தன. அந்த அளவுக்கு அதிகமாக இருந்தன. அப்போது பகலில் 6 மணி நேரமும், இரவில் 6 மணி நேரமும் தொடர்ந்து 12 மணி நேரம் கடந்த 11 ஆண்டுகளாக எந்த விதமான தங்குதடையுமின்றி, பருவ மழை பாதிக்கப்பட்ட நேரத் திலேகூட, புரட்சித் தலைவருடைய அரசால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்தது. ஆனால், இப்போது பகலில் 2 மணி நேரமும், இரவில் 2 மணி நேரமும் மட்டுமே மின்சாரம் வழங்கப் படுகிறது. பருவ மழை பொய்த்திருக்கிற இந்தச் சூழ்நிலையில்— கிணற்றுத் தண்ணீரையும் பம்பு செட் மூலம் இறைக்க முடியாத காரணத்தால், விவசாயப் பெருங்குடி மக்கள் பெரும் தொல் லைக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். எனவே, அவர்களை நீங்கள் காப்பாற்ற, ஏற்கெனவே எங்கள் அரசு வழங்கியதைப்போல, பகலில் 6 மணி நேரமும், இரவில் 6 மணி நேரமும் ஆக மொத்தம் 12 மணி நேரம் தொடர்ந்து மின்சாரம் தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய 12 லட்சம் பம்பு செட்டுகளுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது, அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தொடர்ந்து மின்சாரம் வழங்கியதாக இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஆனால், அதற்குப் பிறகு இங்கே கவர்னர் ஆட்சிக் காலத்தில், எண்ணூர் அனல் மின் நிலையம், மற்றும் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள டிரான்ஸ்மீட்டர் பழுதடைந்த காரணத்தால், அந்த மின்சாரம் நடைபெற்றிருக்கிறது. அதை யெல்லாம் விரைவாகச் சீர்படுத்திக்கொண்டிருக்கிறோம். சீர் படுத்தி முடித்தவுடன் அவர்களுடைய ஆட்சியில் கொடுத்ததை விட அதிகமான மின்சாரத்தை நாங்கள் வழங்குவோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: நாங்கள் 12 மணி நேரம் வழங்கி னோம். நாங்கள் அதிகமாக வழங்குவோம் என்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எவ்வளவு அதிகமாக வழங்குவார்கள் என்று தெரிந்துகொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: எவ்வளவு அதிகமாக என்றல்ல. விவசாயிகளுக்கு எவ்வளவு தேவையோ அந்த அளவுக்கு வழங்குவோம் என்ற உறுதியைக் கொடுக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். திருநாவுக்கரசு: விவசாயிகளுக்கு 24 மணி நேரமும் தேவை. தருவீர்களா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வாழ்கிற பகுதியில் வேண்டுமானால் விவசாயிகளுக்கு 24 மணி நேரமும் மின்சாரம் தேவை என்று சொல்லலாம். ஏற்கெனவே காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் பேசுகிற போது இங்கே பருவமழை பொய்த்துவிட்ட காரணத்தால் கிணறு களிலெல்லாம் சுத்தமாகத் தண்ணீரே இல்லை, ஆனாலும் அதற்காகப் பணத்தை வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார். எந்தக் கிணற்றிலும், பொதுவாக விவசாயிகளுக்கு 6 மணி முதல் 8 மணி நேரம் மின்சாரம் கொடுத்தால் போதும். நானும் ஒரு விவசாயியாக இருக்கிற காரணத்தால் அதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: விவசாயிகளுக்கு ஆறு மணி நேரம் மின்சாரம் போதும் என்பது சரியல்ல. பகலில் மின்சாரம் வேண்டுமென்றுதான் விவசாயிகள் அத்தனை பேரும் விரும்புகிறார்கள். எனவே பகல் முழுவதுமாவது மின்சாரம் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் சொல்வதைப்போல் 6 மணி நேரம் போதாது. 6 மணி நேரம் என்பது ஒரு வேளை அமைச்சர் வீட்டுக் கிணற்றுக்கு வேண்டுமானால் பொருத்தமாக இருக்கலாம். ஒரு வேளை அங்கே தண்ணீர் இல்லையோ என்னவோ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: 24 மணி நேரம் என்பது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குச் சரியாக இருக்கலாமே தவிர, மற்றவர்களுக்குச் சரியாக இருக்காது. (சிரிப்பு).

திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, எனக்கு மட்டுமல்ல. தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்து விவசாயிகளுக்கும், நான் சொன்னேன். 24 மணி நேரமும் முடிந்தால், தந்தால்

(முற்பகல் 11-10)

அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று சொன்னேன். அமைச்சர் அவர்கள் அவ்வளவு தேவையில்லையென்று சொல்கிறார்கள். அது இரண்டும் வரட்டும், மக்கள் தெரிந்து கொள்ளட்டும். எவ்வளவு தேவையென்பது மக்களுக்குத் தெரியும். அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல இரண்டு மணி நேரம் போதுமா அல்லது நான் கேட்பதுபோல அதிக அளவு வேண்டுமா என்பதை மக்கள் பார்த்துத் தெரிந்து கொள்ளட்டும். (குறுக்கீடு) உங்களுக்கு உதவி செய்யத்தான் வந்தேன். எண்ணூர் அனல் மின்நிலையம் பழுதாகி இருக்கிறது. இது பற்றி நான் என்ஜினியர்களிடம் விசாரித்தேன். அதைச் சரி செய்ய இன்னும் ஆறு மாத காலம் ஆகலாம் என்று சொல்கிறார்கள். உடனடியாக முடிகிற காரியமல்ல. ஒரு மாதம், இரண்டு மாதங்களில் நடக்கப் போகிற காரியமல்ல என்பதை நான் உறுதியாகச் சொல்கிறேன். குறைந்தது ஆறு மாத காலங்கள் ஆகலாம் என்று இதிலே பாண்டித்யம் பெற்றிருக்கிற துறை நிபுணர்கள் சொல்கிறார்கள். கல்பாக்கம் மின் நிலையத்தில் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் எவ்வளவு விரைவில் சீர்செய்ய முடியுமோ அவ்வளவு விரைவில் சீர் செய்யுங்கள். இதைக் காரணம் காட்டி தமிழ் நாட்டு விவசாயிகளைப் பாதிப்பிற்கு உள்ளாக்காதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இதைப்போல மின் உற்பத்தி பாதிக்கப்பட்ட நேரங்களில் அன்றைக்கிருந்த தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கேரளா மாநிலத்திலிருந்து மின்சாரத்தைக் கடனாகப் பெற்று, அதற்குச் சமமாக அரிசியை சில நேரங்களில் தந்து, தமிழ்நாட்டில் இருந்த விவசாயிகளை காப்பாற்றியதைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்குப் பக்கத்து மாநிலங்கள் எல்லாம் உங்களுடைய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கிற காரணத்தால், தோழமைக் கட்சிகள் என்ற உறவோடு இருக்கிற அரசுகள் இருக்கின்றன. நீங்கள் இவற்றில் எங்கே வாங்கினாலும் சரி, கர்நாடகத்தில் வாங்கினாலும் சரி, ஆந்திராவில் வாங்கினாலும் சரி, அல்லது கேரளாவில் வாங்கினாலும் சரி. எங்கேயாவது மின்சாரத்தை வாங்கி மின் பற்றாக்குறையை குறிப்பாக விவசாயிகளுக்கு, வீடுகளில் எரிகிற விளக்குகளுக்கு மின்தடை இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். உங்களால் முடிந்த அளவிற்குக் கடனை மற்ற மாநிலங்களில் பெற்று இங்கே

வழங்க வேண்டுமென்று கேட்டு, அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முன்னாள் அரசு, புரட்சித் தலைவர் அவர்களின் அரசு இதற்கு வழி காட்டியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, அந்த வழியை நீங்களும் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகம் முழுவதும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பின்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைதியாக இருங்கள், அடக்கமாக இருங்கள், ஆடம்பரங்கள் வேண்டாம், பெரிய அளவில் போஸ்டர்கள் போட வேண்டாம் என்று பல நேரங்களில் சுட்டிக் காட்டினார்கள். பல அறிக்கைகள் மூலமாகத் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். ஆனாலும் ஒரு மாத காலமாகப் பல இடங்களில் வன்முறை தலைவிரித்து ஆடுகிறது அராஜகம், கொலை. கொலை முயற்சி இவைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன. உதாரணமாக செங்கல்பட்டு மாவட்டத்தில் எனக்கு முன்னால் பேசிய சட்டமன்ற உறுப்பினர் சுட்டிக் காட்டியதைப்போல ஆலந்தூரில் நகர மன்ற உறுப்பினர் ஜெகாங்கீர் என்பவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அந்த குற்றவாளிகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. 147,323,302 ஆகிய பிரிவுகளில் எப்.ஐ.ஆர். போடப்பட்டிருக்கிறது. அதைப் போல தர்மபுரியில் கிருஷ்ணகிரியில் முனிராசு என்பவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். (குறுக்கீடு) தகவலைச் சொல்லிய நேரத்தில் குறுக்கிட்டுப் பேசுவதற்காக முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொடர்புடைய தொகுதி உறுப்பினர் பேச விரும்புகிறார்.

திரு. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, நான் இரண்டு முறைகள், சட்டமன்ற உறுப்பினர், இந்த அவையில் தவறான தகவலைச் சொல்லிய நேரத்தில் குறுக்கிட்டு பேசுவதற்காக அனுமதி கேட்டதற்கு, சந்தர்ப்பம் வரும்போது அனுமதி தருவதாகக் குறிப்பிட்டார்கள். அதையும் தொடர்ந்து இந்த அவையில் தவறான தகவலைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஒரு சிறிய விளக்கம் தருகிறேன். இங்கே அவர் குறிப்பிடும் நபர் ஆலந்தூரில் இருந்தாலும், கொலையுண்டவர்

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1989 பிப்ரவரி 17]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்கள் இந்த அவைக்கு ஏற்கனவே அறிவித்திருக்கிறார்கள். முன்வரிசையிலே உள்ளவர்கள் பேசுகிற நேரத்தில், எல்லா உறுப்பினர்களும் எழுந்து குறுக்கிட்டுப் பேசுவது என்பது மரபாகாது என்று அறிவித்திருக்கிறீர்கள். சொல்லுகின்ற விஷயத்தில் யாரையாவது குற்றஞ்சாட்டி எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசியிருப்பார்களானால், அது தவறு என்று மறுக்க அல்லது, பாயின்ட் ஆப் ஆர்டர், ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப உறுப்பினர்களுக்கு 'உரிமை உண்டு. அல்லாமல், அவரவர்களும் இஷ்டத்திற்குப் பேசிக் கொண்டிருந்தால், அவையினுடைய ஒழுங்கு முறை காப்பாற்றப்படுவது இயலாத ஒன்றாக ஆகிவிடும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: நான் ஆலந்தூரிலே ஜகாங்கீர் என்ற அண்ணா தி.மு.க. தொண்டர், நகரமன்ற உறுப்பினர் கொலை செய்யப்பட்டு இருக்கிறார். குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை என்றுதான் சொன்னேன். உடனே ஆலந்தூர் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் எழுந்து பதில் சொல்கிறார்கள். இப்போது எனக்கு சந்தேகம் வருகிறது. சம்பந்தப்பட்டவர் தி.மு.க.வினர்களாக இருப்பார்களோ என்ற சந்தேகம் வருகிறது. எனவே தி.மு.க.வாக இருந்தாலும் சரி

* **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, ஆளும் கட்சி உறுப்பினர் குறுக்கிட்டு ஒரு விளக்கம் சொல்ல ஆரம்பித்தால் அதை வைத்து உள்ளீடாக ஒரு கருத்துத் தோன்றும் படி ஒரு 'மோட்டிவ்' கற்பித்துப் பேசுவது, அவையிலே விவாதத்தை மேலும் சூடாக்கத்தான் பயன்படுமே தவிர, தெளிவு ஏற்படுத்தப் பயன்படாது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: சம்பந்தப்பட்ட தொகுதி உறுப்பினர் எழுந்ததால் எனக்குச் சந்தேகம் வந்தது என்று சொன்னேன். அது தி.மு.க.வாக இருந்தாலும் சரி, அல்லது எந்தக் கட்சியாக இருந்தாலும், கொலை செய்த குற்றவாளி யாராக இருந்தாலும், அவரைக் கண்டுபிடியுங்கள், கைது செய்யுங்கள் என்றுதான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முனிராசு என்பவர், தர்மபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரியிலே கொலை செய்யப்பட்டார். அதிலே, எப்.ஐ.ஆரிலே இருப்பதைச் சொல்லலாம் என்று நான் நினைக்கிறேன். தி.மு.க. நகரச்

செயலாளருடைய மகன் சரவணன் என்பவர் அந்தக் குற்றம் சாட்டப்பட்ட பட்டியலில் ஒருவராக இருக்கிறார். இன்னும் கைது செய்யப்படவில்லை. இதைப்போல பல பெயர்கள் இருக்கின்றன. பல கொலைகள், கொலை முயற்சிகள் நடைபெற்றிருக்கின்றன. இவற்றை எல்லாம் இந்த அரசு அனுமதிக்கக்கூடாது என்று நான் இந்த நேரத்தில் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்திலே ஆத்தூரிலே, அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் இங்கே உரையாற்றுகிறபோது, நேரம் ஆகி விட்டதால், அது பாதியிலே நின்றது. அந்தச் சம்பவத்தை நான் சுருக்கமாக விளக்க விரும்புகிறேன். இருதயமேரி என்பவர் 10 ஆயிரம் ரூபாயை ரங்கச் செட்டி என்பவரிடத்திலே கொடுத் திருந்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டதைப்போல, ரங்கச் செட்டி என்பவர் தி.மு.க. அவரே இதை ஒத்துக்கொண்டார். எனவே அந்த ரங்கச் செட்டி பணம் தரவேண்டும், வாங்கித் தாருங்கள் என்று இருதயமேரி காவல் நிலையத்திலே ஒரு புகார் செய்கிறார். அந்தப் புகார் எஸ்.பி. அளவிற்குப் போகிறது. எஸ்.பி. விசாரியுங்கள் என்றும், நடவ டிக்கை எடுங்கள் என்றும் அங்கே இருக்கிற சப்-இன்ஸ்பெக்ட ருக்குத் தெரிவிக்கிறார். அந்த உத்தரவின் பேரில் எஸ்.ஐ. அந்த ரங்கனைக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்கிறார். அந்த ரங்கன் ஆளும் கட்சிக்கு வேண்டியவர் என்ற அடிப்படையிலே ரங்கன், ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினருக்கு நண்பர் என்கிற முறையிலே, அவர் போய் அழைத்து வந்து விடுகிறார். அதிலே கூட தவறில்லை. விளக்கம் சொல்லி, அழைத்து வந்துவிட்டார். அந்தப் பணம் கொடுக்கல், வாங்கல் சம்பந்தப்பட்டது. எனவே அதைப்பற்றி வெளியிலே பேசிக்கொள்கிறோம் என்று சொல்லி, ஆளும் கட்சி உறுப்பினர் அழைத்து வந்துவிட்டார். அதிலேகூட தவறில்லை. ஆனால் அதற்குப் பின்னால், சட்டமன்ற உறுப்பின ருடைய 2 மகன்களும், ஏறக்குறைய 30 பேர்களோடு, அங்கே சென்று, வீட்டிலேயிருந்த எஸ்.ஐ.-யைத் தாக்கி, அவருடைய மனைவியைத் தாக்கி. மாமியாரைத் தாக்கி, குழந்தைகளைத் தாக்கி ஒரு பயங்கரமான சம்பவம் அங்கே நடைபெற்றிருக்கிறது. பயங்கர ஆயுதங்களோடு, சாலையில் இருந்த மக்கள் கூட அருகிலே போகப் பயந்திருக்கிறார்கள். இதிலே ஒரே ஒருவர் தான் கைது செய்யப்பட்டு இருக்கிறார். அந்த ரங்கனின் இன் னொரு மகன் கைது செய்யப்படவில்லை. இதிலே மாண்புமிகு

1989 பிப்ரவரி 17] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

முதலமைச்சர் அவர்கள் சொல்கிறபோது—போய் அடித்தது, 2 மகன்கள் அடித்திருக்கிறார்கள், தியாகராஜன் என்பவர், நாக ராஜன் என்பவர், 2 பேர்கள்—முதலமைச்சர் அவர்கள், அடித்த ஒரு மகன்

திரு. ஏ. எம். இராமசாமி: தலைவர் அவர்களே, அவர்கள் சொல்வதைப்போல எனக்கு 2 மகன்கள் இல்லை. எனக்கு ஒரே வொரு மகன்தான் இருக்கிறார். அவர் சொல்வது அனைத்தும் தவறு. ரங்கச் செட்டி என்பவர்தான் நம் கட்சியைச் சேர்ந்தவர். மீதி அனைத்துப் பேர்களும் அனைத்திந்திய அண்ணா திமுக. வைச் சேர்ந்தவர்கள் என்று நான் கூற விரும்புகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினரின் மகன்கள் என்று நான் பேசும்போது குறிப்பிட்டிருந்தால், அதை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு ஒரு சிறிய விளக்கம். இது புலனாய்வில் இருக்கின்ற ஒரு செய்தி. இதுபற்றி நீங்கள் இரண்டு பேர்களும் கருத்துக் களைப் பரிமாறிக்கொள்வது இந்த அவைக்குப் பொருந்துமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிச் சொல்லியிருந்தால் உண்மையிலேயே வருந்து கிறேன். அது 'Slip of tongue' உங்களுக்கு இரண்டு மகன்கள் இல்லையென்றால் இல்லாத மகனை நான் எப்படி உண்டாக்க முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: புலன் ஆய்வில் இருக்கின்ற ஒரு செய்தியைப் பேசுகின்றபோது இந்தச் சிக்கல் ஏற்படும் என் பதை நான் எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குச் சொல்லிக் கொள்கிறேன். எனவே அடுத்த பகுதிக்கு நீங்கள் உடனடியாகப் போக வேண்டுகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினரின் மகன்கள் அல்ல. ரங்கனின் மகன்கள். தியாகராஜன், நாகராஜன், ரங்கனின் மகன்கள். . . . (குறுக்கீடு).

[1989 பிப்ரவரி 17

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருள்கூர்ந்து இந்தச் செய்தியை விட்டுவிட்டு அடுத்த செய்திக்குப் போகவும். ஏனெனில் இது புலனாய்வில் இருக்கிறது. மறுபடியும் அந்த உறுப்பினர்கள் பேச, இதுவே மறுபடியும் விவாதமாகி, இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியாமல் போய்விடும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புலன் ஆய்விலே உள்ளதைப் பற்றிப் பேசக்கூடாது என்று இதற்கு முன்பு எந்தத் தீர்ப்பும் இல்லை. நீதிமன்றத்திலே வழக்கு இருக்குமேயானால் அதுபற்றிச் சட்டமன்றத்திலே பேசக் கூடாது என்பதுதான் மரபாக இருக்கிறதே தவிர, வழக்கு F.I.R போட்டு, அதிலே இதுபற்றிப் பேசக்கூடாது என்றால் நாங்கள் சம்பவங்களை எப்படி இந்த அவைக்குள்ளே வந்து சொல்வது? பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றே சொன்ன மாதிரி பொதுத் தீர்ப்பாக மொத்தமாக அடிக்காதீர்கள்.

திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான வழக்குகள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே செய்த கொலைகள், கொள்ளைகள் அவ்வளவுக்கும் F.I.R. இருக்கிறபோது அவை கோர்ட்டில் இருக்கிறபோது, விமர்சனம் செய்யப்பட்டிருக்கிறதா? நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? ஒரு சிறு சம்பவத்தைத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலே பேசுகிற போது அதே தொடரும் என்றால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ஒரு நிரந்தரமான தீர்ப்பு வழங்க வேண்டும். அதை உங்களுடைய Ruling ஆக எதிர்பார்க்கிறோம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு உறுப்பினர்கள் 5 நிமிடம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதையும் சேர்த்துக் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, ஏற்கனவே இது தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பாகத் தெரிவித்து இருக்கிறார்கள். மீண்டும் அவருடைய பதிலுரையில் தெரிவிக்க இருக்கிறார்கள். எனவே இதுபற்றியே நாம் தொடர்ந்து விவாதிப்பது பொருத்தமாக இருக்குமா என்று நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் வேறு என்னுடைய நேரத்தை எடுத்துக் கொள்கிறீர்கள். தயவுசெய்து அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியானால் பேரவைத் தலைவர் இல்லாமலேயே தொடர்ந்து அவையை நடத்தி விடலாமா ?

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுச் சொன்னதை திருப்பிச் சொன்னால், நீங்கள் வருத்தப்படுவீர்கள். தயவுசெய்து உணர்ச்சி வசப்பட வேண் டாம். பேரவைத் தலைவர் இல்லாமல் எப்படிப் பேரவையை நடத்த முடியும் ? நீங்கள்தான் இருந்து நடத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிறகு இடையிலே குறுக் கிட்டு, பேரவைத் தலைவர் சொன்னதையெல்லாம் நேரத்தை எடுத்துக்கொள்வது என்று சொன்னால், பிறகு உங்களுக்கு வரை யறுக்கப்பட்ட நேரத்தை மீறுவதை எப்படி எடுத்துக்கொள்வது ?

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களோடு வாதம் செய்ய வரவில்லை. நான் இந்த அரசோடு வாதம் செய்ய வந்திருக்கிறேன். நீங்கள் எனக்கு உதவி செய்ய வேண்டியவர்கள். தயவுசெய்து உதவி செய்யுங்கள். எனவே இது நீதி விசாரணையில் இல்லை. இது புலன் ஆய்வில் இருக்கிறது. புலன் ஆய்வு என்றால்கூட, இன்னும் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. ஒருவரைத் தான் கைது செய்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறபோது அவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்று சொன்னார்கள். அப்படி என்றால் அடிபட்ட சப்-இன்ஸ்பெக்டர் என்ன? தி.மு.க.வா? இது என்ன அண்ணா தி.மு.க., தி.மு.க. சண்டையா ? தி.மு.க.வைச் சார்ந்த பெரியவர் ராங்கனை அடித்ததால் அவருடைய மகன்கள் ஆத்திரப்பட்டு, 30 பேருக்கு மேற்பட்டவர்களை அழைத்துச் சென்று பயங்கரமான ஆயுதங்களைக் கொண்டு தாக்கியிருக்கி றார்கள் என்று சொல்கிறபோது நீங்கள் கட்சியைச் சொல்லி, அவர் அண்ணா தி.மு.க., இவர் கம்யூனிஸ்டு கட்சி, இவர் காங்கிரஸ் என்று சொல்வது எந்தவகையிலே நியாயம் ? எனவே தயவு செய்து முதலமைச்சர் அவர்கள், அவர் எந்தக் கட்சியைச் சார்ந்த

வராக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, ரங்கனின் மகன்கள் மீது நடவடிக்கை எடுங்கள். ரங்கன் மீதும் சேர்த்து எடுங்கள். அவர் மகன் அண்ணா தி.மு.க. என்பதால் நீங்கள் விட்டுவிடுங்கள் என்று நான் சொல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்தப் பிரச்சினை எழுந்தபோதே நான் சொல்லியிருக்கிறேன். ஆகவே காவல் துறை அதிகாரி அடிக்கப்பட்டது மன்னிக்கப்பட முடியாத குற்றம். அவர்கள் யாராக இருந்தாலும், எந்தக் கட்சியாக இருந்தாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். இன்னொருவர் தலைமறைவாகி இருக்கிற காரணத்தால் அவர் தேடப்பட்டு வருகிறார் என்று அந்த வகையில் எனக்குச் செய்தி கிடைத்திருக்கிறது.

திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைமறைவாகி இருப்பவர்களைத் தேடி விரைவிலே கண்டுபிடியுங்கள் என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன். உயர் நீதிமன்றத்திலே முன் ஜாமீன் anticipatory bail -க்குக் கூட மனுச் செய்திருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. அரசு வழக்கறிஞர் மூலமாக, பி.பி. மூலமாக அவருக்கு anticipatory bail கொடுக்காமல் கைது செய்ய வேண்டும் ஏனென்றால் கொலை முயற்சி நடந்திருக்கிறது. அரசு ஊழியரை, ஒரு சப்-இன்ஸ்பெக்டரை அடித்துத் தாக்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிடுவது கிடையாது. Public Prosecutor Oppose பண்ணலாமேயொழிய, உத்தரவு போடுவது நீதிபதியினுடைய பணி. அந்தப் பணியிலே நாம் தலையிட முடியாது.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் ஒரு வழக்கறிஞர்தான். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பி.பி.யை விட்டு உத்தரவு போடுங்கள் என்று நான் சொல்லவில்லை. பி.பி.யை விட்டு oppose பண்ணுங்கள் என்றுதான் சொன்னேன். நீதிபதி அவர்களிடம் முன் ஜாமீனிலே விடக்கூடாது என்று எதிர்ப்பு தெரிவிக்கச் சொல்லுங்கள் என்றுதான் சொன்னேன். எனவே அவரை உத்தரவு போடச் சொல்ல

வில்லை. முன் ஜாமீன் கொடுப்பதைத் தடுத்து அவரைக் கைது செய்து jail -லே வைத்து அதற்குப் பின்னாலே, ஒரு சப்-இன்ஸ்பெக்டரை அடித்தவரை, அவருடைய குடும்பத்தினரை, பெண்டு பிள்ளைகளை அடித்தவரைக் கைது செய்ததற்குப் பின்னாலே சட்டப்படி Bail- -ல் விடுங்கள். எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. எனவே உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஏனென்றால் சட்டமன்றத்தில், அடித்தவர் கட்சி அடிப்பட்டவர் கட்சி என்று சொல்லிக்கொண்டே இருந்தால், வெளியிலே குற்றங்கள் பெருகத்தான் இது உதவியாக இருக்குமே தவிர, குற்றங்கள் தடுக்கப்பட இது உதவியாக இருக்காது. அரசுத் துறை அதிகாரிகளும், பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களும் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். பல்வேறு கட்சியைச் சார்ந்தவர்களும் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் ஆத்தூரிலே ஊர்வலமாகச் சென்றிருக்கிறார்கள். இது ஆங்கிலப் பத்திரிகை இந்தியன் எக்ஸ்பிரசிலிருந்து வாரப் பத்திரிகை வரை வந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல அவர்களே படித்திருப்பார்கள். எல்லா விவரமும் வந்திருக்கிறது. சட்டமன்றத்திலே நாம் மறைத்தாலும், அல்லது தவறான செய்திகளை யார் சொன்னாலும் வெளியே அந்தச் செய்தி வானொலி மூலமாக, டி.வி. மூலமாக மக்களுக்கு வருகிறபோது, இப்படி ஒரு கொடுமை, அநியாயம் நடந்ததே, சட்டமன்றத்திலே இப்படி மறைக்கப்பட்டிருக்கிறதே அல்லது மாற்றப்பட்டு சொல்லப்பட்டிருக்கிறதே என்கிற செய்தி மக்களுக்குப் போகிறபோது இதனால் அரசுக்குத்தான் கெட்ட பெயர் வரும். எனவே, உங்களுக்குக் கெட்ட பெயர் வரக்கூடாது என்பதற்காகத்தான் இந்த ஆலோசனையை நான் உங்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். எனவே, உரிய நடவடிக்கைகளை நீங்கள் எடுக்க வேண்டுமென்றுதான் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அரசுத் துறை அதிகாரிகள், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால் பழி வாங்கப்பட மாட்டார்கள், நான் தாய்போல் இருந்து அனைவரையும் அணைப்பேன், அரவணைப்பேன் என்று நாது முதலமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டியிருந்தார்கள். ஆனால் ஏற்கனவே இருந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களிடத்திலே உதவியாளராக இருந்தார்கள் என்ற பாவமோ என்னவோ, அமெரிக்காவிலே இருதய ஆபரேஷன் செய்துகொண்டு வந்திருக்கிற அதிகாரி,

பெயர் சொல்ல வேண்டாம் என்றால் விட்டு விடுகிறேன். அவருடைய உதவியாளர், ஐ.ஏ.எஸ். இருதய ஆபரேஷன் செய்துகொண்டவர் — அவர் என்ன பாவம் செய்தார்? இங்கே மருத்துவ சிகிச்சைகூட பெற இடம் இல்லாமல், அவரைக் கோவைக்கும், இன்னொரு உதவியாளரை தஞ்சைக்கும் இப்படி மாற்றியிருக்கிறீர்களே, இது என்ன நியாயம்? அவர் இருதய நோயால் ஆபரேஷன் செய்துகொண்டு வந்தவர். மேலும் தொடர்ந்து அந்த மருத்துவ வசதி வாய்ப்பு இல்லாமல் மாற்றப்பட்டிருக்கிறார்கள். அது மட்டும் அல்ல; வித்யாசாகர் என்ற டி.ஐ.ஜி.-யைப் பணி நீக்கம் செய்திருக்கிறீர்கள். இதற்கெல்லாம் காரணங்கள் நியாயமானதாக இருக்க வேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நான் பேச வேண்டாம் என்றால் உட்கார்ந்து விடுகிறேன், சொல்லுங்கள். இப்படிச் சத்தம் போட்டால் உட்கார்ந்து விடுகிறேன். (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து எல்லோரும் அமரவும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: வித்யாசாகர் என்று சொன்ன உடனேயே நீங்கள் இப்படி உணர்ச்சி வசப்படுவதைப் பார்த்தால், வேண்டுமென்றே வித்யாசாகர் பழி வாங்கப்பட்டிருப்பாரோ என்ற உணர்வு வருகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வித்யாசாகர், இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீதான நடவடிக்கைகள் ஆளாக்கப்படவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே வித்யாசாகர் மீது ஒரு குற்றம் விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டு, கவர்னர் ஆட்சியிலே விசாரணைக்கு விடப்பட்டு டிரிப்யூனலுக்கு விடப்பட்டு பிறகு, அந்தக் கோப்பில், அவர் சஸ்பென்ட் செய்யப்பட வேண்டும் என்று வந்த ரொட்டீன் கோப்பில் கையொப்பமிட்டுப் போட்ட காரணத்தால் அவர் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார். எனவே, அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது எம்.ஜி.ஆர். ஆட்சியிலே.

திரு. எஸ். திருநாவுக்கரசு: எனவே இப்படிச் சரியான உண்மைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிற வாய்ப்பு இருக்கும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் ஏன் உணர்ச்சி வசப்படுகிறீர்கள். நீங்கள் அமைதியாக இருந்தால் அவர்களே சமாளித்துக் கொள்வார்கள்.

1989 பிப்ரவரி 17] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

எனவே, பணி நீக்கங்களோ இட மாற்றங்களோ நடைபெறுகிற போது, அந்தப் பணி நீக்கமோ இட மாற்றமோ பழி வாங்குகிற மனப்பான்மையோடு இருக்கக்கூடாது என்பதற்காகச் சொல்லு கிறேன். இறுதியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு உதவியாளரை நியமித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே அவர் மேலே ஒரு வழக்குப் போடப்பட்டு நடந்துகொண்டிருந்தது. அந்த உதவியாளர் மேல் தனிப்பட்ட கோபம் எதுவும் எனக்கு இல்லை. நீங்கள் அவரையே தொடர்ந்து வைத்துக் கொள்ள லாம். அவர் யார் என்றுகூட எனக்குத் தெரியாது. ஆனால் குற்றம் சாட்டப்பட்டிருந்த அந்த உதவியாளர் மீது நீதிமன்றத் திலே நிரபராதி என்று தீர்ப்பு அளித்ததற்குப் பின்னாலே, நீங்கள் அவரை உதவியாளராக எந்த மட்டத்திலே வைத்துக்கொண் டாலும் அது பாராட்டுக்குரியது. ஆனால் குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை, குற்றத்திலேயிருந்து, அந்த வழக்கையே வாபஸ் வாங்கிக்கொண்டு முதலமைச்சர் அவர்கள் தனக்கு உதவியாளராக வைத்திருப்பது நியாயம்தானா, எந்த வகையில் நியாயம், என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். வழக்கு நடந்து நீதிமன் றத்தில் தீர்ப்புத் தந்து—அவர் குற்றவாளி என்று நான் சொல்ல வில்லை . . குற்றமற்றவர் என்று நீதிமன்றம் சொல்லட்டும். சொன் னதற்கு பின்னால் . . .

(முற்பகல் 11-30)

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, எந்த இலாகாவாக இருந்தாலும் அமைச்சர்களுக்குக் கூட்டுப் பொறுப்பு உண்டு. நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்கிற உதவியாளர் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவராக அதே நேரத்திலே சட்டமன்றத்திலே எதிர்க்கட்சித் தலைவராக டாக்டர் கலைஞர் அவர்கள் இருந்தபோது அரசாங்கமே இவரை அவருக்கு உதவியாளராக நியமித்தது. அவருக்கு உதவியாளராக இருந்தார் என்ற ஒரே ஒரு காரணத் திற்காக வேண்டுமென்றே திட்டமிட்டு முந்தைய அரசு ஒரு பொய் வழக்கு போட்டது. அந்தப் பொய் வழக்கைத்தான் அரசாங்கம் திரும்பப் பெற்றிருக்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை.

திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வழக்கு பொய் வழக்கா அல்லது மெய் வழக்கா என்று

மாண்புமிகு உணவு அமைச்சர் தீர்ப்பு அளிக்க முடியாது. நீதி மன்றம்தான் தீர்ப்பு அளிக்க வேண்டும். எனவே நீதிமன்றம் தீர்ப்பு அளித்ததற்கு

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, மக்கள் மன்றம் இப்படிப்பட்ட பொய் வழக்குகளைப் போட்டவர்களை எங்கே உட்கார வைக்க வேண்டுமோ அங்கே உட்கார வைத்திருக்கிறது. அந்த மக்கள் மன்றத்தினுடைய தீர்ப்பைத் தான் இந்த அரசாங்கம் ஏற்று நடத்துகிறது.

திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, நான் அதைப் பற்றிப் பின்னால் சொல்கிறேன். மக்கள் மனதிலே என்ன மாற்றம் ஏற்பட்டது என்பதை நான் முடிப்பதற்கு முன்னால் சொல்கிறேன் (மணியடிக்கப்பெற்றது). எனவே நீதிமன்றம் தீர்ப்புத் தராமல் அமைச்சர் அவர்களிடத்திலே தீர்ப்புப் பெற்று, அந்த அடிப்படையிலே . . .

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, முந்தைய அரசு என்மீது கூட ஒரு வழக்குப் போட்டது. நான் ஓர் அமைச்சரை அரிவாளைக் கொண்டு வெட்டப் போனதாக 307-வது செக்ஷனிலே போட்ட வழக்கு இன்னும் இருக்கிறது. அப்படிப் பட்ட பொய் வழக்குகள். எத்தனையோ ஆயிரக்கணக்கான வழக்குகள் அந்த ஆட்சியிலே போடப்பட்டன என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவர் அவர்களே, இந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன என்றால் அது நீதி மன்றத்தினுடைய அனுமதியோடுதான் வாபஸ் பெறப்பட்டிருக்கிறது. வாபஸ் பெறுவதற்கும் நீதி மன்றத்தினுடைய அனுமதி வேண்டும். அரசியல் ரீதியாக போடப்படுகிற வழக்குகள் வாபஸ் பெறப்படுவதும் இந்த மன்றத்திற்குப் புதிய ஒன்று அல்ல. அண்ணா அவர்கள் ஆட்சிக் காலத்திலே எவ்வளவோ வழக்குகள் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன. எனவே இதிலே எதுவும் முறை கேடு இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைப் பார்த்தால் அவர் அரிவாளைத் தூக்கிக்கொண்டு வெட்டப் போகமாட்டார் என்பதை

1989 பிப்ரவரி 17] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள். (குறுக்கீடு) இருக்கலாம் தமிழ்நாட்டில் இருக்கின்ற வழக்குகள் அனைத்துமே, முதலமைச்சரே சொல்லி, அரசாங்கமே சொல்லி போடுவது அல்ல. இன்றைக்கு கூட தமிழ்நாட்டில் ஏற்படுகின்ற வழக்குகளுக்கெல்லாம், இதற்குப் பின்னாலே வருகின்ற வழக்குகளுக்கெல்லாம் முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொள்வார்களா? அதேபோல எந்த வழக்கு வந்தாலும், இவைகள் எல்லாம் அரசின் தூண்டுதலால் தான் வருகின்றன என்பதற்கு அரசு பொறுப்பு ஏற்க முடியுமா? முடியாது. எனவே, ஆங்காங்கு நடக்கின்ற சம்பவங்கள் அல்லது சாட்டப்பட்ட அல்லது எடுத்து வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்கள் அடிப்படையிலே சில தவறான அதிகாரிகள் நடவடிக்கையிலே ஈடுபட்டிருக்கலாம். அறநிலையத்துறையைப் பொறுத்த வரையில் அவரை விட்டுவிடுகிறேன், அமைச்சர் அவர்களைப் பார்த்தால் குற்றவாளியாகத் தெரியவில்லை, அதனால் விட்டுவிடுகிறேன். (குறுக்கீடு) எல்லா அமைச்சர்களையும் குற்றவாளிகள் என்று நான் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொருவரையும், நேரடியாகப் பார்த்து இவர் குற்றவாளியா, இல்லையா என்று முடிவு கட்டுகின்ற பொறுப்பு உங்களுடையதா? தாங்கள் அருள்கூர்ந்து நேரத்தைக் கடைப்பிடித்தால் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, மற்ற அமைச்சர்கள் விளையாட்டாக எங்களைப் பார்த்தால் குற்றவாளிகளாகத் தெரிகிறதா என்று கேட்டதற்கு நீங்கள் எல்லாம் குற்றவாளிகள் அல்ல என்று சொன்னேன். (குறுக்கீடு) நீங்கள் பேசி முடித்து விட்டீர்கள். உங்களுக்குத்தான் பதில் சொல்லப் போகிறேன். என்னைப் பேச விடுங்கள். சபாநாயகர் அவர்களே, நான் உங்கள் உதவியை நாடுகிறேன்.

Thiru M. ABDUL LATHEEF: Sir, the Members of this House are entitled to indulge in healthy debates but not to use patent innuendoes. The Honourable Member is indulging in patent innuendoes and he is casting aspersions on the Hon. Minister for Hindu Religious and Charitable Endowments. Whether it is admissible? I would like to know.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களை குற்றவாளி என்று சொல்லவில்லை. அவரைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனிக்காமல் இருந்துவிட்டு என் நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டாம். அவர் முதலிலே இங்கே சொன்னார். வழக்குகள் திரும்பப்பெறப்படுகிறபோது நீதிபதிகளுடைய அனுமதியோடு திரும்பப்பெறப்படுகிறது. திரும்பப்பெறப்பட்டவுடனே குற்றம் சாட்டப்பட்டவர்கள் நிரபராதிகள் என்று பொருள்படும்படிச் சொன்னார். சில வழக்குகளிலே அரசாங்கம் முடிவெடுக்கலாம். அதற்கு அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. முடிவை நீதிபதி எடுப்பதில்லை. ஒரு வழக்கறிஞராக இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினரே அவர்கள் ஏதோ நோழமையாக இருந்து வருகின்ற காரணத்தாலே, எல்லாவற்றிற்கும் துணைக்கு வரவேண்டிய அவசியம் இல்லை. எனவே அவர் இங்கே சுட்டிக்காட்டுகின்ற போது சொன்னார். அரசு முடிவெடுத்தது. அரசு உத்தரவு போட்டதற்குப் பின்னாலேதான் நீதிபதி அனுமதி வழங்க முடியும். நீதிபதியே வழங்குவதில்லை. எனவே அந்த முடிவை அரசு ஏன் எடுத்தது? நீதிமன்றம் எடுத்திருக்க வேண்டும் என்றுதான் நான் கேட்டேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, ஒரு வழக்கு நீதிமன்றத்திலுடைய அவையில் எடுத்துக்கொள்ளப்படும்போது, அவ்வாறு எடுத்துக்கொண்டால், that becomes the exclusive property of the court. If the Public Prosecutor himself, on his own behalf or at the instruction of the Government, wants to withdraw the case it is within the discretionary powers of Court either to allow the withdrawal or to retain it on its file. Therefore, when it has been duly allowed by the Hon'ble Court to withdraw the case, it is a judicial disposal. That cannot be questioned. Our friend, the Hon'ble Member's action of just dragging the Court and also making observations on that disposal is not in the best traditions of this House. He is not doing justice to the Court. That is what I want to submit. Whether it can be allowed on the records of this House is a question to be decided by you. It is a very crucial question and you must give a ruling on this.

1989 பிப்ரவரி 17]

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன சட்டம் எல்லாம் எனக்கும் தெரியும். நான், நீதிபதி தவறு செய்துவிட்டார் என்று குற்றம் சாட்டவில்லை. அல்லது அந்த அதிகாரம் நீதிபதிக்கு இல்லை என்று நான் வாதிடவில்லை. அவர் சொன்ன அந்த 'டிஸ்கிரீஷன் ஆப் தி கோர்ட்' இருக்கிறது. அவர் அனுமதிக்கலாம். அனுமதிக்காமலும் இருக்கலாம். ஆனால் முடிவு எடுத்தது அரசு. அந்த முடிவு எடுத்துத் திரும்பப் பெற்றீர்களே என்று சொன்னேனே தவிர, நீதிபதி குற்றம் செய்தார் என்றோ, சம்பந்தப்பட்டவர், குற்றம் சாட்டப்பட்டவர் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் தலையிடவேண்டாம் என்றுதான் கருதினேன். ஆனால் அந்த வழக்கு விவாதத்தைச் சொல்லவேண்டிய, தவிர்க்க முடியாத அவசியத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் என்னைத் தள்ளி விட்டுவிட்டார். 'பால் கமிஷன் ரிப்போர்ட்'— அரசால் ஒரு கமிஷன் போடப்பட்டு, பால் என்பவர் அதைத் தயாரித்து அரசிற்குக் கொடுத்து அது வெளியிடப்படாமலே இருந்துவிட்டது. அது என் கைக்குக் கிடைத்த காரணத்தால் அதை வெளியிட்டேன். இந்திய ஜனநாயகத்தில், பாராளுமன்றத்திலே கூட இப்படிப்பட்ட பல கமிஷன் ரிப்போர்ட்டுகளை அரசு வெளியிடாமல் இருக்கிற நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியிடுவது ஜனநாயக மரபாக இருந்திருக்கிறது. அதற்காக யார் மீதும் திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டதில்லை. பால் கமிஷன் ரிப்போர்ட்டை நான் வெளியிடுவதற்கு முன்பாக, ஒரு 5, 6 காப்பிகள் பத்திரிகைகளுக்குக் கொடுப்பதற்காகப் பிரதிகள் எடுக்கச் சொல்லும்போது, என்னிடத்திலே பி.ஏ.-ஆக இருந்த குற்றத்திற்காக, அதை டைப் செய்கின்ற பணியை என்னுடைய பி.ஏ. அவர்களுக்கு ஒப்படைத்தேன், என் மீது திருட்டுக் குற்றம், அதை டைப் செய்த காரணத்திற்காக என் பி.ஏ. மீதும் திருட்டுக் குற்றம். அது மாத்திரமல்ல. என்னுடைய குடும்பத்தார் மீதே திருட்டுக் குற்றம். என்னுடைய குடும்பத்தார்—என்னுடைய மருமகன் முரசொலி செல்வத்தைக் கைது செய்ய விமான நிலையத்திற்கே போலீசார் சென்றார்கள்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 பிப்ரவரி 17

செல்வம் தன்னுடைய அண்ணன் மகனை, சிங்கப்பூருக்கு ஒரு சுற்றுப் பயணத்திற்கு அனுப்புவதற்காக விமான நிலையத்திற்குச் சென்றபோது அங்கே செல்வமும் வெளிநாட்டிற்குத் தப்பியோடப் போகிறார் என்று போலீசார் கற்பனை செய்துகொண்டு, செல்வத்தை மடக்கிப் பிடித்திருக்கிறார்கள். போலீசார் அவர்களுடைய டிரெஸ்ஸிலே போய் இருந்தால் என்னுடைய குடும்பத்தார்கூட, ஏதோ கைது செய்ய வந்திருக்கிறார்கள் என்று எண்ணியிருப்பார்கள். ஏனென்றால், எங்கள் வீட்டிலே எல்லோரையும் கைது செய்வது என்பது நீண்ட காலமாக எங்கள் வீட்டாருக்கு நல்ல அனுபவம். அப்படி அந்தக் காக்கி உடையிலே இல்லாமல் மப்டி டிரெஸ்ஸிலே சென்று, செல்வத்தைக் கைது செய்தபோது, யாரோ குண்டர்கள், ரௌடிகள் அந்தக் காரியத்தில் ஈடுபடுவதாக எண்ணி என்னுடைய சகோதரிகள், என்னுடைய துணைவியார் இவர்கள் எல்லாம் விமான நிலையத்திற்குச் சென்றவர்கள். 'அய்யோ, பிள்ளையை யாரோ பிடித்துச் செல்கிறார்கள்' என்று ஓடிச் சூழ்ந்து இருக்கிறார்கள்.

என்னுடைய மனைவி, என்னுடைய சகோதரிகள், இவர்களுடைய ஜாக்கெட்டையெல்லாம் பிடித்து இழுத்துக் கிழித்து விமான நிலையத்திலே அவமானப்படுத்தி, இவ்வளவுக்கும் பிறகு செல்வத்தைக் கைது செய்து அழைத்துச் சென்றார்கள். செல்வத்தின் மீதும் திருட்டுக் குற்றம். என் மீதும் திருட்டுக் குற்றம். அந்தத் திருட்டுக் குற்றத்திலே பங்கு உண்டு என்று என்னுடைய பி.ஏ., சண்முகநாதன் மீதும் திருட்டுக் குற்றம்.

இப்படிப்பட்ட அரசியல் ரீதியான ஒரு வழக்கு போடப்பட்ட காரணத்தினாலேதான் அந்த வழக்கை அரசியல் ரீதியாகவே இந்த அரசு கருதி, உடனடியாக அதை வாபஸ் பெற்றது ஒன்றை நினைவுபடுத்துகிறேன், நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு. என்னவென்றால், 1967 ஆம் ஆண்டு நம்மை ஆளாக்கிய அறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையிலே இந்த அரசு அமைந்தபோது அவர்கள் ஒரு வழக்கை வாபஸ் பெற்றார்கள். என்ன வழக்கு தெரியுமா? இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில், திருப்பூரில் 11 போலீஸ்காரர்களை உயிரோடு கொளுத்தியதாகச் சில பேர் மீது தொடரப்பட்ட வழக்கை அண்ணா அவர்கள் இங்கே வாபஸ் பெற்றார்கள்.

1989 பிப்ரவரி 17] [டாக்டர் மு. கருணாநிதி]

(முற்பகல் 11-40)

கொலை வழக்கு; போலீசார்களை உயிரோடு கொளுத்தியதாக வழக்கு; வாபஸ் பெற்றபோது அப்போதிருந்த திரு. கருத்திருமன் போன்றவர்கள் கேட்டார்கள் இப்படி வாபஸ் பெறலாமா? கொலை வழக்கு அல்லவா? என்று கேட்டார்கள். அண்ணா சொன்னார். கொலை நடந்தது உண்மை, உயிரோடு கொளுத்தியது உண்மை, ஆனால் நீங்கள் யாரைப் பிடித்து இருக்கிறீர்கள்? அவர்கள்தான் குற்றவாளிகள் என்பது என்ன உண்மை? எனவே அவர்களை விடுதலை செய்தேன் என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். அது இதற்கும் பொருந்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருள்கூர்ந்து மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தன்னுடைய உரையை நிறைவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு விவரங்களைப் பற்றி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவற்றைச் செய்த அரசு அலுவலர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது இப்போது கூட நீங்கள் நடவடிக்கை எடுக்கலாம். அதனால்தான் நான் சொல்ல வந்தேன்; ஒரு ஆட்சியில் கீழே நடக்கிற, அதிகாரிகள் செய்கிற தவறுகளுக்கு எல்லாம் முதலமைச்சர் பொறுப்பு என்று எடுத்துக் கொள்ள முடியாது. இந்த சப்-இன்ஸ்பெக்டர் அடிபட்டிருக்கிறார் என்று சொன்னால், அதற்கு நீங்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்ள முடியாது. அதேபோல் அன்றைக்கிருந்த புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் அந்தச் சம்பவங்களுக்கெல்லாம் பொறுப்பு ஏற்றுக்கொள்ள முடியாது. கீழே இருக்கிற அதிகாரிகள் (குறுக்கீடு) நான் சொல்லுவது வழக்குகளைப் பற்றி அல்ல; விமான நிலையத்தில் நடைபெற்ற அதிகாரிகளின் அத்துமீறிய செயல்களைப் பற்றிச் சொல்கிறேன். அவ்வாறு அத்துமீறிய செயல்களை செய்த அதிகாரிகள் மீது நீங்கள் நடவடிக்கை எடுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லுகிற அக்கறை நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு அப்போது இருந்து அன்றைய

முதலமைச்சர் இடத்தில் அதைச் சொல்லி, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ? இந்தச் செய்தி அன்றைக்குப் பத்திரிகையில் வந்திருக்கிறது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் உண்டு, முதலமைச்சருக்கு என்னென்ன அதிகாரம் உண்டு ; என்றெல்லாம் ஏற்கெனவே 7 ஆண்டுக்காலம் முதலமைச்சராக இருந்த உங்களுக்குத்தெரியாதது அல்ல ; நீங்கள் வாதத்தால் என்னை மடக்கப் பார்க்கலாம் ; நான் உங்களோடு வாதம் செய்வதற்காக இதையெல்லாம் விவாதித்துக் கொண்டிருக்கவில்லை. வெளியே இருக்கிற ஓர் உணர்வை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன் அவ்வளவுதான். இதிலே இன்னும் சொல்லப்போனால் அந்த உதவியாளரை குற்றவாளி என்று கூட நான் சொல்லவில்லை நீதிமன்றத்தில் சொன்னதற்கு, பின்னாலே, இங்கே வைத்து இருக்கலாமே, அது இன்னும் சிறப்பாக இருந்திருக்குமே என்ற அந்த உணர்வைத்தான் நான் சொல்ல வந்தேன். அதை விட்டுவிடுகிறேன். அவரை நீங்கள் அதற்காகப் போகச் சொல்ல வேண்டாம். வைத்துக் கொள்ளுங்கள். உதவியாளராகவே இருக்கட்டும் ; அவர் சிறப்பாகப் பணியாற்றக்கூடியவர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் உதவியாளராக இருந்து உதவி செய்யட்டும். அதில் எல்லாம் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.

இங்கே ஓரே ஒரு பிரச்சினையை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் தலையிட்டபோது ஏதோ மக்கள் மனம் மாறி அப்படியே எங்களை ஆட்சியில் அமர்த்திவிட்டார்கள் என்று சொன்னார்கள். அதற்கு மட்டும் பதில் சொல்லி முடித்து விடுகிறேன்.

சென்ற தடவை நான் அறந்தாங்கித் தொகுதியில் போட்டியிட்டபோது—ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன்—1 லட்சத்து 12 ஆயிரம் வாக்குகள் பெற்றேன். இந்த தடவை அங்கே 1 லட்சத்து 45 ஆயிரம் வாக்குகள் பெற்றேன். 30 ஆயிரம் வாக்குகள் அதிகம். ஆனால், சென்ற தடவை திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற வாக்குகளைவிட, இந்தத் தடவை 200 வாக்குகள் குறைவு. திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்து இருக்கிறது அந்தத் தொகுதியிலே என்று பொருளா ? இல்லை. இது தோல்வியுற்ற

1989 பிப்ரவரி 17] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

தொகுதி விட்டுவிடுகிறேன். ஆனால், வெற்றி பெற்ற தொகுதிகளில் கூட வாக்குகளின் கணக்குகளைப் பார்த்தால் 1984 ஆம் தேர்தலின் போது எந்த அளவுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் வாக்குகளை வாங்கியிருந்ததோ ஏறத்தாழ அதே அளவுக்குத் தான் வாங்கியிருக்கிறது; பெருத்த வித்தியாசம் இல்லை. 4 சதவீதம் அதிகம், 34 சதவீதம் தான் வாங்கியிருக்கிறது. 3-ல் ஒரு பகுதி மக்கள் ஆதரவோடு தான் இந்த அரசு பொறுப்பு ஏற்றிருக்கிறது. 2 பங்கு மக்கள் இந்த அரசை எதிர்க்கிற மக்கள், எதிர்த்த மக்கள் தான் வெளியே இருக்கிறார்கள். மாண்புமிகு எங்களுடைய முன்னாள் நிதியமைச்சரும் இன்றைய வருவாய்த் துறை அமைச்சராக இருக்கும் அவர்கள் இங்கே சொல்லியதை நான் ஒத்துக்கொள்கிறேன். 3-ல் ஒரு பங்கு பெற்றிருந்தாலும் சரி, 20 சதவீதம் பெற்றிருந்தாலும் சரி (நீங்கள்) சட்டமன்ற உறுப்பினர்கள் பெரும்பான்மையாக இருந்தாலும் அந்தக் கட்சி தான் ஆட்சிக்கு வர முடியும். அது தெரிந்த ஒன்று தான். எனவே, அந்த அடிப்படையில் நீங்கள் பொறுப்பு ஏற்றிருக்கிறீர்கள். இருந்தாலும் மக்கள் எல்லாம் மாறி விட்டார்கள், 5 கோடி மக்களும் எங்களை இங்கே அமர வைத்திருக்கிறார்கள். பெரும்பான்மையான மக்களின் ஆதரவு எங்களுக்கு இருக்கிறது என்றெல்லாம் நீங்கள் சுட்டிக்காட்டுகிறீர்கள். அது தவறு. அந்த உணர்வோடு இருக்காதீர்கள். உங்களை எதிர்த்து மூன்றில் இரண்டு பங்கு மக்கள் வெளியே இருக்கிறார்கள். காலச்சக்கரம் சுழன்று கொண்டேதான் இருக்கும். 13 ஆண்டுக் காலம் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தது. நீங்கள் சொல்லுவதைப் போல அது அழிந்து போய்விடவில்லை. எனவே இன்றைக்கு இருக்கிற அ.இ.அ.தி.மு. கழகமும் 5 ஆண்டுக் காலத்திற்கு எதிர்க்கட்சியாக சிறப்பாகத் தமிழ் மக்களுக்குப் பணியாற்றி மீண்டும் தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறுவோம் என்ற நம்பிக்கை எங்களுக்கு மனப்பூர்வமாக இருக்கிறது. காலச்சக்கரம் சுழன்று கொண்டே தான் இருக்கும். சரித்திரம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பக்கம் மட்டும் திரும்பாது. ஆளும் கட்சியின் பக்கம் மட்டும் திரும்பாது; சரித்திரம் திரும்பிக் கொண்டே தான் இருக்கும். எதிர்க்கட்சியின் பக்கமும் திரும்பும். எனவே, அந்த உணர்வு உங்களுக்கு வேண்டும். இரண்டு பங்கு மக்கள் வெளியே எதிர்க்கிற மக்களாக இருக்கிறார்கள்; எதிர்த்த மக்கள் இருக்கிறார்கள். எனவே நடவடிக்கைகளை அந்த உணர்வோடு எடுங்கள், ஆட்சி செய்கிறபோது எல்லோருக்கும் நன்மை செய்

கிற உணர்வோடு நீங்கள் செய்யுங்கள். எனவே, ஜாக்கிரதையாய் இந்த அரசு இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். ஏன் என்றால் நீங்கள் அப்படி இருப்பீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். அப்படி நீங்கள் செயல்படுகிறபோது, ஒரு பரிபூரண எதிர்க் கட்சியாக இருந்து, ஆளுங்கட்சிக்கு எந்த விதத்திலெல்லாம் துணை நிற்க முடியுமோ, அந்த விதத்திலெல்லாம் துணை நின்று, மீண்டும் நாங்கள் ஆட்சிக்கு வருகின்ற வரை ஒத்துழைப்பு கொடுப்போம் என்று கூறி-ஆளுநர் உரைக்குப் பாராட்டு தெரிவிக்கலாம் என்று நினைத்தேன். ஆனால், பாராட்டக் கூடிய அம்சங்கள் எதுவுமில்லை. அதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. அதையெல்லாம் கூறுவதாக இருந்தால் நேரம் ஆகிவிடும். முதல் அமைச்சர் அவர்கள் பேசியபோது, நான் எழுதிய உரை என்றார்கள். அதுபற்றியெல்லாம் சொன்னால் ரொம்ப நேரம் ஆகும். ஆளுநர் உரை என்பது ஆளுநர்தான் எழுதி, அவர் பேசினார் என்பதுதான் பொருளே தவிர, அரசாங்கம் சொல்வதை வரிக்கு வரி, எழுத்துக்கு எழுத்து அப்படியே சொல்வது என்பதல்ல. கருத்துக்களை, திட்டங்களை அரசு கொடுத்து, மரபுப்படி ஆளுநர் வந்து படிக்கிறார். அதனாலே அதிலுள்ளதை மாற்ற முடியாது; திருத்த முடியாது என்பதல்ல. அரசினுடைய கவனத்தோடு, வரிக்கு வரி நான்தான் எழுதினேன் என்று சொன்னார்கள், பாராட்டுதான். அதனால்தான் தமிழ் நன்றாக இருக்கிறது. அதைத்தான் நான் சொல்ல வந்தேன். தவறாகச் சொல்ல வரவில்லை. அதிலே தமிழ் நன்றாக இருக்கிறது. அடுக்குமொழி இருக்கிறது. வர்ணனைகள் இருக்கின்றன. முதலமைச்சர் அவர்கள் தமிழ் ஆற்றல் மிக்கவர்; அவர் எழுதியதால்தான் அதெல்லாம் இருக்கின்றன. அதற்காகப் பாராட்டு தெரிவித்துக் கொள்கிறேன். அதிலுள்ள தமிழ் வாசகங்களுக்காகப் பாராட்டலாமே தவிர, மக்களுக்கு நன்மை செய்கிற எந்தத் திட்டமும் அதிலே இல்லை. நல்ல திட்டங்கள், மக்களுக்கு வாழ்வளிக்கிற திட்டங்கள் இல்லை. ; எனவே பாராட்ட முடியவில்லை, இந்த அளவோடு என் உரையை நிறைவு செய்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் துணைத் தலைவர் பேசும்போது இரண்டு முறை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொன்னார். அது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்—ஜெ. அவ்வளவுதான். இது 'ஜா'.

1989 பிப்ரவரி 17]

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூவானம் இன்றைக்கும் தொடர வேண்டாம். அது உங்களுடைய தீர்ப்புக்காக இருக்கிறது.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவையின் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி கூறி முன்மொழியப் பட்ட தீர்மானத்தை வழி மொழிந்தும், மறுப்புக் கருததுக்கள் தெரிவித்தும், அறிவுரைகள் கூறியும், இந்த மாமன்றத்தில் இதுவரை யிலே 44 பேர் உரையாற்றியிருக்கிறார்கள். அவர்களில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் 13 பேர் ; எதிர்க் கட்சிகளை, மற்றும் தோழமைக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் 31 பேர் உரையாற்றியிருக் கின்றார்கள். உரையாற்றிய அனைவருக்கும் என்னுடைய நன்றியை, பாராட்டுக்களை, இளையவர்கள் பலர் இருக்கின்ற காரணத்தால் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-50)

இந்த மாமன்றத்தில் நானும் நம்முடைய கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களும் 32 ஆண்டுகளுக்கு முன்பு எங்களை ஆளாக் கிய அண்ணன் பேறிஞர் அண்ணா அவர்களுடைய கரம் பிடித்துக் கொண்டு நுழைந்தவர்கள். அப்பொழுது பெருந்தலைவர் காம ராஜர் அவர்கள் முதலமைச்சராக, பெரியவர் பக்தவத்சலம் அவர் களும், ஆர். வெங்கட்ராமன் அவர்களும், சி. சுப்பிரமணியம் அவர் களும், கக்கன் அவர்களும், இன்றைக்கு ஜனதா தள உறுப்பினராக அமர்ந்திருக்கின்ற நண்பர் பூவராகன் அவர்களும் அமைச்சர்களாக இருந்தார்கள். அன்றைய தினம் 57-லே நாங்கள் இருந்தபொழுதும் 62-ல் நாங்கள் இந்த அவையில் இருந்தபொழுதும் அவர்களையெல் லாம் சந்திக்க, அவர்களோடு வாதிட, கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளக் கூடிய வாய்ப்புக்களைப் பெற்றவர்கள், அதைப்போலவே இந்த 32 ஆண்டுக் காலத்தில், இடையிலே ஒரு 3, 4 ஆண்டுக் காலம் தவிர. தொடர்ந்து இந்த மாமன்றத்திலே நானும் பேராசியர் அவர் களும் பணியாற்றியிருக்கின்றோம். இடையிலே மேலவையில் நானும், பாராளுமன்றத்திலே பேராசிரியர் அவர்களும் பணியாற்றி இருக்கின்றோம். இவைகளையெல்லாம் சொல்வதற்குக் காரணம், கடந்த காலம் ஒரு பெரும் தலைமுறை, பேறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர், பெரியவர் பக்தவத்சலம், கண்ணியத் திற்குரிய காயிதே மில்லத் அவர்கள், தந்தை பெரியார் மூதறிஞர்

பழகிடவும், அரசியல் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவுமான வாய்ப்புகளைப் பெற்று, ஒரு ஐம்பதாண்டுக் காலப் பொது வாழ்க் வாய்ப்புகளைப் பெற்று, ஒரு ஐம்பதாண்டுக் காலப் பொது வாழ்க் கையில் முப்பதாண்டுகளுக்கு மேல் ஆட்சி மன்றத்தின் மூலமாகவும் பொது மக்களுக்குப் பணியாற்றுகின்ற வாய்ப்பினையும் பெற்று, இரண்டு மூன்று தலைமுறை கடந்து இன்றைக்கு, அன்றைக்கு அமைச்சராக இருந்த கோவிந்தசாமி அவர்களுடைய மகன் சம்பத் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்கவும், அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர்களிலே ஒருவராக இருந்த பொன்னப்ப நாடாருடைய செல்வன் விஜயராகவன் அவர்கள் சட்டமன்ற உறுப் பினராகப் பொறுப்பேற்கவும், அன்றைக்கு எங்களோடு அமைச்ச ராக இருந்த அன்பில் அவர்களுடைய மகன் பொய்யாமொழி சட்ட மன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்கவும், எங்களோடு இருந்து துணை புரிந்து, இன்றைக்கும் துணை புரிந்து கொண்டிருக்கிற முன்னாள் மேலவையிலுடைய உறுப்பினர் இளம் பரிதியினுடைய மகன் இன்றைக்கு இளம்வழுதி, என்னுடைய ஆருயிர் நண்பரும், என்றும் என்னை அகலாது என்னோடு ஒரு பாதுகாவலராகவே, மெய்க்காப்பாளராகவே இருந்து விளங்கிய கடலூர் இளம்வழுதி யினுடைய மகன் புகழேந்தி இன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினர் களாக இருந்து பணியாற்றவும், இப்படி ஒரு இளைய தலைமுறை இன்றைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டு, நாட்டு மக்களுக்காகப் பணியாற்றுகின்ற நேரத்திலே, அவர்கள் எந்த வரிசையிலே இருந் தாலும்கூட அவர்களையெல்லாம் சந்திக்க, அவர்களுடைய இனிய வாதங்களைக் கேட்க, எழுச்சிமிகு உரைகளைக் கேட்க, எதிர்த் தரப்பிலேயிருந்து அவர்கள் உரையாற்றும்பொழுது அவைகளை யெல்லாம் அறிவுரைகளாக எடுத்துக் கொள்ளக்கூடிய ஒரு வாய்ப் பினை நான் பெற்றிருக்கின்றேன். எனவே, நீண்ட நெடுங்காலமாக இந்த அவையோடு தொடர்பு கொண்ட வகையில், இன்றைக்கும் தொடர்ந்து கிடைத்துள்ள இந்த வாய்ப்பை நான் எண்ணிப் பெரு மிதம் கொள்ளுகின்றேன்.

அதே நேரத்தில், ஒரு தயக்கம் எனக்கு இல்லாமல் இல்லை. இந்த நாட்டிலே உள்ள மக்களுக்கெல்லாம் அவர்களுடைய நலிவு நீக்கி, நல்வாழ்வு தரக்கூடிய இந்தப் பொறுப்பை இந்த நாட்டு மக்கள் இந்த அரசுக்குத் தந்திருக்கிற நேரத்தில், அதை எப்படி நிறைவேற்றப் போகிறோம் என்கின்ற திகைப்பு இருந்தாலும்கூட, இந்த மாமன்றத்திலே இருக்கின்ற உங்கள் அத்தனை பேருடைய

1989 பிப்ரவரி 17] [டாக்டர் மு. கருணாநிதி]

ஒத்துழைப்பும் இங்கேயும், வெளியிலேயும்கூடக் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இந்தப் பொறுப்பை நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றோம்.

இந்த அவையிலே எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவராக திருநாவுக்கரசு அவர்கள் வீற்றிருக்கின்றார்கள். காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவராக இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் வீற்றிருக்கிறார்கள். தலைவர்கள் வந்து இந்த உரையைச் சிறப்பிக்காவிட்டாலும், துணையாக இருந்து இந்தத் தலைவர்களாவது சிறப்பித்தமைக்காக நான், அவர்களுக்கு துணைத் தலைவர் என்கின்ற பெயர்கள் மிகப் பொருத்தம் (சிரிப்பு) என்ற வகையிலே, அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்ளுகின்றேன்.

நேற்றைக்கு நம்முடைய எதிர்க்கட்சியின் துணைத் தலைவர் திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிட்டதைப்போல மாணவப் பருவத்திலேயிருந்து அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்—சொன்னார், கலைஞரோடு நான் நெருங்கிப் பழகுகிற வாய்ப்புப் பெற்றவன் இல்லை என்று சொன்னார். பழகியிருந்தால் என்ன நிலையோ எனக்குத் தெரியாது, பழகாத குற்றத்தால் ஏற்பட்டது என்ன நிலையோ, விவரிக்க விரும்பவில்லை ஆனாலும், ஒரு துடிப்புள்ள இளைஞர், அவர் இங்கே எனக்கு 65 வயது என்பதையும் மறந்துவிட்டு, அவருடைய வயது மிக இளமையானது என்பதையும் சற்று ஒதுக்கி வைத்துவிட்டு, முருகனே பரமசிவனுக்கு ஞானப்பால் ஊட்டியதைப்போல, நீங்கள் ஜாக்கிரதையாக ஆட்சியை நடத்துங்கள், எச்சரிக்கையாக ஆட்சியை நடத்துங்கள் என்று கூறியபொழுது நான் புளகாங்கிதம் உற்றேன்.

அதைப்போலவே, நம்முடைய இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவராகப் பொறுப்பேற்று இருக்கிறார் என்றாலும், அடிக்கடி அவர்கள் 'தேசீயம்' என்கின்ற சொல்லைப் பயன்படுத்தினாலும்கூட, அந்தத் தேசீயத்தோடு தமிழை இணைத்துத் தமிழை என்றைக்கும் மறந்தவர் அல்ல; தமிழ் உணர்வை என்றைக்கும் துறந்தவர் அல்ல, எனவே, அந்த வகையில் அந்த உணர்வு இந்த ஆட்சிக்குப் பெரிதும் துணை நிற்கும் என்று நான் கருதுகின்றேன்.

அடுத்து, தொழிலாளர் இயக்கத்தினுடைய இரும்புத் தூண் என்று சொல்வதா அல்லது அரிவாள், சுத்தியல் என்று வர்ணிப்பதா என்று கூறக்கூடிய அளவுக்கு நீண்டநெடுங்காலமாக தொழிலாளர் இயக்கத்தோடு தொடர்பு கொண்டு எங்களுக்கு உற்ற நண்பராக, கருத்து மாறுபாடுகள் இருந்தாலும் கூட, பெருந்தன்மையோடு பழகுகின்ற நம்முடைய நண்பர் ரமணி அவர்கள் இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகத் தலைமைப் பொறுப்பை ஏற்று, அவர்களுடைய அறிவுரைகளையும் எங்களுக்கு தந்துகொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய சட்டமன்றத்தினுடைய பேரவையின் முன்னாள் தலைவர் அருமை நண்பர் பாண்டியன் அவர்கள் எங்களுடைய பத்துப் பேர்களை மொழிப் போராட்டத்தின் காரணமாக வெளியேற்றினாலும் கூட இன்றைக்கு நாங்கள் 146 பேர் உள்ளே அமர்ந்திருப்பதைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கிற இந்தக் காட்சியைக் கண்டும் அவர்களுடைய அறிவுரைகள்—அவர் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்கின்ற அளவுக்கு சொல்லுகின்ற இடியுரைகள் இவை எல்லாம்—இந்த அரசுக்கு மெத்தவும் பயன்படும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

அடுத்து, இன்றைக்கு நம்முடைய தீட்சிதர் அவர்கள் இங்கே வராவிட்டாலும் கூட நேற்றைக்கு அவர்கள் அரங்கநாதன் சார்பாக எனக்கு கிடைத்திரம், தேக ஆரோக்கியம், நீண்ட ஆயுள் இவை எல்லாம் வேண்டுமென்று கேட்டார்கள். ஒரு வேளை கேட்டதை நேரிலே சொல்வதற்காகத் திருவரங்கம் சென்றிருக்கக் கூடும். (சிரிப்பு) இருந்தாலும் அவர்களுடைய அன்பும் ஆதரவும் என்றென்றும் எங்களுக்கு இருக்கும் என்று கருதுகிறேன்.

இளமைக்காலம் தொட்டு திராவிட இயக்கத்தின்பால் மாறாத அன்பும் யாராலும் பிரிக்க முடியாத பாசமும் கொண்டவர் நம்முடைய இந்திய யூனியன் முஸ்லீம் லீக் (லத்திப்) என்கின்ற அணியைச் சேர்ந்த என்னுடைய அருமை நண்பர் லத்தீப் அவர்கள். அவர்கள் பன்மொழிப் புலவர். அன்றைக்கு இந்தியில் பேசிக் காட்டியதற்கேகூட காரணம் தனக்கு இந்தி தெரியும் என்பதை இந்த அவை தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே அல்லாமல் இந்தியைப் பேசவேண்டும் என்ற ஆர்வத்தால் அல்ல. அப்படிப்பட்டவர் இன்றைக்கு இஸ்லாமிய சமுதாயத்தின் நாதவனாக இந்த அவையிலே அமர்ந்து அந்தச் சமுதாயத்திற்கு, சிறு

பான்மைச் சமுதாயத்திற்கு என்னென்ன செய்யவேண்டுமென்று எடுத்துக் கூறுகின்ற வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களுடைய அந்த அறிவுரைகளைப் பெறுகின்ற வாய்ப்பினை நாங்களும் பெற்றிருக்கிறோம்.

அடுத்து அமர்ந்திருக்கிறவர் தமிழ்நாடு ஜனதா கட்சியினுடைய தலைவர் விஜயராகவன் அவர்கள். அவர்களுடைய தந்தையார் எனக்கு நெருங்கிய நண்பர். அவர் மரணம் அடைந்தபோது கண்ணீர் விட்டு அழுதவர்களிலே நானும் ஒருவன். அவருடைய சாம்பல் சென்னையிலே கொண்டுவந்து வைக்கப்பட்டபோது அதற்கு மாலையிட்டு, மரியாதை செலுத்தி, கண்கலங்கி, கைகூப்பி நின்றவன் நான். இன்னும் சொல்லப்போனால் அவருடைய மறைவுக்குப் பின் தம்பி—மன்னிக்க வேண்டும்; தம்பி என்று அழைக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள், இருந்தாலும் உரிமையோடு சொல்கிறேன்—பொன். விஜயராகவன் அவர்கள் முன்பு தேர்தலிலே போட்டியிட்டபோது கூட பொன்னப்ப நாடார் அவர்களுடைய மகன் நிற்கிறார்; எனவே முதல் தடவை தி.மு.க. அங்கே போட்டியிடக் கூடாது என்று வேட்பாளரைக்கூட நிறுத்தவில்லை. அந்த அளவுக்கு அவர்பால் அன்பும் பாசமும் எங்களுக்கு நிரம்ப உண்டு. அவர் இங்கே வேகமாகப் பேசினாலும் கூட விவேகமான கருத்துக்கள் பலவற்றை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அது மெத்தவும் தொடர்ந்து பயன்படும் என்றே நான் நம்புகிறேன்.

அதைப்போல வல்லரசு அவர்கள் பசும்பொன் தேவர் அவர்களால் உருவாக்கப்பட்ட 'பார்வேர்டு பிளாக்' கட்சியினுடைய ஒரு பிரிவான தமிழ்நாடு பார்வேர்டு பிளாக் கட்சியினுடைய பிரதிநிதியாக இங்கே வீற்றிருக்கிறார்கள். அந்த அருமருந்தன்ன நண்பருடைய அறிவுரைகள், ஆக்கபூர்வமான பணிகளுக்கு ஏற்ற நல்ல சொற்கள் இந்த அரசுக்கு மெத்தவும் பயன்படும் என்று நான் நம்புகிறேன்.

வராத காரணத்தால் மறந்துவிட்டேன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர், பிரச்சினைகளை மிக ஆழமாகப் புரிந்து கொண்டு அந்தப் பிரச்சினைகளை எடுத்து விளக்குவதிலே வல்லவர்களிலே ஒருவரானவர் அழகர்சாமி அவர்கள். அவர்கள் முன் வரிசையில் அமர்ந்து. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக

கொள்கைகளையும் அவர்கள் நிறைவேற்றக்கூடிய அந்த விளக்கங்களையும் எங்களுக்குத் தரக்கூடிய வாய்ப்பினைப் பெற்றிருக்கின்றார்கள்.

எனவே, எதிர்வரிசையில் அமர்ந்திருக்கிற உங்கள் அனைவருடைய நல்வாழ்த்துக்களை, உங்கள் அனைவருடைய நல் எண்ணங்களை, நல்ல அறிவுரைகளை இந்த அரசு மதிக்கவும் வரவேற்கவும், ஏற்புடையவைகளை நிறைவேற்றவும் என்றைக்கும் தயாராக இருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(நண்பகல் 12-00)

நம்முடைய திரு. குமரி அனந்தன் அவர்கள் பேசும்போது இந்த ஆளுநர் உரையில் பல இடங்களில் புள்ளிகள் காணப்படுகின்றன, பல இடங்களில் கோடுகள் காணப்படு கின்றன என்று சொன்னார்கள். இங்கேதான் நமது திறமை இருக்கிறது. புள்ளிகளையும், கோடுகளையும் இணைத்தால் அழகான கோலங்கள் உருவாகும். அப்படிப்பட்ட எழுச்சிக் கோலத்தை உருவாக்கத்தான் ஆளுநர் உரையிலே புள்ளிகளும், கோடுகளும் அமைந்திருக்கின்றன. கோலம் சில நேரங்களில் அலங்கோலமாக ஆகிவிடக்கூடும். அலங்கோலமாக ஆக்குகிற முயற்சிகள் இந்தப் பக்கத்திலே இருந்து நடைபெற்றாலும், அந்தப் பக்கத்திலேயிருந்து நடைபெற்றாலும் அதைக் கண் காணிக்கக்கூடிய அரும்பெரும் திறனும், அத்தகைய உரிமையும் படைத்த பேரவைத் தலைவராகத் தாங்கள் வீற்றிருக்கிறீர்கள். எனவே தமிழ்நாடு எழுச்சிக் கோலம் பூண, தமிழ்நாடு எழில் கோலம் பூண நாம் அனைவரும் நம்முடைய திரு. குமரி அனந்தன் அவர்கள் குறிப்பிட்டுள்ள புள்ளிகளையும், கோடுகளையும் பயன் படுத்திக் கொள்ள முன்வரவேண்டுமென்று முதலிலேயே நான் கேட்டுக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் குறிப் பிட்டார்கள். எல்லா மக்களுடைய வாக்குகளையும் பெற்றுமா நீங்கள் இந்த அவையிலே வீற்றிருக்கிறீர்கள். இல்லை. நீங்கள் 5 கோடி மக்களுடைய வாக்குகளைப் பெற்று இங்கே வீற்றிருக்க வில்லை. எல்லா வாக்காளர்களுமாக வெளியே இருக்கின்ற 3 கோடி பேர்களுடைய வாக்குகளையும் பெற்று நீங்கள் இங்கே வீற்றிருக்கவில்லை என்று சொன்னார்கள். என்ன செய்வது?

இன்றைக்கு இந்தியாவிலே இருக்கின்ற தேர்தல் முறை அப்படித்தான் இருக்கிறது. ஏனென்றால் விகிதாச்சாரம் பிரதிநிதித்துவம் என்கிற ஒரு முறை நடைமுறைக்கு வருகிற வரையில் இது தான் நாம் ஏற்றுக்கொண்டுள்ள முறை. அதற்கேற்பத்தான் வாக்குகளும், அந்த வாக்குகள் விழுவதைப் பொறுத்து இடங்களின் எண்ணிக்கையும் அமைய முடியும் என்பதை நாம் மறந்துவிடவே கூடாது. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை வேண்டுமென்ற அந்தக் கருத்தை நம்முடைய அண்ணா அவர்கள் அடிக்கடி வலியுறுத்தி இருக்கிறார்கள்.

தினமணி பத்திரிகையின் பழைய ஆசிரியர் திரு. சிவராமன் அவர்கள் கூட அடிக்கடி அந்தக் கருத்தைக் கோடிட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவிலே உள்ள பல அரசியல் விற்பன்னர்கள் கூட அத்தகைய தேர்தல் முறை வரவேண்டுமென்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்போது அந்தத் தேர்தல் முறை இல்லை. இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறது என்றால் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப் போல 33.14 விழுக்காடு பெற்றுத்தான் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறது. அவர்கள் சொல்வதிலே பொருள் இருக்கிறது. 33½ சதவிதம் வாக்குகள் பெற்ற நீங்கள் எப்படி எல்லா மக்களுக்கும் பிரதிநிதியாக ஆக முடியும் என்று கேட்டார்களே, அதில் பொருள் இருக்கிறது. நான் அந்தக் கருத்தைத்தான் எடுத்துக் கொள்கிறேன், வாதிட விரும்பவில்லை. ஆனால் அவர்களும் மற்றவர்களும் ஒன்றை மறந்துவிடக்கூடாது.

1977 ஆம் ஆண்டு என்னுடைய அருமை நண்பர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது 130 இடங்களைப் பெற்று முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்கள். அப்போது அவர்கள் பெற்ற வாக்குகளின் விகிதாச்சாரம் 30.37 சதவிதம்தான். 30.37 சதவீதம் வாக்குப் பெற்றவர்கள் மக்களின் பெரும்பான்மையான ஆதரவைப் பெற்றவர்கள் என்று எண்ணும்போது 33.44 சதவிதம் பெற்றவர்கள் பெரும்பாமையான ஆதாரவைப் பெற்றவர்கள் அல்ல என்று யாரும் வாதிட்டுவிட இயலாது. இன்றைக்கு இருக்கிற தேர்தல் முறை அப்படி இருக்கிற காரணத்தால் அதை நான் சொல்ல வந்தேனே அல்லாமல் வேறல்ல.

எதற்கெடுத்தாலும் திரு. எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரை எடுத்துக் கொண்டு அவரால் வந்துவிட்டது என்று குறை சொல்லா திருப்பதற்காகக் கூட ஒரு கதையை நம்முடைய எதிர்க்கட்சித் துணைத்தலைவர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள்.

ஒரு சிகை அலங்காரத் தொழிலாளி ஒரு அரசனுக்கு நாள் தோறும் சென்று முக வழிப்பில் ஈடுபட்டார் என்றும், அப்படி ஈடுபட்டபோது ஒருநாள் அவன் கையிலே இருந்த தங்க மோதிரத்தை அரசன் பார்த்துவிட்டு, எப்படி நாடு இருக்கிறது என்று கேட்டான் என்றும், நாடு முழுவதும் தங்கக் குவியலாக இருக்கிறது என்று அவன் சொன்னான் என்றும், அதே தொழிலாளி மறுநாள் சென்றபோது மோதிரம் இல்லை என்றும், அப்போது அரசன் கேட்டான் நாடு எப்படி இருக்கிறது என்றும், நாட்டில் ஒரு குண்டுமணி அளவு கூட தங்கம் இல்லை என்று தொழிலாளி சொன்னான் என்றும் குறிப்பிட்டார்கள். எனக் குள்ள சந்தேகம் எல்லாம் முதல் நாள் போட்டுக் கொண்டு வந்த மோதிரத்தை மறுநாள் காணவில்லை என்றால் அந்த அரசன் மீது தான் சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. அவன் எண்ணியிருக்க லாம், சாதாரணத் தொழிலாளி எப்படி தங்க மோதிரம் போடலாம் என்று. அவன் வெளியே செல்லும்போது அந்தத் தங்க மோதிரத்தை தன்னுடைய சேவகர்களை விட்டுப் பறிக்கச் சொல்லியிருக்கலாம். அதனால் அவன் அரசனை இடித்துக் காட்டுவதற்காக நாட்டில் குண்டுமணி அளவுக் கூடத் தங்கம் இல்லை என்று கூறியிருக்கலாம். கதைகளை வைத்துக்கொண்டு வாதம் செய்துகொண்டே போனால் அவரவர்களுடைய கற் பனைக்கு ஏற்றவாறு வாதங்களைச் செய்துகொண்டு போகலாம். இருந்தாலும் நாம் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்கவேண்டிய கட்டத்திலே இன்றைக்கு இந்த மாமன்றத்திலே கூடியிருக்கிறோம். இந்த மாமன்றத்தைப் பொறுத்தவரையில் பேசிய பல உறுப் பினர்கள், எதிர்க்கட்சிகள், தோழமைக் கட்சிகள், இவைகளைச் சார்ந்த உறுப்பினர்கள் எல்லாம் ஒன்று சொன்னார்கள். "தேர்தல் வாக்குறுதிகளை எல்லாம் ஆளுநர் அவர்கள் உரையிலே குறிப்பிட வில்லையே, அது என் ?" என்றெல்லாம் கேட்டார்கள்.

நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்கூட அதைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதிலே 24-வது பகுதியை படித்துக் காட்டினார்கள். ஆனால் முழுவதையும் படித்துக்

காட்டவில்லை. இந்த ஆளுநர் உரையிலே 24-வது பாராவிலே, நாம் குறிப்பிட்டிருக்கிறோம். இந்த அரசின் சார்பில் நிறைவேற்றப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ள, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கான பல்வேறு திட்டங்கள் மற்றும் சட்டங்களின் முழு விவரங்கள் இந்த அவையில் அவ்வப்போதும் வரவு செலவுத் திட்ட அறிக்கையின் வாயிலாகவும் இந்தக் கூட்டத் தொடரில் உங்களின் ஒப்புதலுக்கு வைக்கப்படும். "அரசின் சார்பில் நிறைவேற்றப்படும் என்று உறுதியளிக்கப்பட்டுள்ள" என்கின்ற வாசகத்தை நாகரீகமாக அமைத்திருப்பதற்குக் காரணம் கவர்னர் இதைப் படிக்கின்ற நேரத்தில், "திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டுள்ள" என்று அவர் படிப்பது முறையாக இருக்காது. அவரைப் படிக்கச் சொல்லி வலியுறுத்துவது அரசியல் பண்பாக இருக்காது என்ற காரணத்தினாலேதான் "திராவிட முன்னேற்ற கழகத்தின் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டுள்ள அந்த உறுதி மொழிகள்" என்று குறிப்பிடாமல், இந்த அரசின் சார்பில் நிறைவேற்றப்படும் என உறுதியளிக்கப்பட்டு அந்த விவரங்கள் எல்லாம் அடிக்கடி இந்த அவையிலே அவ்வப்போது தரப்படுகின்ற திட்டங்கள், சட்டங்கள் மூலமாகவும், வரவு செலவுத் திட்டம் வாயிலாகவும் உங்கள் ஒப்புதலுக்கு வைக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே அது எங்கே, இது எங்கே என்று அலைந்து திரியவேண்டுமென்ற அவசியம் யாருக்கும் இல்லை.

நம்முடைய திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். அவர்கள் பேசும் போதுகூடச் சொன்னார்கள். நான் அதைத் தேடிப் பார்க்கிறேன். கிருஷ்ணா நதித் திட்டத்தைத் தடவிப் பார்க்கிறேன். என்னென்னவோ செய்து பார்க்கிறேன் என்றெல்லாம் சொன்னார்கள். அந்தச் சொற்றொடர் எனக்கு நினைவில் இல்லை. தேடிப் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. 'அரசின் சார்பில் நிறைவேற்றப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ள' என்ற வாசகத்தை வைத்துக் கொண்டு தேர்தல் அறிக்கையை ஒரு முறை படித்துப் பார்த்தாலே அந்த அறிக்கையிலே சொல்லப்பட்டது படிப்படியாக, இந்தக் கூட்டத் தொடரிலும், இனி தொடர்ந்து நடைபெற இருக்கின்ற வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரிலும் நிறைவேற்றப்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. உங்களுடைய அறிவுரை

களோடு உங்களுடைய கருத்துரைகளோடு, உங்களுடைய மேலான ஒப்புதலோடு அவைகள் நிறைவேற்றப்பட இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சில உறுப்பினர்கள் வேகமாகப் பேசினார்கள். சிலர் கடுமையாகப் பேசினார்கள், அப்படிக் கடுமையாக, வேகமாகப் பேசினாலும் கூட, அவைகளை எல்லாம் இந்த அரசுக்குத் தேவைப்படுகின்ற சிகிச்சையாகத்தான் கருதிக் கொண்டேன். கண்ணப்ப நாயனார் கடவுளுடைய முகத்திலே செருப்பை ஊன்றிக் கொண்டு சிகிச்சை செய்தார். கடவுள் முகத்திலே செருப்பை ஊன்றவேண்டுமென்பது கண்ணப்ப நாயனாருடைய நோக்கமல்ல. கடவுளுக்குச் சிகிச்சை செய்ய வேண்டுமென்பதுதான் நோக்கம். அதுபோல, நீங்கள் யாராவது கடுமையாகப் பேசியிருந்தாலும்கூட, அப்படிப் பேசியதையெல்லாம், கண்ணப்ப நாயனார் கடவுள் முகத்திலே செருப்பை ஊன்றியதுபோல நான் எடுத்துக் கொள்வேன். நல்ல காரியத்திற்கு அரசைத் திருத்துவதற்காக, இந்த அரசிலே காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்திப்பதற்காக நீங்கள் தந்த அறிவுரைகள், சிகிச்சை என்ற முறையிலே தான் எடுத்துக் கொள்வேன் என்பதையும் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

(பிற்பகல் 12-10)

உங்களுக்குத் தெரியும். 21—1—1989-ல் பொதுத் **தேர்தல்.** அதற்குப் பிறகு 22 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை, கழகம் பெரும் பான்மை வெற்றியைப் பெற்றது என்ற செய்தி. உடனடியாக 25-ம் தேதியே சட்டமன்றக் கட்சிக் கூட்டம் கூட்டப்பெற்று கட்சியினுடைய தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். மறுநாள் **26-ம்** தேதியே கவர்னர் அவர்களைச் சந்தித்து அமைச்சரவையினுடைய பட்டியல் வழங்கப்படுகிறது. மறுநாள் 27 ஆம் தேதியே அமைச்சரவை பதவி ஏற்கிறது. 28-ம் தேதி அண்ணா நினைவு நாளை ஒட்டியும் இந்த அமைச்சரவை பதவி ஏற்றதையொட்டியும் சிறையிலே இருந்த கைதிகளுக்குத் தண்டனைக் குறைப்பு. ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளுக்கு ஓர் ஆண்டும், மற்ற கைதிகளுக்கு 6 மாதமும் தண்டனைக் குறைப்பு செய்யப்பட்டு, அதன் காரணமாக 843 பேர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அதிலே 71 பேர் பெண்கள். தண்டனைக் குறைப்பினால் ஆதாயம் பெற்றவர்கள் எல்லா சிறைச்சாலைகளிலும் 4 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள். மறுநாள் 30 ஆம் தேதி தலைமைச் **செயலகத்தில்**

காந்தியடிகளுடைய நினைவு நாளில் உறுதிமொழி ஏற்பு. 1 ஆம் தேதி அமைச்சரவைக் கூட்டம். கேபினட் கூட்டம். 3 ஆம் தேதி அண்ணா நினைவஞ்சலியின்போது பெண்களுக்கு 30 சதவிகித வேலை என்று அரசின் அறிவிப்பு. 6 ஆம் தேதி சட்டப் பேரவைத் துவக்கம். உறுப்பினர்களுடைய பதவி ஏற்பு நிகழ்ச்சி. 7 ஆம் தேதி காலையில் உள்ளாட்சி மன்ற அமைச்சருடைய தலைமையில் ஒன்றியத் தலைவர்களுடைய கருத்தரங்கம், மாலையிலே நகராட்சித் தலைவர்களுடைய கருத்தரங்கம். 8 ஆம் தேதி சட்டப் பேரவைத் தலைவர் தேர்தலும், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் தேர்தலும், மறுநாளே டெல்லியில் பிரதமரையும் குடியரசுத் தலைவரையும், குடியரசுத் துணைத் தலைவரையும், நிதியமைச்சரையும் கலந்துகொண்டு பேசுகின்ற விவாதங்கள். இலங்கைப் பிரச்சினை குறித்து பிரதமருடன் இரண்டு சுற்று பேச்சு வார்த்தை. இடையிலே வெளியுறவு அமைச்சரான நட்வர்சிங்கிடத்திலே 1½ மணி நேரத்திற்கு மேல் இலங்கைப் பிரச்சினை குறித்த விவரங்களை அறிந்து கொள்கின்ற வாய்ப்பு. 11 ஆம் தேதி கவர்னர் உரையும், அதைத் தொடர்ந்து இன்று வரையிலே இந்த விவாதத்திலே கலந்து கொள்கிற நிலை. நீங்கள் எண்ணிப் பாருங்கள். 22 ஆம் தேதி தேர்தல் முடிவிற்குப் பிறகு, எங்கேயாவது ஓய்வு எடுத்துக்கொண்டு, இந்த அரசு வெறுமனே இருந்திருக்கிறதா, சுழன்று சுழன்று பணியாற்றியிருக்கின்றதா என்பதைத் தயவுசெய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று மாமன்ற உறுப்பினர்களை எல்லாம், தலைவர் அவர்களே, உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

டெல்லிக்குச் சென்றபோது என்னென்ன பிரச்சினைகள் குறித்துப் பேசப்பட்டன என்பதை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சொல்லி, வினாக் கணைகளை இங்கே விடுத்தார்கள். அவர்களுக்கு விளக்கம் அளிக்கின்ற வகையில் மத்திய அரசிடத்தில் 200 கோடி ரூபாய் நாம் கேட்டிருக்கிறோம். ஏற்கெனவே கவர்னர் ஆட்சியில் ஆகஸ்ட் திங்களிலும், அதற்குப் பிறகு ஜனவரித் திங்களிலும், கவர்னர் அவர்களே 150 கோடி ரூபாய் திட்டத்திற்காக தேவைப்படுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். முதலில் இங்கே விவாதித்தபடி, 1400 கோடிக்கு மேற்பட்ட திட்டம் என்பது, நம்முடைய resources நிதி ஆதாரங்களை கணக்கிலே எடுத்துக்கொள்ளாமல் போடப்பட்ட ஒரு விளம்பரத் திட்டமாக அறிவித்த காரணத்தினாலேதான்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 பிப்ரவரி 17

150 கோடி ரூபாய் வந்தாலும், 140 கோடி ரூபாய் திட்டத்தை நிறைவேற்ற முடியாத சூழ்நிலையிலேதான் 200 கோடி ரூபாய் தேவை என்று மத்திய நிதியமைச்சரிடத்திலேயும், பிரதமரிடத்திலேயும் நான் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவர்களும் அது குறித்து ஆவன செய்வதாக வாக்களித்திருக்கிறார்கள். என்ன செய்வார்களோ எனக்குத் தெரியாது. ஆனால் நம்பிக்கொண்டிருக்கிறோம். நெய்வேலியிலிருந்து royalty லாபத்திலே பங்கு, இவைகளையும் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு நாங்கள் கேட்டிருக்கிறோம். இது 1956 ஆம் ஆண்டு முதல் கணக்கிடப்படவேண்டிய ஒன்று. அப்படிக் கணக்கிட்டால் 100 கோடி ரூபாய் அளவிற்கு நம்முடைய மாநில அரசுக்கு வர வேண்டியிருக்கும். அதைப்போல அரிசியையும் சர்க்கரையையும் அதிகமாக தமிழ்நாட்டிற்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். 80 ஆயிரம் டன் வீதம் ஒதுக்கிக்கொண்டிருந்த நிலையை, திடீரென்று 40 ஆயிரம் டன் என்று குறைத்து ஒதுக்கிய காரணத்தால் அந்த 40 ஆயிரம் டன்னையும் சேர்த்துத் தர வேண்டுமென்று அங்கே உள்ள தொடர்புடைய அமைச்சரிடத்திலும், குறிப்பாக தலைமை அமைச்சர் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்களிடத்திலும் நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். அதுவன்னியில் தமிழகத்திற்கான பல்வேறு விஷயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக மத்திய அரசினுடைய முதலீடு தமிழ்நாட்டுத் தொழில் துறையில் அதிகமாக வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது. உதாரணமாக, ஆவடி ஆயுதத் தொழிற்சாலையை விரிவுபடுத்துவது, நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி 3-வது சுரங்கமும் மின் உற்பத்தித் திட்டமும் என்ற கோரிக்கை, அதன்மூலம் கிடைக்கிற நிலக்கரியைப் பயன்படுத்திக்கொண்டு, தமிழ்நாடு மின் வாரியமே அனல் மின் நிலையம் ஏற்படுத்துகின்ற கோரிக்கையை வற்புறுத்துவது, காவிரி நதி தீரத்தை நவீனப்படுத்தல் modernisation scheme ஏற்கெனவே உலக வங்கி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே பணம் ஒதுக்கியதாகச் சொல்லி, அந்த வேலைகள் எல்லாம் தொடங்கப்பட்டு, இடையிலே ஏதோ தயக்கம் காட்டப்பட்டு விட்டது—பல்வேறு பிரச்சினைகளால், அதுவும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. கிழக்குக் கடற்கரை ஓரத்தினுடைய அந்தச் சாலை வலியுறுத்திக் கேட்கப்பட்டிருக்கிறது. கடலூரிலிருந்து கன்னியாகுமரி வரையிலே அந்தச் சாலையை அமைப்பதற்கு வலியுறுத்தப்பட்டிருக்கிறது. சென்னையிலே சுரங்க வேக ரயில் பாதை கேட்கப்பட்டிருக்கிறது. சேலம் உருக்காலைத்

திட்டத்திற்கு தி.மு.க. ஆட்சியிலே போராடி, சேலம் உருக்காலைத் திட்டம் இணைக்கப்படாத நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை தமிழக மக்கள் சார்பாக நாங்கள் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று என்.டி.சி. மீட்டிங்கிலே நான் வலியுறுத்தி, அடுத்த ஒரு வாரத்திலே பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அந்தத் திட்டத்தை அறிவித்து, அவர்களே நேரிலே வந்து, சேலத்திலே சேர்வராயன் மலை ஓரத்திலே அந்தத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவை நடத்தினார்கள். ஆனால் அந்த உருக்காலைத் திட்டம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இறக்கப்பட்ட பிறகு, வெறும் உருட்டாலைத் திட்டமாக ஸ்டீல் ரோலிங் மில் என்ற அளவுக்கு ஆகிவிட்டது. அதை மறுபடியும் உருக்காலைத் திட்ட மாக ஆக்க வேண்டுமென்று விளக்கங்களை அங்கே தந்திருக் கிறோம். இதுபோன்ற திட்டங்களைப் பற்றியெல்லாம் அங்கே கேட்டுக்கொண்டு, திரும்பியிருக்கிறோம். அதற்கு முன்பே, 7 ஆம் தேதியே, நகராட்சித் தலைவர்களுடைய கூட்டத்தை ஒன்றியத் தலைவர்களுடைய கூட்டத்தை சென்னையிலே கூட்டினோம். அந்தக் கூட்டத்திலே நகராட்சி மன்றத் தலைவர்கள், ஒன்றியத் தலைவர்கள் அளித்த கருத்துக்களின் அடிப்படையில் இந்த மாமன்றத்தில் நான் சில அறிவிப்புகளை வெளியிட விரும்பு கிறேன், உங்களுடைய அன்பான ஆதரவும், மகிழ்ச்சியும் அதற்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு.

1986 ஆம் ஆண்டு நகராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற்று முடிந்த பிறகு கடந்த கால அரசால் பல அதிகாரங்கள் பறிக்கப் பட்டுவிட்டன.

ஒன்று, ஒவ்வொரு நகராட்சியிலும் மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்ட அலுவலர் தலைவராகவும், பொதுப் பணித் துறையைச் சேர்ந்த உதவி செயற் பொறியாளர், நகர மன்றத் தலைவர், மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் இருவர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு வரி விதிப்பு மேல் முறையீட்டுக் குழு ஏற்படுத்தப்பட்டது முன்பு. இப்போது, இனி இந்த அதிகாரம் முழுமையும் நகராட்சிகளுக்கே வழங்கப்படு மென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இரண்டு, நிதி நிலைமை சீர் குலைந்த முறையில் செயல்படும் நகராட்சி மன்றங்களைக் கலைப்பதற்கு அரசுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது முன்பு. நிதி ஆதாரங்களை, நிதி குறைந்த

நகராட்சி மன்றங்களுக்குத் தர வேண்டியது அரசின் கடமையாக இருக்க, அதைக் காரணமாகக் காட்டி, நகராட்சி மன்றங்களைக் கலைப்போம் என்று தொடுக்கப்பட்ட அந்த அதிகாரக் கணையை இந்த அரசு கைவிடுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மூன்று, சரியாகச் செயல்படாத மற்றும் தங்கள் பதவியைத் தவறாகப் பயன்படுத்தும் நகராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களை, பொது மக்களின் வாக்கெடுப்பு எடுத்து, அவர்களின் பதவிகளை இழக்கச் செய்ய வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது இது நன்றாகத் தெரிந்தாலும் நடைமுறைக்கு ஒவ்வாத ஒன்று. எனவே தவறானவர்கள்மீது நடவடிக்கை எடுக்க எத்தனையோ வழிமுறைகள் இருக்கும்போது மீண்டும் பொதுமக்களிடம் வாக்கெடுப்பு எடுப்பதென்பது நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்று என்பதால் இதுவும் கைவிடப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அடுத்து, மத்திய அல்லது மாநில அரசுகளிடமிருந்து மானியம் அல்லது கடன் பெற்று நகராட்சிகளில் கட்டப்படும் கட்டடங்கள் மற்றும் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல் மற்றும் திறப்பு விழா போன்ற நிகழ்ச்சிகளுக்கு நகர மன்றத் தலைவருக்கு தலைமை வகிக்கும் தகுதி கிடையாது. என்ன தகுதி தெரியுமா அவர்களுக்கு? நகர மன்றத் தலைவர்களோ அல்லது துணைத் தலைவர்களோ வரவேற்புரை மாத்திரம் நடத்தலாம். தலைமை வகிக்க முடியாது. இப்போது அவர்கள் தலைமையேற்கலாமென்று இந்த அரசு அறிவிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இவைகள் எல்லாம் உரிமைகள் பறிக்கப்பட்டது மாத்திரமல்ல, கௌரவமே பறிக்கப்பட்டது இந்த கௌரவங்கள் திரும்பத் தரப்படுகின்றன.

அடுத்து, நகர மன்றக் கூட்டங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளும்போது, அவர்களுக்கு நகர மன்றத் தலைவர் அமரும் கூட்டத்தின் மேடையிலேயே இட ஒதுக்கீடு செய்ய வேண்டும். இது முந்தைய அரசினுடைய குறிப்பு. இப்போது சட்டமன்ற உறுப்பினர்கள் அதில் கலந்துகொள்ளலாம், ஆனால் மேடையிலே இட ஒதுக்கீடு கட்டாயம் இல்லை என்று இந்த அரசு அறிவிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

ஊராட்சி ஒன்றியங்கள், 1938 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி இணைப்பு உறுப்பினர்களை கோவாப்ட் செய்வதற்கு சிறப்புக் கூட்டங்கள் மற்றும் துணைத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான சிறப்புக் கூட்டங்கள் ஆகியவைகளைக் கூட்டும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியத் தலைவரிடமிருந்து பறிக்கப்பட்டு, கோட்ட வளர்ச்சி அலுவலர்களிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. அதை மாற்றி, இந்த அதிகாரம் மீண்டும் ஊராட்சி ஒன்றியத் தலைவரிடமே வழங்கப்படும் என்றும் அறிவிக்கிறேன்.

(பிற்பகல் 12-20)

ஊராட்சி ஒன்றியங்களின் நியமன உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கான அதிகாரம் மீண்டும் ஊராட்சி ஒன்றியங்களிடமே வழங்கப்படும் என்றும் அறிவிக்கிறேன்.

பொது சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளும் அதிகாரமும் ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து அரசுத் துறைக்கு முன்பு மாற்றப்பட்டுவிட்டது. இந்த அதிகாரம் மீண்டும் ஊராட்சி ஒன்றியங்களுக்கே வழங்கப்படும் என்று அறிவிக்கிறேன்.

தொடக்கக் கல்விப் பணிகளை மேற்கொள்ளும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து எடுக்கப்பட்டு, கல்வித் துறைக்குக் கொடுக்கப்பட்டது. இந்த அதிகாரம் மீண்டும் ஊராட்சி ஒன்றியங்களுக்கே வழங்கப்படுகிறது. ஆனாலும், அங்கே பணி புரியும் ஆசிரியர்கள், அரசுப் பணியாளர்களாகவே கருதப்படுவார்கள் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண்மைக்கான பணிகளை மேற்கொள்ளும் அதிகாரம், பயிற்சிவழித் திட்டத்தின் மூலமாக வேளாண்மைத் துறையிடம் முன்பு ஒப்படைக்கப்பட்டது. இந்தப் பணிகளை மேற்பார்வையிடும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் விடப்படும் என்று அறிவிக்கிறேன்.

வறுமை ஒழிப்பு திட்டங்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு, ஒன்றிய அளவிலான ஆலோசனைக் குழு, அதாவது ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், ஒன்றியத் தலைவர், சட்டப் பேரவை உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரால் நியமிக்கப்பட்ட நான்கு பேர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவிடம் முன்பு ஒப்படைக்கப்பட்டது. அதாவது, ஒன்றியத் தலைவர்—பாவம்—அதன் உறுப்பினராக

மாத்திரம்தான் இருப்பார். வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களைக் கண்டுபிடிக்கிற குழுவில் ஒன்றியத் தலைவர் வெறும் உறுப்பினராக மட்டும்தான் இருப்பார். இப்போது அதை மாற்றி, மீண்டும் 1986-க்கு முன்பிருந்த நிலை உருவாக்கப்படும் என்று இன்றைக்கு அறிவிக்கப்படுகிறது.

இப்படிப்பட்ட உரிமைகளை; அடிமட்டத்திலே உள்ள ஊராட்சிகள், உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்குகிற இந்தக் கட்சிதான், இந்த அரசுதான் மாநில சுயாட்சியைக் கேட்கிறது. மாநில மக்கள்—எப்படி ஊர் மக்களோடு நகர மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு, தலைவர்களும், உறுப்பினர்களும், பிரதிநிதிகளும் அதிக அதிகாரம் இருந்து, அதிக நன்மைகளை அவர்களுக்குச் செய்ய முடியுமோ அதைப்போல், மத்தியில் அதிகாரங்கள் குவிக்கப்படாமல், மாநிலங்களுக்கும் அதிக அதிகாரம் இருந்தால், மக்களோடு நெருங்கி, பல காரியங்களைச் செய்ய முடியும் என்ற காரணத்திற்காகத்தான் மாநில சுயாட்சி கேட்கிறோம். நம் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் கூட குறிப்பிட்டார்கள். "இதை நாங்கள் எங்களுடைய ஆட்சிக் காலத்திலேயே சொல்லி இருக்கிறோம், அண்ணா சொல்லியிருக்கிறார்" என்றெல்லாம் அவர்கள் குறிப்பிட்டார்கள். எனக்கு ஒரு வருத்தம் என்னவென்றால், 1974-ஆம் ஆண்டு இதே மாமன்றத்தில், மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது, அதை ஆதரிக்கிற சூழ்நிலையில் அ.தி.மு.க. உறுப்பினர்கள் இல்லை என்பதுதான். இதுதான் எனக்கு வருத்தமான செய்தி. ஆனால், இன்றைக்கு அது மாற்றப்பட்டு, அவர்களும் கூட சேர்ந்து மாநில சுயாட்சிக்காக முழக்கமிடுவதை, நமக்குக் கிடைத்த பெரு வாய்ப்பாகக் கருதி அவர்களையும் நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து அவர் பேசும்போது, "ஏழையின் இளைத்த தோள்களில், சுமையை ஏற்றாமல், வருமானம் பெருக்கப்பட வழிவகை கோரப்படும்" என்று அறிக்கையிலே குறிப்பிட்டதை நம் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிட்டு, நீங்கள் வரி போடப் போகிறீர்கள், ஏழைகளைப் பாதிக்காமல் வரிகளைப் போடுங்கள் என்று சொன்னார்கள். வரி போடப் போகிறோம்; யாருக்கு என்பதை விவரமாக இங்கே சொல்ல விரும்புகிறேன்.

1989 பிப்ரவரி 17] [டாக்டர் மு. கருணாநிதி]

முதலில் நான் பாடம் நடத்துவதாகக் தயவுசெய்து யாரும் கருத வேண்டாம். மன்னித்துக் கொள்ளுங்கள். இருந்தாலும் வயதில் கொஞ்சம் மூத்தவன். பொறுத்துக் கொள்ளுங்கள். 2, 3 சித்தரங்களை உங்கள் மனக்கண்ணின் முன்னாள் நீங்கள் கற்பனை செய்து கொள்ளுங்கள்! எரி சாராயம் காய்ச்சுகிற தொழிற்சாலை ஒன்று. அதைச் சுற்றி ஒரு ரவுண்டு போட்டு வைத்துக் கொள்ளுங்கள். அதற்கு டிஸ்டிலரி என்று பெயர். அங்கே இருந்து ஒரு கோடு கிழியுங்கள். அதன் பக்கத்தில் 'ஐ.எம்.எப்.எஸ்' என்று இன்னொரு தொழிற்சாலை அதற்கும் ரவுண்டுபோட்டு, அதிலிருந்து ஒரு கோடு கிழியுங்கள். அங்கே இருந்து ''டாஸ்மாக்'' (தமிழ்நாடு ஸ்டேட் மார்க்கெட்டிங் கார்ப்பரேஷன்) என்று எழுதி அதற்கும் ஒரு ரவுண்டு போட்டு அங்கே இருந்து ஒரு கோடு கிழித்து வைத்துக் கொள்ளுங்கள். பிறகு அங்கே இருந்து ஒரு கோடு கிழித்து ''ரீடெய்ல் ஷாப்'' என்று எழுதிக் கொள்ளுங்கள். மீண்டும் நினைவுப்படுத்துகிறேன். நன்னன் பாடம் நடத்துவதைப் போல்--டி.வி.யில்!

முதல் ரவுண்டிலிருந்து ஒரு கோடு கிழித்து 'ஐ.எம்.எப்.எஸ்.' அங்கே இருந்து ஒரு கோடு போட்டு ''டாஸ்மாக்'' இது அரசாங்க நிறுவனம். அதற்கு அடுத்தது ரீடெய்ல். இந்த Distillary இருக்கிறதே எரி சாராயத்தை உற்பத்தி செய்கிற இடம் Rectified Spirit- உற்பத்தி செய்கிற இடம். I.M.F.S. என்று இருக்கிறதே அது பிராந்தி, விஸ்கி, ரம், ஜின் போன்ற இந்த அயல்நாட்டு முறை மதுபானங்களை உற்பத்தி செய்கிற இடம். அதற்கு அடுத்து, TASMAC—Tamil Nadu State Marketing Corporation அது இவைகளை எல்லாம் மொத்தத்தில் வாங்கி விநியோகிக்கிற நிறுவனம். (குறுக்கீடு) I. M. F. S. என்று மாற்றப்பட்டு விட்டது. அப்படி நான் சொன்ன இந்தப் படத்தை மனதில் வைத்துக்கொள்வீர்களானால் சரியாக இருக்கும். நான் பேசும் போது சில வார்த்தைகள் தவறி விடக்கூடாது என்பதற்காக எழுதியே படிக்க விரும்புகிறேன்.

நம்முடைய ஆளுநர் உரையில் 15-வது பாரா என்று கருதுகிறேன். படித்திருப்பீர்கள். 15-வது பாராவில், 'கடந்த காலத்தில் மதுவிலக்குச் சட்டத்தின் தொடர்பாக அரசால் பிறப்பிக்கப்பட்ட பல்வேறு விதிமுறைகளில் அடிக்கடி மாற்றங்கள் செய்து மது உற்பத்தியாளர்களுக்குப் பல சலுகைகள் அளிக்கப்பட்ட பட்டுள்ளன. அதனால் மாநில அரசுக்கு நியாயமாகக் கிடைக்க

வேண்டிய பெரும் வருவாய் இழப்பு கோடிக்கணக்கில் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையை மாற்றிடவும் மாநில அரசு தொடர்ந்து இழந்து வரும் நிதியாதாரத்தை மீட்டிடவும், பெருக்கிடவும் உரிய சட்டத் திருத்தமும், விதிகளில் மாற்றமும் உடனடியாக இக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும் என்பதை இந்த அரசு மகிழ்வுடன் அறிவிக்கிறது' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் மது விலக்குச் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட பல்வேறு விதிமுறைகளைக் கூர்ந்து ஆராய்ந்தது. நீண்ட நெடு நாட்களாகவே மது விலக்குச் சட்டத்தின் விதிமுறைகளில் உள்ள குறைபாடுகளையும், ஓட்டை உடைசல்களையும், சலுகைகளையும் சுட்டிக்காட்டி வந்த திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக் கொண்ட பின்பு, அந்த விதிமுறைகளைத் தீவிரமாக ஆராய்ந்தது. அரசுக்கு வரவேண்டிய ஆயத்தீர்வை மற்றும் விற்பனை வரி ஆகியவற்றில் நியாயமற்ற சலுகைகள் வழங்கப்பட்டிருப்பதை இந்த அரசு கண்டுபிடித்தது. ஆயத்தீர்வை அதாவது Excise Duty இந்த Excise Duty ஆயத்தீர்வைக்கு இலக்கணமே உற்பத்தியாளர்கள் செலுத்த வேண்டிய வரி என்பது தான். கவனம் வைத்துக் கொள்ளுங்கள். ஆயத்தீர்வை, Excise Duty என்றால் உற்பத்தியாளர்கள் செலுத்த வேண்டிய வரி அதாவது எரிசாராயத்தை, Rectified Spirit உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளிலிருந்து பல்வேறு தேவைகளுக்காக அவற்றை வெளியே அனுப்பும்போது, அந்தத் தொழிற்சாலைகளின் வாசலை அந்த எரிசாராயம் கடந்து வெளியே வரும்போது அதற்குரிய Excise Duty யை அந்தத் தொழிற்சாலை அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டும். Excise Duty என்றால் தொழிற்சாலைகளிலிருந்து Rectified Spirit வெளியே போகும்போது, அந்தத் தொழிற்சாலை அதை அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டும். எரிசாராயம் இரண்டு உபயோகங்களுக்காக விநியோகம் செய்யப்படுகிறது. ஒன்று, எரிசாராயத்தை மூலப்பொருளாகக் கொண்டு செயல்படும் தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கப்படுகிற எரிசாராயம். அது Bulk Litre ஒன்றுக்கு 35 பைசா வீதம் including Vend Fee ஆயத்தீர்வை விதிக்கப்பட்டு, வழங்கப்படுகிறது. அதாவது தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகிற Rectified Spirit -க்கு 35-பைசா ஆயத்தீர்வை உண்டு இரண்டாவது, மதுவகைகள் தயாரிக்கும் I.M.F.S. Indian Made

1989 பிப்ரவரி 17] [டாக்டர் மு. கருணாநிதி]

Foreign Spirit இருக்கிறதே, இரண்டாவது, மதுவகைகளைத் தயாரிக்க விநியோகிக்கப்படும் எரிசாராயத்திற்கு ஒரு Proof Litre- -க்கு எட்டு ரூபாய் ஆயத்தீர்வை விதிக்கப்பட்டு வழங்கப் பட்டு வந்தது. வந்தது— Past Tense. விதிக்கப்பட்டு வந்தது, இந்தத் தொழிற்சாலைகள் செலுத்த வேண்டிய ஒரு லிட்டருக்கு எட்டு ரூபாய் என்ற ஆயத்தீர்வையையும், (Excise Duty) ஒரு Bulk Litre -க்கு அவர்கள் செலுத்த வேண்டிய Vend Fee -யான ஒரு ரூபாயையும் அப்போதிருந்த அரசு, அப்போதிருந்த அரசு என்றால் கவர்னர் ஆட்சிக்கு முன்பிருந்த அரசு 1983-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2 ஆம் தேதியிட்ட எம். எஸ். 783 எண்ணிட்ட அரசு ஆணை மூலமாக வரிவிலக்கு அளித்தது. எதற்கு? Excise Duty -க்கு, வரிவிலக்கு. வேண்டாம் என்று தள்ளிவிட்டது. அதாவது எரிசாராயத்தி லிருந்து தொழிற் சாலைகள் அயல்நாட்டு முறை மதுவகைகள் தயார் செய்வதற்கு என்று விநியோகிக்கப்படும் எரிசாராயத் திற்கு பூரண வரிவிலக்கு கொடுக்கப்பட்டது. இந்த வரிவிலக்கு, Exemption எந்த காரணத்திற்காக கொடுக்கப்பட்டது என்பதற் கான விளக்கங்கள் இல்லை. காரணங்களை ஆண்டவனே அறிவான். இப்படிப்பட்டதொரு சலுகை இந்தியாவிலேயே தமிழ் நாட்டிலே மட்டும்தான் கொடுக்கப்பட்டுள்ளது இந்த வரி விதிவிலக்கின் காரணமாக அரசுக்கு வரவேண்டிய வரி வருவாயில் முதலில் ஏற்பட்ட இழப்பு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 16 கோடி ரூபாய் (sixteen crores). 83 முதல் 86 அம் ஆண்டு முடிய உள்ள கணக்குகளை ஆய்வு செய்த தணிக்கைத் துறைத் தலைவர், அக்கவுண்டண்ட் ஜெனரல் அவர்கள், தன்னுடைய அறிக்கையில் இதுகுறித்து 2 பெரிய சந்தேகங்களைக் கிளப்பினார். என்ன அது? Mohan Breweries and Distilleries என்ற மதுவகை தயாரிப்பாளர்கள் இந்த வரியை 83 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே கட்டாமல் இருக்கிறார்கள். இப்போது நீங்கள் ரத்து பண்ணுகிறீர்கள். அவர்கள் 83-க்கு முன்பிருந்தே கட்டாமல் இருக்கிறார்கள். அதாவது இந்த வரி விலக்கு அளிக்கப்பட்ட 3—9—1983-க்கு முன்பும், அவர்கள் தங்கள் உற்பத்தியை ஆரம்பித்த, 29—5—1982 முதல் இந்த வரியை அரசுக்குச் செலுத்தவில்லை. இதைப்பற்றி அரசு மௌனமாக இருக்கிறது. ஏன்? அரசு, எரி சாராயத்திற்கு மட்டும் விதி விலக்கு அளித்திருந்த போதிலும் அயல்நாட்டு முறை மது வகைகளைத் தயாரிக்க, மற்ற பல்வேறு வகையான சாராயங்

களும் பயன்படுகின்றன. குறிப்பாக சைலன்ட் ஸ்பிரிட், மால்ட் ஸ்பிரிட்—மொலாசஸ் பிளெயின், ஸ்பிரிட்—பிளெயின், ஸ்பிரிட் பிளென்டெட் மால்ட்ஸ்பிரிட் ஆகியவற்றைப் பற்றியெல்லாம் அரசு ஆணையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஏன் என்ற சந்தேகங்களை அக்கவுண்டன்ட் ஜெனரல் அவர்கள் எழுப்புகிறார். அவருக்கு ஒரே பதிலை, இந்த அரசு கொடுத்தது. என்ன பதில் தெரியுமா? தணிக்கைத்துறைத் தலைவருக்கு ஏற்பட்ட சந்தேகத்தை அப்போது அரசு ஒரு அரசு ஆணையின் மூலமாக நிவர்த்தித்தது. என்ன அரசு ஆணை தெரியுமா? அதாவது 3—9—1983 ஆம் நாளிட்ட அரசு ஆணையில் கொடுக்கப்பட்ட வரிச் சலுகை 29—5—1982 ஆம் தேதியிலிருந்து முன் தேதியிட்டு கொடுக்கப்பட்டதாக ஏற்றுக்கொள்ளவேண்டும். ரெட்ராஸ் பெக்டிவ் எபக்ட், எக்சைஸ் டியூட்டிக்கு வரிவிலக்கு அதற்கு ரெட்ராஸ் பெக்டிவ் எபக்ட் இப்படி ஒரு வரிச் சலுகைக்கு ரெராஸ் பெக்டிவ் எபக்ட் கொடுப்பது எனக்குத் தெரிந்த வரையில் இது தான் முதல் தடவை. (வெட்கம்).

(பிற்பகல் 12-30)

நான் டெல்லியில் கூட இதைப் பற்றிப் பேசிக்கொண்டு இருந்தேன். ஒரு பெரியவர் சொன்னார், திடுக்கிட்டுச் சொன்னார். ரெட்ராஸ் பெக்டிவ் எபக்ட். அதுவும் எக்சைஸ் டியூட்டியை ரத்து செய்வதற்கு ரெட்ராஸ்பெக்டிவ் எபக்டா? வரி போடுவதற்குத்தான் ரெட்ராஸ் பெக்டிவ் போடுவார்கள் வரியை விலக்குவதற்கு ரெட்ராஸ்பெக்டிவ் எபக்டா என்று கூட கேட்டார்கள்.

அடுத்து, அப்படி கொடுக்கப்பட்ட வரிச் சலுகை என்பது ரெக்டிபைட் ஸ்பிரிட்டுக்கு மட்டுமல்லாமல்—ரெக்டிபைட் ஸ்பிரிட்டுக்கு மாத்திரம் அல்ல—மதுவகைகளைத் தயாரிக்கப் பயன்படும் எல்லா வகையான சாராயத்திற்கும் பொருந்தும் என்றும். ரெக்டிபைட் ஸ்பிரிட் என்றால், மால்ட் ஸ்பிரிட்—சைலன்ட் ஸ்பிரிட்—நியூட்ரல் ஸ்பிரிட் போன்ற எல்லா எரி சாராயத்தையும் உள்ளடக்கியதுதான் என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதாவது இந்த வரி விலக்கு இருக்கிறதே, ரத்து. அது ரெக்டிபைட் ஸ்பிரிட்டுக்கு என்று மாத்திரம் அல்ல, ரெக்டிபைட் ஸ்பிரிட் என்றால், உயர்ந்த ரகங்களையும் குறிக்கும், அதாவது பென்சில் என்றால், பேனாவையும் குறிக்கும் என்பதைப் போல, ரெக்டிபைட் ஸ்பிரிட் என்றால், அது உயர்ந்த ஸ்பிரிட்டுக்களையும் குறிக்கும் என்று ஒரு விளக்கம். இதனால், இது

1989 பிப்ரவரி 17] [டாக்டர் மு. கருணாநிதி]

வரையிலே ஆண்டுக்கு 20 கோடி ரூபாய் இந்த அரசுக்கு சராசரி இழப்பு, இதுவரை ஏற்பட்ட இழப்பு இந்த 7 ஆண்டு காலத்தில் 140 கோடி ரூபாய் அளவிற்கு இருக்கும். இந்தத் தொகை அரசுக்கு வராமல் வேறு எங்கேயோ போய்க்கொண்டு இருந்திருக்கிறது. அது எனக்குத் தெரியாது. நான் சொல்ல விரும்பவில்லை. 140 கோடி ரூபாய் இந்த 7 ஆண்டு காலத்தில் இப்படி யாரோ இதை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள், எதையோ கொடுத்துவிட்டு. இப்படி வரி விலக்கு அளித்தது அவசியம் இல்லாதது. அந்த வரிச் சலுகை அளித்ததில் ஒரு பெரிய பின்னணி உள்ளதாக இன்றுள்ள அரசு சந்தேகித்து, முதல் பணியாக அந்த வரிச் சலுகை ஆணையை ரத்து செய்கிறது என்பதை இங்கே மகிழ்ச்சியோடு நான் தெரிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது எரி சாராயத் தொழிற்சாலைகள், மது வகைகள் தயாரிக்க எரி சாராயத்தை விநியோகம் செய்யும்போது, ஒரு பல்க் லிட்டருக்கு 8 ரூபாய் வீதம் ஆயத் தீர்வையும், ஒரு பல்க் லிட்டருக்கு Vend fee ஆக ஒரு ரூபாயும் கட்ட வேண்டாம் என்ற பழைய அரசின் ஆணையை ரத்து செய்து, இந்த அரசு இப்போது ஒரு ஆணையை பிறப்பித்து உள்ளது. அரசு ஆணை எண் எம். எஸ். 218, நாள் 14—2—1989, இதனால் ஆண்டு ஒன்றுக்கு கிடைக்கப் போகும் வருமானம் ரூபாய் 23 கோடியிலிருந்து 25 கோடியாக இருக்கும், அதாவது லஞ்சமாகப் போன பணம் இந்த அரசின் நிதிப் பஞ்சம் போக்க வருகிறது என்று .

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியதற்குப் பின்னர் விளக்கம் கேட்கலாம் என்று தான் நினைந்தேன். குறுக்கிடுவதற்கு வருந்துகிறேன்.

இப்போது தமிழகம் முழுவதும் 'Distilleries' சாராயம் வழங்கப்பட்டது. ஏற்கனவே இருந்த முதலமைச்சர் காலத்திலே நிறுத்தப்பட்டு I.M.F.L. -க்கு மட்டும் இருக்கிறது. அதில் சில சீர்திருத்தங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்து இங்கே நிறைவேற்றும் முகத்தான் படித்துக் கொண்டிருக்கிறார்கள். கூறிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி குறிப்பிடுகிறபோது இதற்கு முன்னாலே இருந்த முதலமைச்சர் அவர்களைப் பற்றி குறிப்பிடுகிற விதத்திலே ஆண்டவன் என்றும், அது லஞ்சமாகப் போனது என்றும்

சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிற தமிழ் ஆற்றல் எல்லோருக்கும் தெரிந்தது தான். என்றாலும் பத்திரிகைகளில் செய்திகள் வருகிறபோது ஆண்டவன் என்றும், அது லஞ்சமாகப் போனது என்றும் இப்படியெல்லாம் மறைந்த ஒரு தலைவரைப் பற்றிப் பேசுவது மரபல்ல என்பதைக் கூட மீறி, இங்கே முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு மக்களுடைய தலைவராக இருந்த புரட்சித் தலைவர், எம்.ஜி.ஆர். அவர்களைக் கடுமையாக, அவர் உயிரோடு இருந்தபோது அவருடைய புகழைக் குறைக்க முயற்சித்தவர்கள், முடியாமல் தோற்றுப் போனவர்கள், மறைந்ததற்குப் பின்னால், அந்த முயற்சியிலே ஈடுபடுகிற விதத்திலே அவரைப்பற்றி தரக் குறைவாகப் பேசுவது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் அனுமதிக்கப்படக் கூடாது. அதில் இருக்கிற தவறுகளை, சட்டத்திலே இருக்கிற தவறுகளைச் சொல்லட்டும், அந்தத் தவறுகள் திருத்தப்படப் போகிறதா என்பதைச் சொல்லட்டும் வரி விதிப்பைப் பற்றிச் சொல்லட்டும். அது லஞ்சமாகப் போனது, ஆண்டவனுக்குப் போனது என்றெல்லாம் முன்னாள் முதலமைச்சர், மக்களின் இதயத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. இப்படியே இந்த நிலை தொடருமேயானால் நாங்கள் இங்கே உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருக்கிற சூழ்நிலை ஏற்படாது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இது யாராலும் கேட்க முடியாதது தான் ஏனென்றால் கேட்க சகிக்காத விஷயங்கள் இவை. ஏர்சு அளவில் நடந்திருப்பதால்தான் சொல்கிறேன். நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. நான் ஆண்டவனுக்குத்தான் தெரியும் என்று சொன்னேனே தவிர, வேறு ஒன்றும் சொல்லவில்லை. அதை நம்முடைய தீட்சிதர் ரொம்ப ரசித்தார். கருணாநிதியே ஆண்டவனைப் பற்றிச் சொல்கிறாரே என்று அவரே ரசித்தார். (சிரிப்பு).

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் முதலமைச்சராக இருக்கிறார்கள். செத்துப் போனவர் வந்து திரும்ப பதில் சொல்லப் போவது இல்லை. அவர் இறந்த புரட்சித் தலைவரைப் பற்றி என்ன வேண்டுமானாலும் பேசிக் கொள்ளட்டும், எனக்கு

ஆட்சேபணை இல்லை. என்ன குற்றச்சாட்டுகள் வேண்டுமானாலும் சொல்லிக் கொண்டிருங்கள். நீங்கள் சொன்னீர்கள், லஞ்சம் கூட பெற்றார்கள் என்று. அதையும் அனுமதிக்கின்றீர்கள். எனவே இதற்குக் கண்டனம் தெரிவித்து நாங்கள் வெளி நடப்பு செய்வோம். நீங்கள் என்னவேண்டுமானாலும் புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆரைத் திட்டுங்கள். அவர் இருந்தபோது சீனிவாசன் சொன்னார் சமாதி கட்டவேண்டுமென்று. இப்போது அவருடைய புகழுக்கு சமாதி கட்ட வேண்டுமென்று பார்க்கிறார்கள். முன்னால் முயன்று தோற்றவர்கள் இப்போது முயற்சிக்கிறார்கள். என்னவேண்டுமானாலும் செய்யுங்கள்.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் இது போன்று விவகாரங்களை சொல்லிவிடுவார்கள் என்று தான் நேற்றைய தினம் நான் அவரிடம் ஒரு விவகாரத்தையும் கொடுக்கவில்லை. இனி சொல்லக் கூடாது. கண்டுபிடித்தது, என்னென்ன என்று எடுத்துச் சொல்லியிருப்பீர்களானால் அல்லது நான் சொன்னேனே பாராட்டுப் பத்திரம் அதை வாசிப்பேன். (குறுக்கீடு) நீங்கள் குற்றவாளிகள் என்று சொல்லிவிட்டீர்கள். அதைச் சொல்லக் கூடாது. அதனால் தான் நான் உங்களிடம் ஒன்றும் கொடுக்கவில்லை.

மறைந்த முதலமைச்சர் மீது சொல்வது, தொனிபடச் சொல்வது மரபு இல்லையாது. அவர் எப்படி வாழ்ந்தார் என்பதை நேரடியாகப் பார்த்தவன் நான். (குறுக்கீடு) அமைதியாகச் சொல்கிறேன். பேச அனுமதியுங்கள் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைவரும் அமைதியாக இருக்க வேண்டும்.

திரு. பி. எச். பாண்டியன்: அவர் மறைந்த நேரத்தில்கூட அவருடைய அறைக்குச் சென்றவர்களுக்குத் தெரியும். பழைய நாற்காலிகள் இரண்டு. (குறுக்கீடு) இதுதான் தவறு. அவரைப் பற்றிச் சொல்லாதீர்கள். நீங்கள் விசாரித்தீர்கள் என்றால் தெரியும். அதனால்தான் நான் சொன்னேன். நீங்கள் சொன்னது தவறு. நீங்கள் அரசியல் ஆக்கி விட்டீர்கள். நீங்கள் இதை விசாரித்துக் கண்டுபிடித்திருப்பீர்களேயானால் நல்லது. (குறுக்கீடு) உங்களுக்குத் தமிழ் அறிவு அதிகம். (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கண்டுபிடித்துத்தான் நிவாரணம் தேடிக் கொண்டிருக்கிறோம். ரூ. 140 கோடி. இது வரையில் வந்திருக்கிறது. இதைவிட என்ன இருக்கிறது ?

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக (ஜெ) உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். இல்லையென்றால் நான் வெளிநடப்புச் செய்வேன்.

(பிற்பகல் 12-40)

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இந்த விவகாரம் குறித்து இவ்வளவு விரிவாக இங்கே பேசுவதனால் என்ன பலன் வரப்போகிறது? நடவடிக்கை எடுத்துவிட்டுச் சொல்ல வேண்டும். இப்போது நீங்கள் குற்றவாளிகளை உஷார் படுத்தி விட்டுவிட்டீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தொடர்ந்து, நான் டாஸ்மாக் பற்றி குறிப்பிட்டேன் அல்லவா? தமிழ்நாடு ஸ்டேட் மார்க்கெட்டிங் கார்ப்பொரேஷன் தமிழ்நாட்டிலே ஐந்து தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படுகிற இந்த அயல் நாட்டு மது வகைகளை மொத்தமாக வாங்கி சில்லறை வியாபாரிகளுக்கு விற்பனைக்குத் தருகிற உரிமையை தமிழ்நாடு அரசு நிறுவியுள்ள டாஸ்மாக் நிறுவனம் பெற்றிருக்கிறது. அதுதான் தமிழ்நாடு ஸ்டேட் மார்க்கெட்டிங் கார்ப்பொரேஷன் நான் முதலிலே சொன்னேனே, படம் போட்டு வைத்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். அங்கேயிருந்து டாஸ்மாக் நிறுவனம் அதை வாங்கி வருகிறது. அந்த நிறுவனம் முதலில் கூறிய 5 தொழிற்சாலைகளிலிருந்தும் மற்ற வெளி மாநிலங்களிலிருந்தும் மொத்தமாக மது வகைகளைத் தருவித்து சில்லறை வியாபாரிகளுக்கு விநியோகம் செய்து வந்தது.

மேற்கூறிய 5 தொழிற்சாலைகளிலேயும் உற்பத்தியாகிற மது வகைகளை மொத்தமாக டாஸ்மாக் நிறுவனத்திற்கு விற்று விடுகிறார்கள். அந்த மொத்த விற்பனை விலையை அந்த தொழிற்சாலையின் உற்பத்தியாளர்களே நிர்ணயிக்கிறார்கள். அரசு நிர்ணயிக்கவில்லை, கமிஷனர் நிர்ணயிக்கவில்லை. இங்கேதான் கவர்னர் கூட இடையிலே புகுந்தார், விசாரிக்க. அந்த மொத்த

1989 பிப்ரவரி 17] [டாக்டர் மு. கருணாநிதி]

விற்பனை விலையை அந்தத் தொழிற்சாலைகளின் உற்பத்தியாளர்களே நிர்ணயிக்கிறார்கள். அந்த மொத்த விலையை நிர்ணயிக்கிற உரிமையை, அதாவது உற்பத்தியாகிற செலவை அடிப்படையாகக் கொண்டு, அதற்கு மேல் உரிய லாபத்தைக் கூட்டி நிர்ணயிக்கிற உரிமை இந்த அரசுக்கோ அல்லது அரசு அதிகாரம் பெற்ற மதுவிலக்கு கமிஷனருக்கோ இதுவரை கிடையாது. அந்தத் தொழிற்சாலைகளில் தயாரிக்கிற மது வகைகள் பல வகை உள்ளன. எல்லா மது வகைகளுக்கும் எரி சாராயமே—ரெக்டிபைடு ஸ்பிரிட்—மூலப் பொருளாக இருப்பினும், வெவ்வேறு வகையான மது வகைகளுக்கு வெவ்வேறு வகையான விலை நிர்ணயிக்கப்படுகிறது.

டாஸ்மாக் நிறுவனம் இவற்றை வாங்கும்போது ஒரு கேஸுக்கு இன்ன விலை என்ற அடிப்படையில்தான் வாங்குகிறது. ஒரு கேஸ் என்பது 750 மில்லி அளவு கொண்ட 12 பாட்டில்களைக் கொண்டது. ஒரு கேஸின் விலை—இங்கேதான் வேடிக்கை—மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஒரு கேஸின் விலை தமிழ்நாட்டில்தான் அதிகமாக இருந்து வருகிறது. உதாரணமாக ஓல்ட்மாங்க் ரம் என்ற மது வகையின் ஒரு கேஸ் விலை, ஹோல்சேலில் டெல்லியில் 187.68 ரூ. மகாராஷ்டிராவில் 240 ரூபாய், கேரளத்தில் 220 ரூபாய், ஆந்திராவில் 243 ரூபாய், கர்நாடகத்தில் 214 ரூபாய், நம்முடைய தமிழ்நாட்டில் ரூபாய் 323.31 காசு. இப்படி ஒவ்வொரு வகையான மது வகைகளுக்கும் மொத்த விலைக்கு டாஸ்மாக் நிறுவனத்திற்கு விற்கப்படுகிற போது, எல்லா விலைகளும் மற்ற மாநிலங்களைவிட அதிகமாகவே இருப்பது இப்போது கண்டு பிடிக்கப்பட்டது. ஆகவே இந்த விலையை நிர்ணயம் செய்கிற அதிகாரம் இந்த அரசுக்கோ அல்லது அரசு அதிகாரம் பெற்ற ஆயத் தீர்வை கமிஷனருக்கோ இல்லாது இருப்பதைக் கண்டு, அந்த நிலையை மாற்றும்பொருட்டு இனிமேல் மொத்த விலையையும் சில்லறை விலையையும் நிர்ணயிக்கிற உரிமை இந்த அரசுக்கே இருக்க வேண்டும் என்று கருதி, முடிவெடுத்து, அரசு ஆணை மூலம் இந்த விதிமுறைகளைத் திருத்தி, இனிமேல் உற்பத்தியாகிற மது வகைகளை மொத்த வியாபாரமாக டாஸ்மாக் நிறுவனத்திற்கு கொடுக்கும்போதும் டாஸ்மாக் நிறுவனம் அவற்றை சில்லறை வியாபாரிகளுக்குக் கொடுக்கும்போதும் உள்ள விலையை நம்முடைய மதுவிலக்கு கமிஷனர்தான் நிர்ணயிப்பார் என்று அரசு இப்போது ஆணை

யிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). இப்போதுதான் நாம் நிர்ணயிக்கிறோம். இதுவரையில் நிர்ணயிக்கப்படவில்லை. அந்தப் பணத்தினுடைய கதி எல்லாம் என்ன ஆயிற்று என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அதாவது என்ன மாறுகிறது தெரியுமா? அப்போது சாராய சாம்ராஜ்யம் பெற்றிருந்த அதிகாரத்தை இப்போது மக்கள் சாம்ராஜ்யம் பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் மாற்றம் இப்போது. அயல்நாட்டு முறை

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சாராய சாம்ராஜ்யம் பெற்ற அதிகாரம் என்றார்கள். அந்த சாராய சாம்ராஜ்யத்தில் இருந்தவர்களை கைது செய்து உள்ளே அடையுங்கள். நீங்கள் அதை செய்தால்தான் நீங்கள் சொன்னதை நான் கேட்பேன். நீங்கள் செய்யவில்லையென்றால் நீங்கள் சொன்னது அரசியல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே. கைது செய்வது, தூக்கிலே போடுவது என்பது நம்முடைய பாண்டியன் அவர்களால் (சிரிப்பு) அவசரமாகப் போடப்படும் உத்தரவுகள்.

திரு. பி. எச். பாண்டியன்: தலைவர் அவர்களே, தவறாகச் சொல்லிவிடாதீர்கள் என்று அவரைக் கேட்டுக்கொள்கிறேன். தூக்கிலே போடுவது என்று சொல்லப்பட்டது அவைக் குறிப்பிலே இருக்க வேண்டாம். முதலமைச்சருக்கு இருக்கக்கூடிய அதிகாரம்—உங்கள் கையிலே போலீஸ் இலாக்கா இருக்கிறது. (குறுக்கீடு) இல்லை. இப்பொழுது நீங்கள் எல்லாம் சொல்லிவிட்டீர்களே. ஒரு போலீஸ் ஆபீசர் வந்து இன்வெஸ்டிகேஷன் எடுக்கும்போது, இப்படியிப்படியெல்லாம் பண்ணப் போகிறேன் என்று சொன்னால் எந்தக் கேஸாவது நிற்குமா? நான் என்ன சொல்கிறேன் என்றால் நீங்கள் நடவடிக்கை எப்படி எடுக்க முடியும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இதற்கு மாத்திரம் அல்ல. இன்னும் பல கோப்புகள் இருக்கின்றன. நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும். அயல்நாட்டு முறை மது வகைகளின் மீதான வரி IMFS அயல்நாட்டு முறை மது வகைகளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஒரு குறிப்பிட்ட விலைக்கு TASMAC நிறுவனத்திற்கு மொத்த வியாபாரம்

செய்கிறபோது இரண்டுவிதமான வரிகளைச் செலுத்த வேண்டும். Excise Duty ஆயத்தீர்வை. (2) மொத்த விலையில் ஆயத் தீர்வையைச் சேர்த்து என்ன விலை வருகிறதோ, அந்த விலைக்கு 20 சதவிகிதம் விற்பனை வரியும் 2 சதவிகிதம் Surcharge -ம் கட்ட வேண்டும். ஆயத் தீர்வையைக் கட்டவேண்டியது தயாரிப்பாளர்கள்தான் என்று சட்ட விதிகளில் முன்பு இருந்தது —முன்னே இருந்தது, சட்ட விதியிலே. தயாரிப்பாளர்கள்தான், உற்பத்தியாளர்கள்தான் இந்த ஆயத் தீர்வையைக் கட்ட வேண்டும் என்று. ஆனால் உற்பத்தியாளர்கள் அல்லது தயாரிப்பாளர்கள் கட்ட வேண்டிய அந்த ஆயத்தீர்வையை வாங்குபவர்கள்தான் கட்ட வேண்டும் என்று முந்தைய அரசு சட்ட விதிகளைத் திருத்தியது. யார் தெரியுமா வாங்குகிறவன்? டாஸ்மாக் அரசாங்க நிறுவனம். அவனே கட்டவேண்டும் என்று திருத்திவிட்டார்கள். அதாவது மது வகைகளைத் தயாரிக்கின்ற தயாரிப்பாளர்கள் கட்ட வேண்டிய ஆயத் தீர்வையை அந்த மது வகைகளை மொத்த விலைக்கு வாங்குகின்ற டாஸ்மாக் நிறுவனமே கட்டவேண்டுமென்று சட்டவிதிகள் முந்தைய அரசால் திருத்தப்பட்டன. இந்த அரசாங்கத்திற்கு தயாரிப்பாளர்கள் செலுத்த வேண்டிய ஆயத்தீர்வையை இந்த அரசாங்க நிறுவனமே கட்ட வேண்டும் என்ற நிலைக்கு சட்டத்தையும் திருத்தினார்கள். இதன் விளைவாக அரசாங்கத்திற்கு வரவேண்டிய நியாயமான விற்பனை வரியும் வராமல் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

உதாரணமாக, ஒரு மதுவகையின் விலை, ஒரு கேஸ் 336 ரூபாய். அதை விற்கின்றபோது தயாரிப்பாளர் 20 சதவிகிதம் விற்பனை வரியும் 2 சதவிகிதம் சர்சார்ஜும் கட்ட வேண்டும். அதாவது 336 ரூபாய்க்கு விற்கின்றபோது அதற்கு ரூ. 80 வரி கட்ட வேண்டும். அதே நேரத்தில் அதே 336 ரூபாய் விலை உள்ள மது வகைக்கு கட்டவேண்டிய Excise Duty ரூபாய் 168-ஐ உற்பத்தியாளர்கள் கட்டாமல் அரசு நிறுவனமான டாஸ்மாக் நிறுவனமே கட்டியிருக்கிறது. இந்த 168 ரூபாயும் கட்டினால் வரும் 504 ரூபாய்க்கு 20 சதவிகிதம் விற்பனை வரியும் 2 சதவிகிதம் சர்சார்ஜும் போட்டுப் பார்த்தால் 110 ரூபாய் வரியாகிறது. ஆனால் உற்பத்தியாளர் ஏற்கனவே கட்டியிருப்பது 80 ரூபாய் தான். இதனால் ஒரு மது வகையிலே மாத்திரம், ஒரு கேஸுக்கு 30 ரூபாய் நஷ்டம் அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்தக் குறைபாட்டை 1983 ஆம் ஆண்டிலேயிருந்து வணிக வரித்துறை திரும்பந்

திரும்ப எடுத்துச் சொன்னபோதிலும் அப்போதைய அரசு அதை காதிலே போட்டுக்கொள்ளவே இல்லை. ஒரு அதிகாரி சொல்லி யிருக்கிறார். அதை காதிலே போட்டுக்கொள்ளவில்லை. இங்கே தான் கவர்னர் வருகிறார். இந்த விதத்தில் மட்டும் அரசுக்கு வரவேண்டிய வருவாயில் ஏற்பட்ட விற்பனை வரி இழப்பு 1987-ம் ஆண்டுவரை மொத்தம் 24 கோடி ரூபாய் என்றும், இந்த 24 கோடி ரூபாய்க்கு, வட்டி நிகர வட்டி, அபராதம் ஆகியவைகளைச் சேர்த்து மொத்தம் 33 கோடி ரூபாய் என்றும் ஆக மொத்தம் தரவேண்டிய பாக்கி 57 கோடி ரூபாய் என்றும் கணக்கிட்டு அவற்றை வசூலிக்க கவர்னர் ஆட்சியில் முயற்சி செய்தபோது அதை வழக்கு மன்றத்திற்கு எடுத்துச் சென்று தற்போது வழக்கு நீதிமன்றத்தில் நடந்துகொண்டிருக்கிறது.

இந்த மோசடியில் பெரிய மோசடு ஒன்றை ஒன்றைக் கண்டு பிடித்தார் அவர். கண்டுபிடித்து 57 கோடி ரூபாயை வசூலிக்க ஆளுநர் ஆட்சியிலே முயற்சி எடுக்கப்பட்டபோது அவர்கள் நீதி மன்றத்திற்குச் சென்று, அங்கு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக் கிறது. எனவேதான் இனிமேலாவது இந்த அக்கிரமம் தொடராமல் இருக்க சட்ட விதிகளை இப்போது மறுபடியும் திருத்தி இந்த வரியை உற்பத்தியாளர்களே கட்ட வேண்டும் என்று இந்த அரசு ஆணையிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இதனால் டாஸ்மாக் என்ற அரசு நிறுவனம் முதலில் உற்பத்தியாளர்களுக்கு இந்த வரியைக் கட்டி விட்டு பின்பு சில்லறை வியாபாரிகளிடமிருந்து அவற்றை வசூலிக்க வேண்டிய நிலை இல்லை. அரசுக்கு விற்பனை வரியில் இழப்பு ஏற்பட வழியில்லை. விற்பனை வரியிலே ஒரு கணிசமான வருமானம் அரசுக்கு அதிகமாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

இன்னொன்று முக்கியமானது. மது வகைகள் மீது விதிக்கப் படும் எக்சைஸ் டியூட்டி இருக்கிறதே, இந்தத் தீர்வை, இது இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான் ரொம்பக் குறைவு. இந்த எக்சைஸ் டியூட்டி—ஆயத் தீர்வை ஆந்திராவிலே ஒரு புரூஃப் லிட்டருக்கு 60 ரூபாய். பீகாரிலே 45 ரூபாய். கர்நாடகாவிலே 40 ரூபாய். மாராட்டியத்திலே 52 ரூபாய். உத்திரப்பிரதேசத்திலே 40 ரூபாய். ஒரிஸ்ஸாவிலே 70 ரூபாய். ராஜஸ்தானத்திலே 75 ரூபாய். மேற்கு வங்கத்திலே 82 ரூபாய். தமிழ்நாட்டிலே

1989 பிப்ரவரி 17] [டாக்டர் மு. கருணாநிதி]

வெறும் 25 ரூபாய். இதில் வேடிக்கை என்னவென்றால், அதிக மான விகிதத்திலே ஆயத்தீர்வை செலுத்தக்கூடிய மாநிலங்களில் மது வகைகளின் மொத்த வியாபார விலை குறைவாக இருக் கிறது.

அதிக ஆயத் தீர்வை செலுத்துகிறான் அல்லவா, அங்கே மொத்த வியாபார விலை குறைவாக இருக்கிறது. குறைவான ஆயத் தீர்வை செலுத்தக்கூடிய தமிழ்நாட்டிலே மொத்த வியாபார விலை அதிகமாக இருக்கிறது. ஏனென்றால், சாராய சாம்ராஜ் யத்திற்குப் போகவேண்டுமே பணம், அதற்காக மொத்த விலை அதிகமாக இருக்கிறது. அரசிற்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய வருமானம் ஏதோ ஒரு காரணமாகக் கிடைக்காத அளவிற்குத் தடைப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைக் கண்ட றிந்து இந்த அரசு இவற்றைச் சீர்திருத்தி, சட்டத் திருத்தத்தின் மூலமாக ஒரு புருஃப் லிட்டருக்கு 25 ரூபாயாக இருந்த ஆயத் தீர்வை 55 ரூபாயாக உயர்த்தப்படும். இதன்மூலம் ஆண்டொன் றிற்கு ஆயத்தீர்வையாக 56 கோடி ரூபாயும், விற்பனை வரியாக 14 கோடி ரூபாயும், மொத்தம் சுமார் 70 கோடி ரூபாய் அதிக வருமானம் கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்மூலம் ஒரு பெரிய ஊழலின் ஊற்றுக்கண் அடைக்கப்பட்டு விட்டது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொன்று, சில்லறை வியாபாரத்திலே 1985 ஆம் ஆண்டிலே சில்லறை வியாபாரக் கடைகளுக்கு உரிமம் வழங்குவதற்கான விண்ணப்பங் களை முன்பிருந்த அரசு பெற்றது. அப்படி வந்த பல்லாயிரக் கணக்கான விண்ணப்பங்களைப் பரிசீலித்துத் தகுதியுள்ளவர் களைத் தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக விண்ணப்பித்தவர்களில் சிலரையும், குறிப்பிட்ட தேதிக்குப் பின்பு விண்ணப்பித்தவர் களில் சிலரையும், விருப்பு, வெறுப்பு அடிப்படையில் தேர்ந் தெடுத்து அவர்களையும் சேர்த்து பலருக்கு உரிமம் வழங்கப் பட்டது.

அப்படி வழங்கப்பட்ட கடைகளுடைய எண்ணிக்கை 2035 தான். 2035. உரிமம் கிடைக்காத சில பேர் நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். சில்லறை வியாபாரம் செய்வதற்கான உரிமம் பெற அவர்கள் இந்த அரசிற்கு ஆண்டொன்றிற்கு ரூபாய் 20,000 கட்டவேண்டும். இதனால் ஆண்டொன்றிற்கு அரசிற்குக்

கிடைக்கும் வருமானம் சுமார் நாலு கோடி ரூபாய்தான். இந்த 2,035 கடைகளில் சுமார் ஆயிரம் கடைகள் மது வகை தயாரிப்பாளர்களுடைய பினாமிக் கடைகள். மொத்தத்திலேயும் அவர்கள் வாங்குகிறார்கள். அவர்களேதான் சீட்டெயில் கடையும் வைத்திருக்கிறார்கள்—சில்லறைக் கடையும் வைத்திருக்கிறார்கள்.

அந்த 2,000 கடையிலே 1,000 கடை பினாமிக் கடை. தயாரிப்பாளர்களுடைய பினாமிகள் கடை உரிமம் பெற்றிருப்பதால் சில்லறை விற்பனையிலே ஆயத்தீர்வைத் துறையை ஏமாற்றி கணக்குக்கு வாராமல் விற்பனை செய்வதற்கு ஏதுவாகவும் இருக்கிறது. இத்தகைய குறைகள் இருப்பதற்குக் காரணம், தற்போதுள்ள அனுமதிமுறை, விருப்பு, வெறுப்புக்களுக்கு அப்பாற்பட்டு நடக்கவேண்டிய விற்பனை இப்படிப் பல்வேறு குறைபாடுகளுக்கு ஆளாகியிருப்பதால் அரசிற்குக் கிடைக்கவேண்டிய வருமானத்தில் பெரும் இழப்பு ஏற்பட்டு அந்தப் பணம் எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது. அந்த முறையை இந்த அரசு ஆய்ந்ததில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதை உணர்ந்து, இந்தச் சில்லறை வியாபாரக் கடைகளின் உரிமம் 1989 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதியன்று முடிவடைகிறது; அதற்குப் பின்பு இந்தச் சில்லறை வியாபாரத்தை நடத்த ஏல முறையை (auction) அமல்படுத்தவேண்டும் என்று அரசு முடிவெடுத்துள்ளது. இந்த ஏல முறை ஜூன் முதல் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

மக்கள் தொகையின் அடிப்படையில் எத்தனை கடைகள் தேவை என்பதைக் கணக்கிட்டு ஏல முறைகளுக்கு வேண்டிய முன்னேற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறும், அந்த ஏலக் கடைகள் கோயில்கள், ஆலயங்கள், மசூதிகள், பள்ளிகள், தொழிற்சாலைகள் மற்றும் பொது இடங்களைத் தவிர்த்து அமையவேண்டுமெனவும் மது விலக்கு கமிஷனருக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

இங்கே ஒரு நகைச்சுவையைச் சொல்லவேண்டும். முன்பு கோயிலுக்குப் பக்கத்திலே கடைகள் இருக்கக்கூடாது என்கிற போது, முன்பு இருந்த அரசு டெபனிஷன் கொடுத்தது, கோயில் என்றால் என்ன, பள்ளிக்கூடம் என்றால் என்ன என்று.

கோயில் என்றால், ஹிந்து ரிலிஜியஸ் போர்டுக்குக் கீழே வருவதுதான் கோயில். பள்ளிக்கூடம் என்றால் சர்க்கார் நடத்துகிற பள்ளிக்கூடம் தான் பள்ளிக்கூடம். அதற்குப் பக்கத்திலேதான்

1989 பிப்ரவரி 17] [டாக்டர் மு. கருணாநிதி]

கடை இருக்கக்கூடாதே தவிர, ஹிண்டு ரிலிஜியஸ் போர்டுக்குக் கீழே வராத கோயிலுக்குப் பக்கத்திலே கடை இருக்கலாம். சர்க்கார் பள்ளிக்கூடம் அல்லாத பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்திலே கடை இருக்கலாம் என்று டெபனிஷன் இருக்கிறது. அதெல்லாம் இப்போது இருக்காது.

தற்போதுள்ள முறை மாற்றப்பட்டு, ஏல முறை அமலுக்கு வரும் போது, அதனால் அரசிற்கு தற்போதுள்ள நாலு கோடி ரூபாய் என்பது இருபது கோடி ரூபாய் அளவிற்கு உயரும். மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பல்வேறு விதிமுறைகளைத் திருத்தி, பல்வேறு சலுகைகளை உற்பத்தியாளர்களுக்கு வழங்கியதால் அரசிற்குக் கிடைக்கவேண்டிய நியாயமான வருமானம் வராமல் வீழ்ச்சி அடைந்தது. அந்தக் குறைகளை மாற்றி, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டு இந்த ஆயத் தீர்வை முறையை சீர்படுத்தியதன் மூலமாக இந்த இருபது நாட்களில் இந்த அரசு, இப்பிரச்சினையைத் தீவிரமாக ஆராய்ந்து, விதிமுறைகளுக்குப் பல்வேறு திருத்தங்களை வெளியிட்டு, இந்தச் சட்டத் திருத்தங்களை இந்த அவைக்கு முன் வைப்பதால் ஆண்டு ஒன்றிற்கு ஏறத்தாழ நூறு கோடி ரூபாய்க்கு மேலாக அரசிற்கு வருமானம் கிடைக்க வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதைத்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்னார்கள், வரி அதிகம் போடாமலேயே சமாளிக்க வேண்டும் என்று. இருந்தாலும் கூட 100 கோடி ரூபாய் தான் அதிலே கூட வருகிறது. இன்னும் கூட கொஞ்சம் அவர்களைக் கசக்கிப் பிழிந்தால் இன்னும் கொஞ்சம் அதிகமாக வரக்கூடும். இருந்தாலும் கூட நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்குப் போதுமான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே ஒரு கொள்கை அறிவிப்பாக அறிவிக்கிறேன்.

ஐ. எம். எப். எஸ். என்னும் மது பானம் தயாரிக்கும் தொழிற்சாலைகளின் அனுமதியை இனிமேல் இந்த அரசு, தனிப்பட்டவர்கள் யாருக்கும் அளிக்காது. இப்போது இருக்கும் 5 மது பான தொழிற்சாலைகள் இனிமேல் இப்போதுள்ள உற்பத்தி அளவை விரிவுபடுத்துவதற்கும் இந்த அரசு அனுமதியை அளிக்காது. ஐ. எம். எப். எஸ். உற்பத்தியை அரசு நிறுவனமான டாஸ்மாக் படிப்படியாக ஏற்கும் என்றும் நான் அறிவிக்கிறேன்.

எனவே முன்பு இங்கே 100 கோடி ரூபாய்க்கு நடைபெற்று இருக்கிற இந்த இழப்பு, ஊழல், முறைகேடு 100 கோடி ரூபாய்க்கு மேல் அதுவும் ஆண்டுதோறும், ஒரு வரலாறு காணாத இமாலயன் கரப்ஷன், ரெக்கரிங் கரப்ஷன், பல ஆண்டுகளாக நடைபெற்று வந்த சாராய சாம்ராஜ்யத்தினை பதவி ஏற்ற 20 நாட்களிலே தரை மட்டம் ஆக்கியிருக்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி) We have liquidated the liquor empire in Tamil Nadu. இன்னும் ஏதாவது விட்டுப் போயிருந்தால் தகவல் தருமாறு மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களை, பொது மக்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் இது குறித்து மேலும் ஆராய்ந்து தொடர்ந்து நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்த அளவில் எல்லா உறுப்பினர்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல நிர்வாகச் சீர்திருத்தங்களை மாண்புமிகு முதல மைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதிலே உற்பத்தி விலையை நிர்ணயிப்பது 'டாஸ்மாக்குக்கே' கொடுக்கப்பட்டு இருந்த அந்த அதிகாரம் இப்போது எக்சைஸ் கமிஷனருக்கு கொடுக்கப்படு கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. டாஸ்மாக்கும் அரசு நிறுவனம்தான், அதிலும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்தான் இருக்கி றார்கள். இதிலே இப்போது கொடுக்கப்பட்டிருக்கிற எக்சைஸ் கமிஷனரும் ஐ.ஏ.எஸ். ஆபீசர்தான். அது ஒருபுறம் இருக்கட்டும்.

இன்னும் ஒன்று, அந்த டாஸ்மாக்கில் இருந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அரசு சொன்னதைக் கேட்டு சலுகைகளைச் செய் தார்கள் என்று சொன்னார். இந்த எக்சைஸ் கமிஷனராக தனக்கு வேண்டியவர்களைப் போட்டுக்கொண்டு அரசு நினைப்பதை, உற்பத்தியாளர்களுக்கான விலையை நினைத்த அளவிலே செய்து கொள்ள வழி வகை இருக்கிறது. எனவே இந்த சந்தேகம் எல்லாம் எதுவும் இல்லாமல் நீங்கள் உடனடியாக இந்த மாதத்தி லேயே இந்த ஐ.எம்.எப்.எஸ். உற்பத்தியை அரசே ஏற்று தனியா ருக்குக் கொடுக்கப்படுவதை நிறுத்திவிட்டு அரசாங்கமே ஏற்று நடத்துங்கள்; இல்லை என்றால் இன்னும் ஒன்று செய்யுங்கள். இதை முழுவதுமாக எடுத்து விடுங்கள். ஏனென்றால், மக்கள் குடிப் பழக்கத்திலிருந்து மீளட்டும். (கூச்சல்-குறுக்கீடு) என் இருக்க வேண்டுமா? (குறுக்கீடு) நான் குடிக்க மாட்டேன்.

1989 பிப்ரவரி 17] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

எனவே நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன், ஒட்டு மொத்தமாக அது எந்தவகையாக இருந்தாலும் சரி, ரம்மாக இருந்தாலும் சரி; பீராக இருந்தாலும் சரி; விஸ்கியாக இருந் தாலும் சரி; எத்தனை வகை இருக்கிறதோ எல்லாவற்றையும் எடுத்து விடுங்கள். எடுத்துவிட்டு வேறு வகையில் நிதி ஆதாரங் களை திரட்டுங்கள். இல்லை இது முடியாது சட்டத் திருத்தங் களைச் செய்து இனிமேல் புதிதாக லைசன்ஸ் தர மாட்டோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இனிமேல் புதிதாக கொடுக்கவேண்டியது இல்லை. இருக்கிற லைசன்சே போதும். ஐந்தாக இருக்கிறது. எனவே ஏற்கனவே ஐந்து உற்பத்தியாளர்கள் இருக்கிறார்கள். ஒன்று அரசுடைமை ஆக்குங்கள். அல்லது எடுத்து விடுங்கள்; இல்லையென்றால் பின் னாலே நீங்கள் செய்திருக்கும் சட்டத் திருத்தத்திலே பலவற்றை நாங்கள் சுட்டிக்காட்ட முடியும். இதிலே உங்கள் இஷ்டம் போல, இந்த ஆட்சியின் இஷ்டம்போல, இருக்கிற உற்பத்தியாளர் களை வைத்துக்கொண்டு இன்னும் இந்த அரசு நன்மை அடைய முயற்சிக்கிறது என்ற குற்றச்சாட்டை எடுத்துச் சொல்லு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னைப்போல் பிறரை நினைக்கக்கூடாது.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னைப்போல் பிறரை நினைத்துத்தான் முன்னால் இருந்த ஆண்டவனையெல்லாம் பல பேர் திட்டிக்கொண்டிருக்கி றார்கள்.

(பிற்பகல் 1-00)

திரு. என். கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசிய நேரத்திலே மிக பயங்கரமான உண்மைகளை இங்கே தெரிவித்து இருக்கி றார்கள் ஆண்டொன்றுக்கு ரூ. 100 கோடி அளவில் ஏறத்தாழ 10 ஆண்டு காலத்திற்கு ரூ. 1,000 கோடி அளவில் சாராய சாம்ராஜ்யம் இங்கே நடந்திருக்கிறது. ஒரு parallel government இங்கே நடந் திருக்கிறது. இதற்குப் பொறுப்பானவர்களைக் கண்டு பிடித்து, யார் என்பதையும் அடையாளம் காட்டி, அவர்களுக்கு என்ன தண்டனை வழங்கப் போகிறீர்கள் என்பதையும் இந்த மன்றத்

திற்குத் தெரிவித்தால், நீங்கள் இந்த நாட்டு மக்களுக்கு நன்மை செய்தவர்கள் ஆவீர்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நல்ல ஆலோசனையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். இதற்கு ஒரு கூறியீடு, 2 மாதம், 3 மாதம் வைத்து, இது யாருக்கெல்லாம் போய் இருக்கிறது, எந்த உற்பத்தியாளர்களுக்குப் போயிருக்கிறது, என்ன தண்டனை அளிப்பீர்கள் என்பதைச் சொன்னால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பொறுத்திருந்து பாருங்கள், இன்னும் பல கோப்புகள் வரிசையாக அணிவகுத்துக் கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களே, பேரவையின் அனுமதியோடு பேரவையின் நடவடிக்கைகள் சில மணித் துளிகள் நீட்டிக்கப்படும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோப்புகள் தொடரும், தொடரும் என்று பயமுறுத்தி எங்களுடைய வாயை அடைத்துவிட முடியாது. எந்தக் கோப்புகள் வேண்டுமானாலும் தொடரட்டும். அது கடந்த ஏழு ஆண்டு மட்டுமல்ல, அதற்கு முன்னாலேயிருந்த ஆட்சியிலே யிருந்து கூட தொடரட்டும். எல்லா கோப்புகளும் வரட்டும். வரும்போது அவற்றையெல்லாம் சந்திப்போம், ஓடி விட மாட்டோம். ஆகவே, கோப்புகளைக் காட்டி, எங்களுடைய வாயை அடைத்து விடலாம் என்று மட்டும் தயவுசெய்து பய முறுத்த நினைக்காதீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சில கோப்புகளைப் பார்த்ததிலேயே 140 கோடி ரூபாய்க்கு மேல் ஊழல் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பல ஊழல்களைக் கண்டு பிடித்து அரசினுடைய நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்காகத் தான் இன்னும் பல கோப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றையும் இங்கே காண இருக்கிறோம் என்று குறிப்பிட்டேன்; யாரையும் பயமுறுத்துவதற்காக அல்ல.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல திட்டங்களை

இங்கே அறிவித்தார்கள். பல மோசடிகள் நடந்திருக்கின்றன என்று இங்கே எடுத்துச் சொன்னார்கள். இன்னும் பெரிய மோசடி நீண்ட நாட்களாக நடந்து கொண்டிருக்கிறது. முன்பு முதல்வராக இருந்த நேரத்தில், இவர் குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதாகச் சொல்லி, ஜெமினி பாலத்திற்குக் கீழே இரண்டு பக்கத்திலேயும் குதிரைகளை வைத்தார்கள். இன்றையதினம் குதிரைப் பந்தயம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எப்படி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பது வேறு விஷயம். அதிலே பெரிய மோசடி நடைபெறுவதாக நம்முடைய மாநிலத்திலே யிருந்து வெளி வருகிற ஒரு பெரிய பத்திரிகையில், ஒரு வாரத் திற்கு முன்னால், 10 நாட்களுக்கு முன்னால், பெட்டிச் செய்தி வெளியிட்டிருந்தார்கள். நாளைய தினம் நடைபெற இருக்கின்ற குதிரைப்பந்தயத்தில் எந்தக் குதிரை வெற்றி பெறப் போகிறது என்பதை இன்றே நிர்ணயம் செய்து குதிரைகள் வெற்றி பெற்றுக் கொண்டிருக்கின்றன. இனிமேல் அந்த குதிரைப் பந்தயச் செய்தியை எங்கள் பத்திரிகையிலே வெளியிடப் போவதில்லை யென்று சொல்லி ஒரு பெரிய குற்றச்சாட்டைச் சுமத்தியிருக்கி றார்கள். ஏழைகள் அதிலே கசக்கிப் பிழியப்படுகிறார்கள், ஏழைகள் அதிலே மோசடிக்குள்ளாகிறார்கள். எனவே அதைப் பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏற்கனவே குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டுமென்ற முனைப்போடுதான் இந்த அரசு சட்டம் கொண்டு வந்தது. அதற்குப் பிறகு இடையிலே ஏற்பட்ட பல்வேறு நிலைகள் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு நன்றாகவே தெரியும் என்று கருதுகிறேன். நாங்கள் வந்து 20 நாள்தான் ஆகிறது. அதற்குள் இவ்வளவு விவகாரங்கள் நடைபெற்றிருக்கின்றன. இவ்வளவு பணிகளை ஆற்றியிருக்கிறோம்; இன்னும் பணிகள் ஆற்ற எங்களுக்கு ஒத்துழைப்புத் தாருங்கள், ஆற்றுகிறோம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : நிச்சயமாக எங்களுடைய ஒத்துழைப்பு இருக்கும். நடவடிக்கை எடுப்பீர்களா ? எப்பொழுது நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்றுதான் கேட்டேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவற்றையெல்லாம் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்,

திரு. பெ. சீனிவாசன்: தலைவர் அவர்களே, திரு. தங்க பாண்டியன் அவர்கள் பேசும்பொழுது அருப்புக்கோட்டை கூட்டுறவுச் சங்க ஊழல்கள் பற்றி பேசினார்கள். அதுகுறித்து அரசு விசாரணை நடத்தி, நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எல்லா பாண்டியன்கள் பேசியவையும் மனதிலே இருக்கின்றன. அவை பற்றியெல்லாம் பிறகு கவனிக்கப்படும். (சிரிப்பு).

திரு. பி. எச். பாண்டியன்: இனிமேல் நான் உங்களிடம் ஒரு ஆதாரமும் கொடுக்கமாட்டேன். நீங்கள் பேசி விடுகிறீர்கள். நீங்கள் நடவடிக்கை எடுத்தால்தான்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சில் இறுதியாக இன்னும் இரண்டு அறிவிப்புகள், இந்த மன்றம் மகிழத்தக்க அறிவிப்புகள். மக்கள் நல்வாழ்வுத் துறையைச் சீர்திருத்த வேண்டுமென்ற எண்ணம், இன்று அல்ல, கடந்த சில—5, 6 மாதங்களுக்கு முன்னால், சில மருத்துவ மனைகளுக்குச் சென்றபொழுது, மிகுந்த வேதனையான சூழ்நிலையை அந்த மருத்துவமனைகளிலே கண்டேன், ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பே, பத்திரிகைகளிலேகூட அப்பொழுது அந்தக் கருத்துக்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இப்பொழுது பொறுப்புக்கு வந்துவிட்ட காரணத்தால், நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரைச் சில மருத்துவ மனைகளுக்கு அனுப்பி, குறிப்பாக பொது மருத்துவ மனைக்கு அனுப்பி, சில விவரங்களைத் தெரிந்து வரச் சொன்னேன். அவர் தந்த செய்தியை இங்கே படிக்கிறேன். "மாண்புமிகு தமிழக முதல்வர் உத்தரவின்படி இன்று மாலை 2.15 மணிக்கு சென்னை மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த பொது மருத்துவமனையிலுள்ள இதய சிகிச்சைப் பிரிவை மேற்பார்வையிடச் சென்றிருந்தேன். அப்பொழுது நான் அங்கே கண்டறிந்த கீழ்க்கண்ட செய்திகளை இதயவலியோடு தங்களுக்குத் தருகிறேன். ரூபாய் 35 இலட்சத்திற்கு 7—1—1988-ல் வாங்கப்பட்ட Haema Camera சுமார் ஓராண்டுக் காலமாகியும் இதுவரை எங்கும் பொருத்தப்படாமல் உபயோகமின்றி ஒரு அறையில் முடங்கிக் கிடக்கிறது. அது இருதயப் பிரிவுக்குப் பயன்படக் கூடியது. 35 இலட்சத்திற்கு வாங்கப்பட்டது. ஒரு வருஷமாகப் பொருத்தப்படாமல் ஒரு அறையிலே முடங்கிக் கிடக்கிறது.

1989 பிப்ரவரி 17] [டாக்டர் மு. கருணாநிதி]

மேலும் Cathetisation Unit -ல் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள ஒரு கருவி, ஆகஸ்ட் 84-ல் வாங்கப்பட்டுள்ளது. அதில் மிக முக்கியம் எனக் கருதப்படும் Byplant என்பது கடந்த மூன்றாண்டுகளாகச் செயல்படாமல் உள்ளது.

மேலும் இதய ஓட்டத்தினைப் பதிவு செய்ய அதிலே பொருத்தப்பட்டுள்ள Recorder என்ற கருவியும், பழுதடைந்து செயல்படாமல் உள்ளது. அதனுடைய மதிப்பு மாத்திரம் சுமார் 9 இலட்சம். அதிலே விந்தை என்னவென்றால், இதைப் பழுது பார்க்க வாங்க வேண்டிய புதிய பகுதிகள் Spare Parts அந்தத் துறை கொடுத்துள்ள கணக்கின்படி 10 இலட்சம். 9 இலட்சம் கருவி, ரிப்பேர் பார்ப்பதற்கு வாங்க வேண்டிய உபகரணங்கள் 10 இலட்சம். இக் கருவியை வாங்கியதில் உள்ள முறைகேடு பற்றி கணக்கு எடுத்ததில் தெரிய வந்துள்ளது; ஆடிட்டர் அறிக்கையிலும் குறிக்கப்பட்டுள்ளது. இக்கருவியைக் கொடுப்பதற்கு மனுச் செய்த Phillips மற்றும் Simpons கம்பெனிகளில் Simpons கம்பெனிக்கு இந்தத் துறையினர் ஆணை வழங்கி உள்ளார்கள். இதனால் அரசுக்கு 3.9 இலட்சம் அதிகம் செலவாகி இருக்கிறது.

இப்படிப் பல குறைபாடுகள் பல மருத்துவ மனைகளில் இருக்கின்றன. மற்ற விஷயங்களையெல்லாம் விட முக்கியம் மக்களுடைய உயிரோடு விளையாடுகின்ற இந்த நிகழ்ச்சிகளைக் குறைக்க வேண்டுமென்பதற்காக உடனடியாக உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, மூன்று மாத காலத்திற்குள்ளாக அவர்கள் ஒரு அறிக்கையைத் தந்து, அந்த அறிக்கையின்படி இந்த அரசு மக்கள் நல்வாழ்வுத் துறையிலே செயல்பட முனைகிறது. அந்த கமிட்டிக்கு Medical Education and Hospital Improvement Advisory Committee என்று பெயர். அதில் பிரபல நரம்பியல் நிபுணர் டாக்டர் இராமமூர்த்தி அவர்கள் தலைவராகவும், இலட்சுமணசாமி முதலியாருடைய மகன் வேணுகோபால் அவர்களும், Dr. Sam Moses அவர்களும் உறுப்பினர்களாக இருந்து செயல்படுவார்கள். Health Secretary, Convenor ஆக இருந்து செயல்படுவார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு அறிவிப்பு, நம்முடைய திரு. ரமணி போன்றவர்களுக்கும் மற்றும் தொழிற் சங்கத் தலைவர்களுக்கும் பிரியமான அறிவிப்பு. மாதவரம் பால் பண்ணையில் 1980-ம் ஆண்டு ஒரு

வேலை நிறுத்தம். அது எதற்காக என்றால், மதுரையில் நடைபெற்ற பால்பண்ணைத் தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தத்திற்கு அனுதாபம் தெரிவிக்கிற வகையிலே ஒரு அடையாள வேலை நிறுத்தம். அந்த வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டவர்களையெல்லாம் அன்றிருந்த அரசு டிஸ்மிஸ் செய்துவிட்டது. அவர்கள் வழக்குக்குப் போனார்கள். நீதிமன்றம் அவர்களைச் சேர்க்க வேண்டுமென்று சொன்னது. ஆனால் இதுவரையிலே அவர்கள் சேர்க்கப்படவில்லை. அவர்களிலே பல பேர் 80-லேயிருந்து 8 வருஷம் ஆகிறது அல்லவா! பலபேர் ஆங்காங்கே சிதறிப் போய்விட்டார்கள். சில பேர் வேறு சில வேலைகளுக்குச் சென்றுவிட்டார்கள். நான் நேற்றைக்கு நம்முடைய பால் பண்ணை—அந்தத் துறையினுடைய அமைச்சரை அழைத்து அதுபற்றிப் பேசினேன். அவர்கள் கொடுத்த விவரப்படி இப்பொழுது அதிலே 489 தொழிலாளர்கள்தான் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். 489 இருந்தாலும் சரி. 500 இருந்தாலும் சரி, அவர்களெல்லாம் திரும்பவும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியையும் தெரிவிக்கின்றேன்.

திரு. ஆர். சிங்காரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நடந்த விவாதத்தில் நான்தான் எம்.ஜி.ஆர். என்று முன்னாள் பேரவைத் தலைவரவர்கள் . . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது அலுவலில் இருக்கிற செய்தியைத் தவிர வேறு எந்தச் செய்தியும் ஒழுங்குப் பிரச்சினைக்கு உட்படாது.

இத்துடன் விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் பொன். விஜயராகவன், எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், ஏ. வெங்கடேஸ்வர தீட்சிதர் ஆகியவர்களின் திருத்தங்கள் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

திரு. சோ. அழகர்சாமி இருக்கையில் இல்லாததால், அவருடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

TRUTH ALONE TRIUMPHS

1989 பிப்ரவரி 17]

(பிற்பகல் 1-10)

பேரவை முன்னுள்ள கேள்வி :

ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப் பெற வேண்டும் :

"1989 ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 11 ஆம் தேதியன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் நாளை (18—2—1989) காலை 9.00 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-11 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

2. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1986-87 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (சிவில்). [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (ஆங்கிலம்).

3. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1986-87 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (வணிகம்). [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (ஆங்கிலம்).

4. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1986-87 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (வருவாய் வரவினங்கள்), [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்).

1989 பிப்ரவரி 17]

(பிற்பகல் 1-10)

பேரவை முன்னுள்ள கேள்வி :

ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப் பெற வேண்டும் :

"1989 ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 11 ஆம் தேதியன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் நாளை (18—2—1989) காலை 9.00 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-11 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

2. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1986-87 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (சிவில்). [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (ஆங்கிலம்).

3. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1986-87 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (வணிகம்). (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (ஆங்கிலம்).

4. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1986-87 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (வருவாய் வரவினங்கள்), [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்).

[1989 பிப்ரவரி 17

5. தமிழ்நாடு அரசின் 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் கணக்குகள், [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்).

6. தமிழ்நாடு அரசின் 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள், [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

3. 1988 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (அறுபத்தி இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் மீதான செய்தி குறித்து மாநிலங்களவை கூடுதல் செயலாளரிடமிருந்து வரப் பெற்ற 1—2—1989 ஆம் நாளிட்ட ஆர்.எஸ். 1/67/88-B எண்ணுள்ள கடிதத்தின் நகல்.

4. 1988 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (அறுபத்தி இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (மக்களவையில் அறிமுகப்படுத்தப் பெற்றவாறு).

5. 1988 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (அறுபத்தி இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (இரு அவைகளிலும் நிறைவேற்றப் பெற்றவாறு).

6. 1988 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (அறுபத்தி இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் மீதான மக்களவை நடவடிக்கை குறிப்புகள்.

7. 1988 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (அறுபத்தி இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் மீதான மாநிலங்களவை நடவடிக்கை குறிப்புகள்.